புதுச்சேரி மாநிலச்

செப்பேடுகள்

- ஓர் அறிமுகம்

புலவர் ந.வேங்கடேசன்

புதுச்சேரி மாநிலச் செப்பேடுகள்

ஓர் அறிமுகம்

புலவர் ந. வேங்கடேசன்

திருமுடி பதிப்பகம்
40, கிழக்குச் சன்னதித் தெரு,
வில்லியனூர், புதுச்சேரி - 605 110

முதற்பதிப்பு : 2009

விலை : ரூ. 70/-

கணினி . ஜாஸ்மின் கணினி
சேலையூர், சென்னை - 73
044-223 95 223 / 98423 74750

அச்சு . ஜூபிடர் ஆப்செட் பிரிண்டர்ஸ்

உள்ளே

முன்னுரை 4

செப்பேடுகள் ஓர் அறிமுகம் 7

செப்பேடுகள் முப்பது 10

பல்லவர் செப்பேடு முப்பது 18

சோழர் செப்பேடுகள் 29

பாண்டியர் செப்பேடுகள் பத்து 30

வெளிவந்துள்ள செப்பேடுகள்

1. திருமலை நாயக்கர் செப்பேடுகள் 36
2. சேதுபதி செப்பேடுகள் 36
3. கொங்கு வேளாளர் செப்பேடுகள் 37
4. தமிழகச் செப்பேடுகள் தொகுதி I 37
5. தருமை ஆதீனச் செப்பேடுகள் 38
6. திருவாவடுதுறை ஆதீனச் செப்பேடுகள் 39
7. ஆவணத்தில் செப்பேடுகள் 43
8. நந்திவர்ம பல்லவனுடைய காசாக்குடிச் செப்பேடுகள் 47
9. மேல் கசாக்குடிச் செப்பேடுகள். 53
10. கசாக்குடிச் செப்பேடுகள் 90
11. நிருபதுங்கவர்மனுடைய பாகூர் செப்பேடுகள்.....102
12. பாகூர் செப்பேடுகள் 123
13. பட்டயத்தில் உள்ள சமக்கிருதப் பாடல்களின் பொருள் சுருக்கம் 128
14. வில்லியனூர் செப்பேடு 130

நூலாசிரியரைப் பற்றி 138

முன்னுரை

செப்பேடுகள் உலக நாடுகளில் இருப்பதற்கும், தமிழ் மாநிலச் செப்பேடுகளுக்கும் வேறுபாடுகள் உள்ளன.

தமிழகச் செப்பேடுகளில் அரசரின் மரபுவழியைக் கூறி, அவர்கள் செய்த அறக்கொடைகளைத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளது சிறப்பாகும்.

பிற்காலச் செப்பேடுகளில் இன்னார் இதற்காக அறக்கொடை நல்கினர் என்று சுருக்கமாக இருக்கும்.

இப்போது தொல்பொருள் ஆய்வில் சிறந்த தொண்டாற்றிய அறிஞர்களுக்குச் செப்புப் பட்டயம் வழங்குகின்றனர்.

இன்று செப்பேடுகள் வெளியிடுவதை விடுத்து இறைவர்களுக்குரிய சக்கரங்களைச் செப்பேட்டில் வரைந்து அவற்றை வழிபடும் வழக்கம் உள்ளது.

சிலர் மந்திரங்களைச் செப்பேட்டில் வரைந்து தாயத்துப் போன்றவற்றில் வைத்து அதை அணிகின்றனர்.

இந்நூலுள், நந்திவர்மப் பல்லவ மல்லனின் காசாக்குடி செப்பேடுகளாகப் பதினொரு ஏடுகள் காட்டப் பெற்றுள்ளன. கி.பி. 1879ஆம் ஆண்டில் நிலத்தடியிலிருந்து இது கிடைத்தது.

இதை ஜுல்ஸ் தேலா ஃபோன் (Mons Jules de la Fon) என்ற பிரெஞ்சு அறிஞர் வெளியுலகிற்கு அறிவித்தார். இதனை டாக்டர் 'ஹுல்ஷ்' என்பவர் தென்னிந்தியச் சாசனங்கள் தொகுதி இரண்டு, மூன்றாம் பாகத்தில் மைப் பிரதியோடு வெளியிட்டுள்ளார். இச்சாசனம் இப்போது சென்னை அருங்காட்சியகத்தில் காப்பாக வைக்கப்பெற்றிருக்கிறது.

முதல் ஏடும் இறுதி ஏடும் ஒரு பக்கம் மட்டுமே பொறிப்பு உள்ளது. ஏனைய ஒன்பது ஏடுகளில் இருபுறமும் எழுத்துக்கள் உள்ளன. சாசனம் இருபது பக்கங்களில் அமைந்துள்ளது.
'ஹுல்ஷ்' எனும் தொல்லியல் அறிஞர்க்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அடுத்து, நிருபதுங்கவர்மனுடைய பாகூர்ச் செப்பேடுகள் 5 ஏடுகளைப் பொறித்துள்ளனர். இச்சாசனத்தை கி.பி. 1879 ஆம் ஆண்டில் ஜுல்ஸ் தெலா ஃபோன் என்ற பிரெஞ்சு அறிஞரே கண்டுபிடித்தார். இச்செப்பேடு இப்போது பாரீசு நகரில் தேசிய நூலகத்தில் வைக்கப் பெற்றுள்ளது.

இச்சாசனத்தை, தென்னிந்தியச் சாசனத் தொகுதி இரண்டில் 513-517 பக்கங்களில் வெளியிட்டுள்ளார். 1917ஆம் ஆண்டில் அ. கோபிநாதராவ் அவர்கள் இதன் சமஸ்கிருதப் பகுதியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். முவோ துய்ப்ராய் எழுதிய பல்லவர் வரலாற்றில் இதைச் சேர்த்துள்ளார்.

வில்லியனூர்ச் செப்பேட்டு வாசகத்தைச் செப்பேட்டில் உள்ளது போன்று 2009 ஆம் ஆண்டு சூலை 'ஆவணம்' நூலில் வெளியிட்டேன். இப்போது, 'புதுச்சேரி மாநிலச் செப்பேடுகள்' எனும் நூலில் சேர்த்துள்ளேன். 'ஆவணம்' தொகுப்பாசிரியர் வெ. வேதாசலம் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாகூர் செப்பேட்டின் மைப்பிரதியைப் பாரீசு நகரில் உள்ள தேசிய நூலகத்திலிருந்து கொண்டுவந்து தந்துதவிய புதுவை டாக்டர் ந. முருகேசனார்க்கும் (மேனாள் இணை இயக்குநர் கல்வித்துறை) அவருடைய திருமகனார் மு. கோவிந்தப்பிள்ளை அவர்கட்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வில்லியனூர்ச் செப்பேட்டைப் பார்த்து எழுதிக்கொள்ள அனுமதித்த வரதராசு நாயக்கர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவற்றுடன், திருப்பனந்தாள் காசி மடத்துச் செப்பேடுகள் (-1999), திருவாவடுதுறை ஆதீனச் செப்பேடுகள் (-2000), தமிழகச் செப்பேடுகள், கொங்குவேளாா் செப்புப் பட்டயங்கள் (-2007) மற்றும் 'ஆவண'ங்களில் வெளிவந்துள்ள செப்பேடுகளின் குறிப்புகள் திரட்டித் தரப்பெற்றுள்ளன. மேலே கூறிய அனைத்துச் செப்பேடுகளை வெளியிட்ட அறிஞர் பெருமக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதில் பெரிதும் மகிழ்கின்றேன்.

செப்பேட்டில் உள்ள வடமொழி எழுத்துக்களைத் தமிழ் எழுத்தாக்கத்திற்குத் துணை நின்ற சத்யோஜாதசிவ ந. சம்பந்த சிவாச்சாரியார் அவர்களுக்கும், திருநாடு அலங்கரிக்கும் V. சுப்ரமணிய அய்யர் அவர்களுக்கும் என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எப்போதும் போல் இந்நூலைப் பெருமுயற்சியுடன் வெளியிடும் எதிர்நீச்சல் ஏந்தல் வெள்ளையாம்பட்டு சுந்தரம் அவர்களுக்கும் அவரின் திருமகன் சு. புகழேந்திக்கும், அச்சு ஊழியர்களுக்கும் மனமுவந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன். திருநாடு அலங்கரிக்கும் திருமுடி சேதுராமன் அவர்களுக்கும், ஒருசாலை மாணக்கராகிய பாகூர் புலவர் சு. குப்புசாமிக்கும் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவ்வப்போது ஊக்க உரைகள் நல்கிடும் நண்பர்கள் பலர்க்கும் டாக்டர் சோ. முருகேசனார் அவர்களுக்கும், டாக்டர் இராச. திருமாவளவனார்க்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இத்துறையில் உள்ளம் செல்லத் துணை நின்ற இறையருளை எண்ணாமல் இருக்க இயலாது.

வில்லியனூர் **ந. வேங்கடேசன்**
புதுச்சேரி

செப்பேடுகள் ஓர் அறிமுகம்

தமிழ்நாட்டில் எழுதப்பெறும் பொருள்களாக ஓடு, கல், ஓலை, உலோகம், மரம், சங்கு, சுடுமண், துணி, காகிதம் எனப் பலவகைப் பொருட்கள் பயன்படுத்தப் பெற்றுள்ளன.

இவற்றில் கல், செம்பு, ஓலை ஆகியவற்றின் பயன்பாடு மிகுதியாகும். அவ்வகையில் தமிழகச் செப்பேடுகளின் எண்ணிக்கையும் உலக அளவில் முதலிடம் பெறுகிறது.

எண்ணிக்கையில் மட்டுமல்ல, அவை வெளிப்படுத்தும் வரலாறு, பண்பாடு, கலை, சமுதாயப் பொருளாதாரச் செய்திகளும் ஆகும்.

பொதுவில் செப்பேடுகள் அரசியல், சமுதாயம், பொருளாதாரம் மொழிநடை எனப் பன்முக ஆய்வுகளுக்குத் தரவாகத் திகழ்கின்றன. செப்பேடு முறையான ஆவணமாகப் பயன்பட்டது.

செப்பேட்டில், அரச மரபு, மெய்க்கீர்த்தி, கொடை எப்போது கொடுக்கப் பெற்றது - உரிமையுடையவர் யார் என்பதையும், செப்பேட்டில் உள்ள அறத்தைத் தவிர்த்தால் வரும் கேடும், காத்தார் பெறும் பயனும் சொல்லப் பெற்றிருக்கும்.

நம் நாட்டுச் செப்பேடுகள் அறத்தை அடிப்படையாகக் கொண்டவை.

இந்திய நாட்டில் இராஜஸ்தானில் அஜ்மீர் அருங்காட்சியகத்தில் வடநாட்டு அரசர்கள் வழங்கிய கொடைகளைப் பற்றிக் கூறும் செப்பேடுகள் உள்ளன.

ஒரிசாவிலும், இமாசலப் பிரதேசத்திலும் செப்பேடுகள் உள்ளன.

மைசூர் அருங்காட்சியகத்தில் செப்பேடுகள் உள்ளன. சென்னை, கேரளா, நாக்பூர் அருங்காட்சியகங்களிலும் செப்பேடுகள் உள்ளன.

'பென்சில்வேனியா' பல்கலைக் கழக அருங்காட்சியகத்தில் இருக்கும் செப்பேடு செங்கடலிலிருந்து எகிப்து பாலைவனம் வழியாகச் செல்லும் வழியைச் சொல்கிறது.

பாரிசு, பிலிப்பைன்ஸ், பிரிட்டிஷ், சீனா, ஸ்பெயின் போன்ற நாடுகளிலும் செப்பேடுகள் இருக்கின்றன.

மாஸ்கோவில் உள்ள 'கிரேமிலின்' அருங்காட்சியகத்தில் உள்ள செப்பேடு பைபிளில் வரும் கதையைச் சொல்லுகிறது.

இந்தியாவில் உள்ள செப்பேடுகள்

தமிழ்நாட்டில்	= 489
ஆந்திராவில்	= 289
கர்னாடகா	= 162
மகாராட்டிரம்	= 168
குஜராத்	= 112
ஒரிசா	= 105
மத்திய பிரதேசம்	= 73
மேற்கு வங்கம்	= 52
இராஜஸ்தான்	= 50
பீகார்	= 32
அசாம்	= 11
கேரளா	= 9
மற்ற மாநிலங்கள்	= 9
புதுச்சேரி	= 3

தொல்லியல் துறை இந்தியா

எண்.79 கரந்தைத் தமிழ்ச் சங்கம் செப்பேடுகள். 1984 வெளியீடு

K.G. கிருஷ்ணன் இராசேந்திரன் I.

கரந்தைத் தமிழ்ச் சங்கம் செப்பேடுகள் – 'தமிழ்ப் பொழில்' தொகுதி 33. பக்கம் 65 முன்பு வெளிவந்துள்ளது

மொத்தம் 57 ஏடுகள்

செப்பேடுகளில் வரும் அரசு அதிகாரிகள்

உடன் கூட்டம் - கருமம் ஆராயும்

- விடயில் (கருமம் ஆராயும்)
  - புறவுவரி திணைக்களத்துக் கண்காணி
    - புறவுவரி திணைக்களம்
      - வரிப்பொத்தகம்
- ஓலைநாயகம்
  - திருமந்திர ஓலை

முகவெட்டி
|
வரிப்பொத்தகக்கணக்கு
|
வரியிலிடு
|
பட்டோலை

இவ் இரு குழுக்களும் கருமம் ஆராயும்.

உத்தமசோழன் - ஆணத்தி, வாய்கேழ்வி, ஓலை எழுதும் ஓலைநாயகன்.

செப்பேடுகளில் நிலங்கள் வேலி, மா, காணி, முந்திரிகை என்ற வழக்கு இருந்துள்ளது.

1 வேலிக்கு 20 மா சமம்.
1 மா 4 காணி சமம்
1 காணி 4 முந்திரிகை

என்னும் நில அளவு கணக்கு பற்றிய செய்தியைக் காணலாம்.

செப்பேடுகள் கிடைத்த இடங்களை வைத்தோ இப்போது அவை இருக்கும் இடங்களை வைத்தோ செப்பேடுகள் அழைக்கப்படுகின்றன.

இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட சோழர் செப்புப் பட்டயங்களின் சுருக்கமான வரலாற்றை அறிந்து கொண்டால் எசாலம் செப்பேட்டின் சிறப்பு தெள்ளிதின் விளங்கும்.

செப்பேடுகள் முப்பது

1. உதயேந்திரம் செப்பேடு

முதலாம் பராந்தகனாகிய மதிரை கொண்ட கோப்பரகேசரியின் 15 ஆம் ஆட்சியாண்டில் வீர நாராயணச்சேரி என்ற பிரமதேயம் உருவாக்கப்பட்டு, தானம் தந்த விவரம் உதயேந்திரம் செப்பேட்டில் உள்ளது.

சோழர்களின் மரபுவழியும் பராந்தகனின் சிற்றரசனான இரண்டாம் பிருதிவிபதியின் முன்னோர் பட்டியலையும் இதில் காண்கிறோம்.

தொடக்கத்தில் இச்செப்பேட்டைக் கங்கர் எனும் அரச மரபினரின் செப்பேடாக அறிஞர் கருதி வந்தனர். திரு. நடன. காசிநாதன் அவர்கள், இதனைச் சோழர் செப்பேட்டுப் பட்டியலில் சேர்த்தார்கள்.

மதிரை என்ற சொல் பிழையா எனின் இல்லை. மதிரை என்னும் சொல் மதுரையைக் குறிக்கும்.

புகலூர் (புகழூர்) கல்வெட்டில் 'மதிரை' என்ற சொல் பொறிக்கப்பட்டது.

'மதுகமதிரா முதலா' (பெருங் - வத்தவ 11 - 87) என்று 'பெருங்கதை' கூறும்போது, மதிரை என்பது கள் என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது.

சூடாமணி நிகண்டும் இப்பொருளைக் குறிப்பிடுகிறது.

மதுரை என்ற பிற்காலச் சொல் கள்ளுடன் தொடர்புடையது.

எனவே மதிரை என்பது எழுத்துப் பிழையன்று. இதேபோல் செப்பேடுகளில் பிழையுடன் கூடிய சொற்கள் போல் தோன்றும் பெருஞ்சொற்களையும் கூர்ந்து ஆய்வு செய்யவேண்டும்.

வீரநாராயணன் என்னும் பெயர் முதல் பராந்தகனுக்கு உரியதாகும்.

சோழர்களின் செப்பேடுகளில் இதுவே காலத்தால் முந்தையது எனலாம். இச் செப்பேட்டில் மதிரை கொண்ட கோப்பரகேசரி என்று வருகிறது; கல்வெட்டுகளிலும் இச்சொற்றொடர் ஆளப்பட்டுள்ளது.

2. வேலஞ்சேரிச் செப்பேடு

திருத்தணிகை அருகில் உள்ள வேலஞ்சேரி என்ற சிற்றூரில் கண்டெடுத்த இரு செப்பேடுகளில், முதலாம் பராந்தகனுக்குரிய செப்பேடு ஒன்று. இது சங்க காலத்தில் செங்கோலாட்சி புரிந்த கரிகால்வளவன் இமயமலையில் புலிச் சின்னம் பொறித்த அரிய சம்பவத்தைக் குறிப்பிடும் முதல் செப்பேடு எனலாம். காஞ்சியில் அரண்மனை இருந்ததை இச்செப்பேடு கூறுகிறது.

விசயாலயன் தந்தையின் பெயர் ஒற்றியூரன் என்றும் செப்பேடு குறிப்பிடுகிறது.

கன்னியாகுமரி, இராமேஸ்வரம், திருவரங்கம் ஆகிய ஊர்களில் பராந்தகன் 'துலாபாரம்' செய்துள்ளான் என்றும் செப்பேடு மொழிகிறது.

இந்தச் செப்பேட்டைக் கண்டுபிடித்த பெருமை திரு. நடன. காசிநாதன் அவர்களைச் சாரும்.

3. அன்பில் செப்பேடு!

அன்பில் என்னும் ஊர் திருச்சி மாவட்டத்தில் உள்ளது.

அன்பிலைச் சேர்ந்த நாராயண அநிருத்த பிரம்மாதி ராஜனுக்கு ஏகபோக பிரம்மதேயமாகத் தானம் தந்த செய்தி அன்பில் செப்பேட்டில் உள்ளது. இது சுந்தரசோழன் காலத்தது ஆகும்.

காவிரியின் இரு மருங்கிலும் முதலாம் ஆதித்தன் சிவாலயங்களை எழுப்பினான் என அன்பில் செப்பேடு குறிப்பிடுகிறது. இது ஏழு ஏடுகளைக் கொண்டது.

4. திருச்செங்கோடு பட்டயம் - 1

திருச்செங்கோட்டிலிருந்து இரண்டு பட்டயங்கள் கண்டெடுக்கப்பட்டன. முதலாவது பட்டயம் சுந்தர சோழனுடைய 10ஆம் ஆட்சியாண்டில் வெட்டப்பட்டது. இது இரு பகுதிகளைக் கொண்டது.

முதல்பகுதி மழவரையன் சுந்தரசோழன் என்பான் தூசியூர்நகரத்தாரிடமிருந்து வரி வசூலிப்பது குறித்தும், வரி தராதவர் மீது நந்திபுரத்தில் வழக்கில் உள்ளவாறு தண்டம் வசூலிப்பது குறித்தும் குறிப்பிடுகிறது.

இரண்டாம் பகுதி, **கொல்லிமழவன் பிரதிகண்டன் சுந்தரசோழன்** என்பவன், தன் தந்தை ஈழப் போரில் இறந்துவிடவே நீர் வேட்கையைத் தணிவிப்பதற்குத் தூசியூர் திருக்கற்றளி பரமேஸ்வரருக்கு நிலக்கொடை அளித்ததைக் கூறுகிறது.

செப்பேட்டில் இராஜகேசரி என்றிருப்பதை வைத்து இச்செப்பேடு முதலாம் இராஜராஜன் வெளியிட்டது என்று வரலாற்றறிஞர் சிலர் கருதினர். செப்பேட்டில் வரும் பெயர், மற்றும் எழுத்தமைதியை வைத்து இச்செப்பேட்டை சுந்தரசோழன் வெளியிட்டிருக்க வேண்டும் என்று திரு. நடன. காசிநாதன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

5. திருச்செங்கோடு பட்டயம் - 2

இச்செப்பேடு, பழைய செப்பேட்டை அழித்துப் புதிதாக உருவாக்கப்பட்டதாகும். மூன்று ஏடுகளை உடையது. கொல்லி மழவன் **ஒற்றியூர் பிரதி கண்ட வர்மன்** என்பான், தூசியூர் கோயிலுக்கு நிலம் வழங்கியதை இச்செப்பேடு குறிப்பிடுகிறது.

6. பள்ளங்கோயில் செப்பேடு

முழுமையாகக் கிடைக்காத ஒரு செப்பேடு பள்ளங்கோயில் செப்பேடு. இச்செப்பேடு வேதாரண்யத்தில் இருந்து பெறப்பட்டதாகும். இப்பொழுது தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையிடம் உள்ளது.

சுந்தர சோழப் பெரும்பள்ளி அமைத்து நிலத்தானம் செய்த விவரம் இதில் உள்ளது. 13 ஆம் எண் ஏடு முதல் 23ஆம் எண் ஏடு வரை உள்ள 11 ஏடுகளே உள்ளன.

7. சென்னை அருங்காட்சியகச் செப்பேடு

உத்தம சோழனுடைய செப்பேடு காஞ்சியில் உள்ள அரண்மனையிலிருந்து அமைச்சரின் வேண்டுதலுக் கிணங்கவே, கச்சிப்பேட்டு விஷ்ணுக் கோயிலுக்குத் தானம் வழங்கியதை இதில் காண்கிறோம். கோயிலில் இருந்து கடன் பெற்றவர் தரவேண்டிய வட்டி வீதமும் இதில் காண்கிறோம்.

8. பெரிய லெய்டன் செப்பேடு

ஐரோப்பிய கண்டத்தில் ஹாலந்து என்ற நாட்டில் லெய்டன் என்ற நகர் உள்ளது. இங்குள்ள அருங்காட்சியகத்தில் சோழர் காலத்தைச் சேர்ந்த இரண்டு செப்பேடுகள் உள்ளன. அவை 21 ஏடுகளைக் கொண்டவை.

அவ்விரண்டில் முதலாம் இராஜராஜனால் வெளியிடப்பட்ட பல ஏடுகளை உடைய செப்பேடு பெரிய லெய்டன் செப்பேடு என அழைக்கப்படுகிறது.

பராந்தக சோழன் தில்லையில் சிவன் கோயிலுக்குப் பொன் வேய்ந்த செயலை இச்செப்பேடு குறிப்பிடுகிறது.

மன்னன் தஞ்சையில் இராஜாஸ்ரியன் என்னும் அரண்மனையின் ஒரு பகுதியில் அமர்ந்திருந்து நாகைப் புத்தப் பள்ளிக்குத் தானம் வழங்கியதை இதில் காண்கிறோம்.

9. திருவாலங்காடு செப்பேடு

முதலாம் இராஜேந்திர சோழன் வெளியிட்ட திருவாலங்காடு செப்பேடு, மிகப் பெரிய செப்பேடுகளில் ஒன்றாகும். முடிகொண்ட சோழபுரத்து வீட்டின் உள்ளால் உள்ள கருமாளிகை மதுராந்தக தேவனில் தெற்கில் மறைவிடத்தில் மன்னன் எழுந்தருளி இருந்தபோது வழங்கிய ஆணையே இது.

திருவாலங்காடுடைய மகாதேவர்க்கு நிலம் வழங்கிய விவரத்தை இதில் காண்கிறோம். திருவாலங்காடு, செங்கை மாவட்டத்தில் உள்ளது. இது பாடல் பெற்ற தலமாகும். இச்செப்பேடு 31 ஏடுகளைக் கொண்டது.

அம்மனுக்கு வழங்கப்பட்ட தானம் குறித்த ஏடுகள் பிற்காலத்தவையாகும். பூமியைத் தோண்டும்போது இச்செப்பேடு கிடைத்தது.

10. கரந்தைச் செப்பேடு

முதலாம் இராசேந்திரன் தன் தாயின் பெயரால் திரிபுவன மாதேவி சதுர்வேதி மங்கலம் என்னும் அக்கிரகாரத்தை உருவாக்கி அங்கு 1030 பிராமணர்களுக்கு 57 ஊர் நிலங்கள் வழங்கியதை இச்செப்பேடு கூறுகிறது.

பராந்தகன், வீர நாராயண அக்ரஹாரம் என்னும் ஊரை ஏற்படுத்தியதுடன் ஏரி ஒன்றை உருவாக்கியதையும் இச் செப்பேடு கூறுகிறது.

கண்டராதித்தனையும் உத்தம சோழனையும் இச்செப்பேடு கூறாமல் விட்டுள்ளது.

முதலாம் இராஜராஜன் சூளுரைத்ததற் கிணங்க "மான்ய கேட்டா"வை வென்று சபதத்தை இராஜேந்திரன் நிறைவேற்றினான் என்றும் இச்செப்பேடு கூறுகிறது.

"**நமக்கு யாண்டு எட்டாவது நாள் நூற்றேழினால் நாம் பெரும்பற்றப் புலியூர் விட்ட வீட்டின் உள்ளால் மாளிகையின் கீழைமண்டபம் இராஜேந்திர சோழ பிரமாதி ராஜனில் நாம் உண்ணாவிருந்த**" என்று செப்பேடு சொல்கிறது.

செப்பேட்டிலுள்ளபடியே சிதம்பரத்தில் ஓர் அரண்மனை சோழர் காலத்தில் இருந்துள்ளது தெளிவாகிறது. கி.பி. 18ஆம் நூற்றாண்டில் வெட்டப்பட்ட மராட்டியர் கல்வெட்டும் சிதம்பரத்தில் அரண்மனை இருந்ததைச் செப்புகிறது.

தஞ்சை – அம்மாப்பேட்டை அருகிலுள்ள புத்தூர் என்ற ஊரில் பழைய கிணற்றில் இருந்து கண்டெடுக்கப்பட்ட இச்செப்பேடு, பின் கரந்தைத் தமிழ்ச் சங்கத்திடம் சேர்ப்பிக்கப்பட்டது. மதுரைப் பல்கலைக்கழகம் சிறந்த முறையில் தமிழில் இதை நூலாக வெளியிட்டுள்ளது.

11. திருக்களர் செப்பேடு - 1

முதலாம் இராசேந்திரனின் 18ஆம் ஆட்சியாண்டில் வெட்டப்பட்ட ஒரு செப்பேடு திருக்களர் என்ற ஊரில் வெளிப்படுத்தப்பட்டது. ஓர் ஏடு மட்டும் இருபுறமும் எழுதப்பட்டுள்ளது. திருக்களர் மகாதேவர் கோயிலுக்கு அளித்த நன்கொடையை இது குறிப்பிடுகிறது.

பல ஏடுகளுடன் வெளியிடப்பட்ட சோழர் செப்பேடுகளில் இச்செப்பேடு முதன் முதலில் வெளியிடப்பட்ட சிறிய செப்பேடு எனலாம். இதில் வடமொழிப் பகுதி கிடையாது.

தொடக்கத்தில் உள்ள செப்பேடுகள் வடமொழியுடன் தமிழையும் கொண்டவையாகும். பாண்டியர் செப்பேடுகளும் இரு மொழியுடன் கூடிய செப்பேடுகளாகவே அமைந்துள்ளன.

12. திருக்களர் செப்பேடு - 2

இது முதலாம் இராஜாதி ராஜன் வெளியிட்ட செப்பேடு. இதுவும் ஒரே ஏட்டினால் ஆனது. கோயிலில் பூசை செய்து வந்த பிராமணருக்கு நிலத்தானம் வழங்கியதை இதில் காண்கிறோம்.

13. சிறிய லெய்டன் செப்பேடு

இச்செப்பேடு மூன்று ஏடுகளைக் கொண்டது. முதலாம் குலோத்துங்கன் காலத்தது. நாகை பௌத்தப்பள்ளிக்கு வழங்கிய தானத்தை இது குறிப்பிடுகிறது.

14. திருக்களர் செப்பேடு - 3

முதலாம் குலோத்துங்கன் 28 ஆம் ஆட்சியாண்டில் வெளியிட்ட திருக்களர் செப்பேடு, திருக்களருடைய மகாதேவர், அமாவாசைதோறும் அமுது செய்தருளவும் அரவாபரணதேவர் திருவிழாவிற்கும் பிறவற்றிற்குமாகத் தானம் வழங்கப்பட்டுள்ள விவரத்தையும் குறிப்பிடுகிறது,

15. திருக்களர் செப்பேடு - 4

திருக்களர் செப்பேடு மூன்றில், ஒரு பக்கம் முதலாம் குலோத்துங்கன் ஆணையும் மறுபக்கம் இரண்டாம் இராசராசன் தானம் குறித்த ஆணையும் கொண்டுள்ளது. ஒரே செப்பேட்டில் இரு ஆணைகள் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு மன்னர்கள் பிறப்பித்தமையை அறிகிறோம்.

16. திருக்களர் செப்பேடு - 5

இச்செப்பேடு மூன்றாம் குலோத்துங்கன் வெளியிட்டது. இரு ஏடுகளைக் கொண்டது. கோயிலில் இருந்த அணிகலன்களை இச்செப்பேடு விரிவாகக் குறிப்பிடுகிறது.

17. சராலா செப்பேடு

ஆந்திராவில் சித்தூர் அருகே உள்ள புங்கனூரில் இருந்து கண்டெடுக்கப்பட்டது இது. சராலா செப்பேடு என வழங்கப்படுகிறது. இது ஏழு ஏடுகளைக் கொண்டது.

வீரராஜேந்திரன் ஏழாம் ஆட்சியாண்டில் உத்தராயண சங்கராந்தி அன்று பிராமணர்களுக்குச் சேராம் என்னும் மதுராந்தக சதுர்வேதி மங்கலத்தைத் தானமாக வழங்கியமை பற்றியது இதில் உள்ளது.

கன்னியாகுமரியில் உள்ள வீரராஜேந்திரன் கல்வெட்டில் வரும் சோழ மரபுப்பட்டியல், இதிலும் வரிக்கு வரி மாறுபடாமல் வந்துள்ளது. காஞ்சியில் உள்ள திருவேகம்பமுடையார் கோயில் திருக்காவணத்து திருவேகம்ப மண்டபத்தில் மன்னன் எழுந்தருளியிருந்தபோது இப்பட்டயம் வெளியிடப்பட்டது.

அரண்மனையில் மட்டுமன்றிக் கோயிலிலும் சோழ மன்னர்கள் தங்கி, ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

மேற்கண்ட பதினேழு செப்பேடுகள் கிடைத்தது போலவே எசாலம் செப்பேடும் எதிர்பாராமல் கிடைத்த ஒன்றாகும். தேடாமல் கிடைத்த செல்வம்! இதுவரை கண்டதிலிருந்து எசாலத்தில் கண்டெடுத்த செப்பேட்டுத் தொகுதி பதினெட்டாவது என்பது கருதத்தக்கது.

செப்பேடுகள்

அறிமுகம்

செப்பேடுகளிலே முதலில் மங்கல மொழியும், வாழ்த்துச் செய்யுளும், காணப்பெறும். பிறகு அறக்கொடை வழங்கிய அரசனின் வழிமுறைகள், முன்னோர்கள் ஆற்றிய வீரச் செயல்கள் விரிவாகக் கூறப் பெற்றிருக்கும்.

பிறகு ஒருவனுடைய விண்ணப்பித்தின் மீது மற்றோர் அதிகாரியை ஆணத்தியாகக் கொண்டு அரசன் வழங்கிய தானமும் அதன் பயன்களும் விவரிக்கப் பெற்றிருக்கும்.

அறத்தைப் பெறுபவர்களுடைய விவரங்கள் கொடுக்கப் பெற்றிருக்கும். இறுதியில் அதிகாரிகள் கையொப்பமும், அவ் அறத்தைக் காப்பார் அடையும் பயனும், காவாதார் பெறும் துன்பமும் சொல்லப் பெற்றிருக்கும்.

பல சமயங்களில் அறக் கொடையை எழுதியவர் பெயரும், செப்பேட்டை வெட்டிய சிற்பியின் பெயரும்கூடச் சொல்லப் பெற்றிருப்பது உண்டு. சில சமயங்களில் அரசன் கையொப்பமும் காணப்பெறும்.

பழைய காலத்துச் செப்பேட்டு சாசனங்களுக்கும், சமீப காலத்தில் எழுதப் பெற்ற செப்பேடுகளுக்கும் வேறுபாடுகள் உள்ளன. பழமை வாய்ந்த சாசன வாசகம் சுருக்கமாக இருக்கும். நாளாக ஆக அவை நீண்டுவிட்டன.

டச்சுக்காரர்களுக்கு 1658இல் தஞ்சை விசயராகவ நாயக்கர் அளித்த பட்டயமும், 1676இல் ஏக்கோஜி அளித்த பட்டயமும் வெள்ளித் தகடுகளில் பொறிக்கப் பெற்றிருந்தன. அவை ஜாக்கர்த்தாவின் பொருட்காட்சிச் சாலையில் இருக்கின்றன. (தென்னிந்திய வரலாறு - பக்கம் - 26)

பல்லவர் செப்பேடுகள் முப்பது

1. பள்ளன் கோயில் செப்பேடுகள்
2. கூரம் செப்பேடுகள்
3. உன்ன குரவயபாளையம் செப்பேடுகள்
4. ரேயூருச் செப்பேடுகள்
5. ராயக் கோட்டைச் செப்பேடுகள்
6. உதயேந்திரம் செப்பேடுகள் I
7. உதயேந்திரம் செப்பேடுகள் II
8. காசாக்குடிச் செப்பேடுகள்
9. புல்லூர்ச் செப்பேடுகள்
10. தண்டந்தோட்டம் செப்பேடுகள்
11. பட்டத்தாள் மங்கலம் செப்பேடுகள்
12. வேலூர்ப் பாளையம் செப்பேடுகள்
13. பாகூர்ச் செப்பேடுகள்
14. ஓங்கோடு செப்பேடுகள் I
15. ஓங்கோடு செப்பேடுகள் II
16. உருவப் பள்ளி செப்பேடுகள்
17. மாங்களூர்ச் செப்பேடுகள்
18. பீகிரச் செப்பேடுகள்
19. நெடுங்கராயச் செப்பேடுகள்
20. வேசந்தச் செப்பேடுகள்
21. விழவெட்டிச் செப்பேடுகள்
22. செந்தலூர்ச் செப்பேடுகள்
23. தர்சி உதிரிச் செப்பேடுகள்
24. சுராச் செப்பேடுகள்
25. மயித வோலுச் செப்பேடுகள்
26. ஹீரஹடஹள்ளிச் செப்பேடுகள்
27. குணபதேயம் செப்பேடுகள்
28. ஹொஸக்கோட்டை செப்பேடுகள
29. ஹல்லகெரே செப்பேடுகள்
30. ஹால்திபூர் செப்பேடுகள்

1. சிம்மவர்மனுடைய பள்ளன்கோயில் செப்பேடுகள்

இது தஞ்சை மாவட்டம் திருத்துறைப்பூண்டி வட்டம் திருத்துறைப் பூண்டியிலிருந்து நான்கு கல் தொலைவில் உள்ள ஒரு சிற்றூர். இவ்வூர் மேட்டு நிலத்தைப் பயிரிட சமன் செய்தபோது சுந்தரசோழனின் காலத்து உதிரி ஏடுகள் கிடைத்தன. அவை இப்போது மர்ரே கம்பெனியைச் சேர்ந்த திரு.எஸ். இராஜம் அவர்களிடம் உள்ளன.

சென்னையில் உள்ள தென் இந்தியாவின் அகழ்வராய்ச்சிக் கழகத்து நடவடிக்கைகள் 1958-59 ஆம் ஆண்டு வெளியீட்டில் 41-83 பக்கங்களில் வெளியிடப் பெற்றுள்ளது.

பல்லவ அரசன் சிம்மவர்மன் தன்னுடைய ஆட்சியின் 6 ஆம் ஆண்டில் அளித்த தானத்தைத் தெரிவிக்கும் இச்சாசனம் ஐந்து செப்பேடுகளில் பொறிக்கப் பெற்றுள்ளது.

அவற்றில், இரு புறங்களிலும் இரண்டு குத்து விளக்குகள் உள்ளன. தலைப்பிலே இரண்டு சாமரங்களுக்கு நடுவில் உள்ள குடை ஒன்றையும் காணலாம். அவற்றின் கீழே இரிஷபத்தின் தலைக்குமேல் ஆரம்பித்து ஒரு கலசம் அல்லது பூர்ண கும்பம், மிருதங்கம், ஆசனம், அங்குசம், ஸ்ரீவத்ஸம் ஆகியவை ஒரு வரிசையில் உள்ளன. இரிஷபத்தின் முதுகுக்கு மேல் பிறைச் சந்திரனும் நட்சத்திரமும் காணப் பெறுகின்றன. இரிஷபத்தின் அடியில் வளைவான ஒரு கோடு காணப்பெறுகிறது. முத்திரையின் விளிம்பை ஒட்டி வட்டமாக ஒரு வரி கிரந்த எழுத்தில் எழுதப் பெற்றிருக்கிறது.

முதல் ஏடும் இறுதி ஏடும் ஒரு பக்கம் மட்டுமே எழுதப் பெற்றுள்ளது. ஏனைய மூன்று ஏடுகள் இருபுறங்களிலும் எழுதப் பெற்றுள்ளன. இவ்வாறு மொத்தம் எட்டுப்பக்கங்களில் பக்கத்திற்கு எட்டு வரியாக அறுபத்து நான்கு வரிகளில் சாசனம் எழுதப் பெற்றுள்ளது.

சமக்கிரதம், தமிழ் ஆகிய இரு எழுத்து வடிவில் உள்ளன. சமணர்களுக்குத் தானம் அளிக்கப் பெற்ற செய்தியைத் தெரிவிக்கும் சாசனங்களுள்ளும் இதுவே முதன்மையானது.

2. முதலாம் பரமேச்வர வர்மனுடைய கூரம் செப்பேடுகள்

காஞ்சிக்கு அண்மையிலுள்ள கூரம் எனும் சிற்றூரில் கோயில் அறங்காவலரிடமிருந்து விலைக்கு வாங்கப்பட்டது. ஏழு மெல்லிய

ஏடுகளைக் கொண்டது. இச்சாசனம் தென்னிந்தியச் சாசனங்கள் முதல் தொகுதியில் 144-155 ஆம் பக்கங்களில் டாக்டர் ஹுல்ஷ் என்பவரால் வெளியிடப் பெற்றுள்ளது.

இது தமிழ் சமக்கிருதம் ஆகிய இரு பகுதிகளையும் கொண்டது.

3. முதலாம் பரமேச்வர வர்மனுடைய உன்ன குரவய பாளையம் செப்பேடுகள்

ஆந்திர மாநிலம் நெல்லூர் மாவட்டம் பொதிலி வட்டத்தில் உன்ன குரவய பாளையம் எனும் சிற்றூரில் கிடைத்தது.

திரு. பி. சேஷாத்திரி சாஸ்திரியார் எடுத்த புகைப்படத்தையும், பெயர்த்து எழுதிய பிரதியையும் ஆதாரமாகக் கொண்டு இச்சாசனம் டாக்டர் தினேஷ் சந்திர சர்க்காருடன் கூட்டாக அவரால் எபிகிராபியா இந்திகா 32 ஆம் தொகுதி 91-92 பக்கங்களில் வெளியிடப் பெற்றது.

4. இரண்டாம் நரசிம்மவர்மனுடைய ரேயூருச் செப்பேடுகள்

ஐந்து ஏடுகளைக் கொண்ட இச்சாசனம் ஆந்திரா மாநிலம் சித்தூர் மாவட்டத்திலுள்ள காளஹஸ்தி மன்னனுக்குச் சொந்தமாக, அவருடைய ஆவணங்களில் இருந்துள்ளது.

ஸ்ரீ வேங்கடேச்வரர் கீழ்த்திசை ஆராய்ச்சிக் கழகத்தில் வைக்கப் பெற்றுள்ளது.

காலஞ்சென்ற வேட்டூரி பிரபாகர சாஸ்திரியால் தெலுங்கிலே வெளியிடப் பெற்றது.

ஐந்து ஏடுகளைக் கொண்டிருந்தாலும், சாசனம் மூன்று ஏடுகளிலேதான் பொறிக்கப் பெற்றுள்ளது. பக்கத்திற்கு ஐந்து வரிகள் வீதம் மொத்தம் இருபத்தைந்து வரிகளைக் கொண்டுள்ளது.

5. ஸ்கந்த சிஷ்யவர்மனுடைய ராயக்கோட்டைச் செப்பேடுகள்

இது மூன்று ஏடுகளில் பொறிக்கப் பெற்றுள்ளது. சென்ற நூற்றாண்டில் சர். வால்ட்டர் எலியட் என்பவர் சேகரித்தார். இச்செப்பேடு ராயக்கோட்டை காப்டன் காம்பெல் என்பவரிடமிருந்து கிடைத்ததால், ராயக்கோட்டைச் செப்பேடுகள் எனும் பெயர் பெற்றது. இவ்வூர் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ளது.

இச்சாசனத்தை 102 ஆண்டுகளுக்குமுன் எபிகிராபியா இந்தியாவில், ஐந்தாம் தொகுதி, 49-51 ஆம் பக்கங்களில் டாக்டர் ஹூல்ஷ் மைப் பிரதியுடன் வெளியிட்டிருக்கிறார்.

முதல் ஏட்டின் முன்புறம் எழுதவில்லை. ஏனை இரண்டு ஏடுகள் இருபுறங்களிலும் எழுதப் பெற்றுள்ளன. பக்கத்திற்கு எட்டு வரிகளாக நான்கு பக்கங்களில் மொத்தம் 32 வரிகளும் 5ஆம் பக்கத்தில் இரண்டு வரிகளும் மொத்தம் 34 வரிகள் இருக்கின்றன. இதில் சமக்கிருதப் பகுதி, தமிழ்ப் பகுதி இரண்டும் உள்ளன.

6. நந்திவர்மன் பல்லவ மல்லனுடைய உதயேந்திரம் செப்பேடுகள் - 1

கி.பி. 1850 ஆம் ஆண்டில் வட ஆர்க்காடு மாவட்டம், குடியாத்தம் வட்டத்தில் வாணியம்பாடிக்கு அருகிலுள்ள உதயேந்திரம் எனும் சிற்றூரிலிருந்து எட்டு செப்பேடுகள் கிடைத்தன. அவை ரெவரெண்ட் டி.போக்ஸ் என்பவரால் "சேலம் மான்யூவல்" எனும் நூலில் இரண்டாம் பாகத்தில் வெளியிடப் பெற்றன.

இச்சாசனம் மொத்தம் ஐந்து ஏடுகளைக் கொண்டது. முதல் ஏட்டின் முன்புறம் மட்டும் எழுதப் பெற்றிருக்கும். பின் நான்கு ஏடுகளிலும் இருபுறமும் எழுதப் பெற்றுள்ளன. சாசனம் முழுமையும் சமக்கிருதத்தில் எழுதப் பெற்றுள்ளது.

7. முதல் நந்திவர்மனுடைய உதயேந்திரம் செப்பேடுகள் - 2

இச்சாசனம் தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் உள்ளது. தமிழில் இல்லை. ரெவரெண்டு டி. போக்ஸ் என்பவரால் "சேலம் மான்யுவல்" என்னும் நூலிலே வெளியிடப்பட்டது. இது பின்னால் "இந்தியன் அன்டிகுவரி" எட்டாம் தொகுதியில் 50-55 ஆம் பக்கங்களில், மைப்பிரதியுடன் வெளியிடப் பெற்றுள்ளது.

மூன்று ஏடுகளைக் கொண்டது. முதல் ஏட்டிலும் இறுதி ஏட்டிலும் ஒரு பக்கம் மட்டுமே எழுதப் பெற்றுள்ளன.

8. நந்திவர்மன் பல்லவ மல்லனுடைய காசாக்குடிச் செப்பேடுகள்

பதினொரு ஏடுகளில் பொறிக்கப் பெற்றுள்ளன. காரைக்காலுக்கு அருகில் உள்ள ஊராகும் காசாக்குடி. 1879இல்

பூமியிலிருந்து கிடைத்தது. புதுச்சேரியைச் சேர்ந்த ஜூல்ஸ் தேலா போன் என்னும் பிரெஞ்சுக்காரர் கண்டெடுத்தார். வாகூர்ச் செப்பேடுகளை வெளிக் கொணர்ந்தவரும் இவரே. இது இப்போது சென்னை அருங்காட்சியகத்தில் பாதுகாப்பாக வைக்கப் பெற்றுள்ளது.

முதல் ஏடும் இறுதி ஏடும் ஒருபக்கம் மட்டுமே எழுதப் பெற்றுள்ளது. ஏனைய ஒன்பது ஏடுகள் இருபக்கங்களிலும் எழுதப் பெற்றுள்ளன. ஆக, இருபது பக்கங்களில் உள்ளன.

கடைசி பக்கத்தில் ஐந்து வரிகளும், ஏனைய பக்கங்களில் ஏழு ஏழு வரிகளும் ஆக மொத்தம் 138 வரிகள் உள்ளன.

சமஸ்கிருதம் தமிழ் ஆகிய இரு மொழிப் பகுதிகளைக் கொண்டுள்ளது. தமிழ்ப் பகுதி கோனேோலை கொண்டது.

9. இரண்டாம் நந்திவர்மனுடைய புல்லூர்ச் செப்பேடுகள்

வடஆர்க்காடு மாவட்டத்திலுள்ள புல்லூர்ச் சிற்றூரிலே சிறிய திருமால் கோயில் உள்ளது. 1939இல் பூமிக்கடியிலிருந்து ஒரு சாசனம் கிடைத்தது. இப்போது, இது கல்கத்தாவிலுள்ள இந்தியப் பொருட்காட்சிச் சாலையில் வைக்கப் பெற்றுள்ளது.

சாசனம் மொத்தம் 139 வரிகளைக் கொண்டது. இதுவும் சமஸ்கிருதம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் உள்ளது.

10. இரண்டாம் நந்திவர்மனுடைய தண்டந்தோட்டம் செப்பேடுகள்

இவ்வூர் தஞ்சைமாவட்டம், கும்பகோணம், வட்டத்திலிருந்து 6 கல் தொலைவில் உள்ளது. சிவன் கோயிலில் கட்டடம் எழுப்ப கடைகால் தோண்டியபோது விக்கிரகங்களோடு இச்சாசனமும் கிடைத்தது. இது இது பதினான்கு ஏடுகளைக் கொண்டுள்ளது. சமக்கிருதம், தமிழ் ஆகிய இரு மொழிகளில் உள்ளது.

11. இரண்டாம் நந்திவர்மனுடைய பட்டத்தாள் மங்கலம் செப்பேடுகள் என்ற கொற்றங்குடிச் செப்பேடுகள்

கொற்றங்குடி, திருத்துறைப் பூண்டிக்கு ஐந்து மைல் தூரத்தில் உள்ள ஒரு சிற்றூர். இதைக் கொத்தங்குடி என்றும் கொத்தமங்கலம் என்றும் கூறுவர்.

திரு.கே.வி. சுப்பிரமணிய அய்யர் "பட்டத்தாள் மங்கல சாசனம்" என்ற தலைப்பில் "எபிகிராபியா இந்தியா - 18ஆம் தொகுதியில் வெளியிட்டிருக்கிறார். சமக்கிருதம், தமிழ் ஆகிய இரு மொழிப் பகுதிகள் உள்ளன.

12. மூன்றாம் நந்திவர்மனுடைய வேலூர்ப் பாளையம் செப்பேடுகள்

இது ஐந்து ஏடுகளில் பொறிக்கப் பெற்றுள்ளது. வடஆர்க்காடு மாவட்டம் அரக்கோணத்திலிருந்து ஏழு கல் வடமேற்கே உள்ள வேலூர்ப் பாளையம் என்பது ஒரு சிற்றூராகும்.

இது, இராவ்பகதூர் வி. வெங்கையா அவர்களால் வெளிக் கொணரப்பட்டது. இவ்வேடுகள் சென்னை அரசினர் பொருட்காட்சிச் சாலையில் பாதுகாப்பாக உள்ளன.

முதல் ஏடும் இறுதி ஏடும் ஒரு பக்கம் மட்டுமே எழுதப் பெற்றுள்ளன. ஏனைய மூன்று ஏடுகளும் இரு பக்கங்களிலும் எழுதப் பெற்றுள்ளன. ஆக மொத்தம் எட்டுப் பக்கங்களில் 69 வரிகளாக எழுதப் பெற்றுள்ளன.

சமக்கிருதம், தமிழ் ஆகிய இரு பகுதிகளைக் கொண்டுள்ளது.

13. நிருபதுங்க வர்மனுடைய பாகூர்ச் செப்பேடுகள்

ஐந்து ஏடுகளில் பொறிக்கப் பெற்றுள்ளன. 1879 ஆம் ஆண்டு, புதுவைக்குப் பதினைந்து கி.மீ. தொலைவில் உள்ள பாகூரில் உள்ள சிவன் கோவிலில் கிடைத்தது.

இது பாரிசு நகரில் பப்ளியோத்தேக் நேஷனல் நூலகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

சமக்கிருதம், தமிழ் ஆகிய இருபகுதிகளைக் கொண்டுள்ளது.

14. விஜயஸ்கந்தவர்மனுடைய ஓங்கோடு செப்பேடுகள் I

குண்டூர் மாவட்டம், பாபட்லா வட்டத்திலுள்ள சந்தாவூரு என்னுமிடத்தில் கிராம முன்சீப்பின் குடும்பத்தாரிடம் இரண்டு செப்பேடுகள் இருந்தன. இது 1915 ஆம் ஆண்டு வெளிக் கொணரப் பெற்றது. சென்னைப் பொருட்காட்சிச் சாலையில் வைக்கப் பெற்றுள்ளது.

அவற்றுள் ஒன்று இச்சாசனம். எபிகிராபியா இண்டிகா தொகுதி 15இல் 'ஏ' என்ற எண்ணிட்டு, 246 - 252 ஆம் பக்கங்களில் இது வெளியிடப் பெற்றுள்ளது. விஜயஸ்கந்தர்வமன் ஆட்சிக் காலத்தைச் சேர்ந்தது; நான்கு ஏடுகளைக் கொண்டது.

முதல் ஏட்டிலும் இறுதி ஏட்டிலும் ஒரு பக்கம் மட்டுமே எழுத்துக்கள் பொறிக்கப் பெற்றுள்ளன. இவை பக்கத்துக்கு மூன்று வரிகளாக மொத்தம் பதினெட்டு வரிகளைக் கொண்டுள்ளன.

கர்மராட்டிரத்திலே உள்ள ஓங்கோடு என்னும் சிற்றூரில் காசியப கோத்திரத்தைச் சேர்ந்த, வேதமறிந்த பிராம்மணன் கோல சர்மனுக்கு விஜயஸ்கந்தவர்மன் என்னும் அரசன் தானம் அளித்த செய்தியை அறிவிக்கிறது.

தானம் அளிக்கப் பெற்ற ஓங்கோடு என்பது இப்போது ஓங்கோல் என்று வழங்கப் பெறும் ஊரே என்பர்.

15. சிம்மவர்மனுடைய ஓங்கோடு செப்பேடுகள் II

குண்டூர் மாவட்டம் சந்திராவூரிலிருந்து கிடைத்தது. எபிகிராபியா இண்டிகா 15ஆம் தொகுதியில் 252- 255ஆம் பக்கங்களில் ஸ்ரீ.எச். கிருஷ்ண சாஸ்திரி அவர்களால் வெளியிடப் பெற்று, ஐம்பது மெல்லிய ஏடுகளைக் கொண்டது.

முதல் ஏடும் இறுதி ஏடும் ஒருபக்கம் மட்டுமே எழுதப் பெற்றவை. ஏனைய மூன்று ஏடுகள் இரு பக்கங்களிலும் எழுதப் பெற்றுள்ளன.

இச்செப்பேடு, கி.பி. 700 ஆம் ஆண்டளவில் வழக்கிலிருந்த தெலுங்கு - கன்னட எழுத்துகளில் பொறிக்கப் பெற்றுள்ளது.

சாசனம் சிம்மவர்மனின் 4ஆம் ஆட்சியாண்டில் அறக்கொடை நல்கியதாகத் தெரிவிக்கிறது.

16. யுவமஹாராஜ விஷ்ணு கோபவர்மனுடைய உருவப் பள்ளிச் செப்பேடுகள்

இச்சாசனம், சர்வால்டர் எலியட் சென்ற நூற்றாண்டில் சேகரித்து வைத்திருந்த (மைப்பிரதிகள்) வரலாற்றுத் தொகுப்பில் காணப்பெற்றது.

இச்சாசனம் மொத்தம் 34 வரிகளாக எழுதப் பெற்றுள்ளது. சாசனம் 5 ஏடுகள்.

முதல் ஏடும் இறுதி ஏடும் ஒரு பக்கம் மட்டுமே எழுதப் பெற்றுள்ளது.

பல்லவ மரபில் பிறந்த தர்மயுவ மகாராசன் விஷ்ணு கோபவர்மன் அளித்த கொடையைத் தெரிவிக்கிறது.

17. சிம்மவர்மனுடைய மாங்க஌ர்ச் செப்பேடுகள்

இச்சாசனமும் சர். வால்ட்டர் எலியட் சேகரித்த வரலாற்று ஆதாரங்களின் தொகுப்பில் உள்ளது. பக்கத்திற்கு 3 வரிகளாக மொத்தம் பன்னிரு பக்கங்களில் 36 வரிகள் எழுதப் பெற்றுள்ளன.

18. சிம்மவர்மனுடைய பீகிரச் செப்பேடுகள்

இது ஐந்து ஏடுகளைக் கொண்டது. இப்போது சென்னைப் பொருட்காட்சிச் சாலையில் இருக்கிறது. குண்டூர் மாவட்டம், ஓங்கோல் வட்டம் நெலட்டூர் என்னும் சிற்றூரில், ஒரு பைராகியின் உடைமையாக இருந்தது.

முதல் ஏடும் இறுதி ஏடும் ஒரு பக்கம் மட்டுமே எழுதப் பெற்றுள்ளன. ஏனைய மூன்றும் இருபுறங்களிலும் எழுதப் பெற்றவை. பக்கத்திற்கு 3 வரிகளாக மொத்தம் 24 வரிகள் உள்ளன.

முண்டராஷ்டிரத்தைச் சேர்ந்த பீகிர என்னும் சிற்றூரை, காசியப கோத்திரம் தைத்திரிய சாகை விலாஸ சர்மனுக்குப் பிரம்ம தேயமாக அளித்த செய்தியைத் தெரிவிக்கிறது.

19. யுவமகாராஜன் விஷ்ணு கோபனுடைய நெடுங்கராயச் செப்பேடுகள்

இது ஐந்து ஏடுகளைக் கொண்டது.

இது தானச் செப்பேடு ஆகும்.

20. ஸ்ரீ விஜய சிம்மவர்மனுடைய வேசந்தச் செப்பேடுகள்

ஐந்து ஏடுகளைக் கொண்டது. குண்டூர் மாவட்டம் சர்தனப் பள்ளி வட்டம், ஜலாலபுரம் எனும் சிற்றூரில் கிடைத்தது.

இப்போது ஐதராபாத்திலுள்ள ஆந்திரப் பிரதேச அரசின் புதை பொருள் பொருட்காட்சிச் சாலையில் வைக்கப் பெற்றுள்ளது. முதல் ஏடும் இறுதி ஏடும் ஒரு பக்கம் மட்டுமே எழுதப் பெற்றுள்ளன. ஏனை மூன்று ஏடுகள் இருபக்கங்களிலும் எழுதப் பெற்றுள்ளன.

எட்டுப் பக்கங்களில், முதல் நான்கு பக்கங்கள் பக்கத்துக்கு ஐந்து வரிகளாகவும், 5 ஆம் பக்கம் 4 வரிகளாகவும், இறுதி 3 பக்கங்கள் பக்கத்திற்கு மூன்று வரிகளாகவும் மொத்தம் 33 மூன்று வரிகள் உள்ளன.

21. சிம்மவர்மனுடைய விழவெட்டிச் செப்பேடுகள்

ஐந்து ஏடுகளில் பொறிக்கப் பெற்றுள்ளது. இச்சாசனம் நெல்லூர் மாவட்டத்தில் கோவூர் வட்டத்தில் உள்ள புச்சிரெட்டிப்பாளையம் என்னும் ஊருக்கு ஒன்றரை மைல் தூரம் மேற்கே உள்ள வவ்வேறு எனும் சிற்றூரில் 1928இல் கிடைத்தது.

இது ஆங்கிலத்தில் சென்னைப் பல்கலைக்கழக இதழில் வெளியிடப் பெற்றது. 1933- 1934 ஆம் ஆண்டு அறிக்கையில் இதைப் பற்றிய விவரங்கள் உள்ளன.

சாசனத்தின் முதல், இறுதி ஏடுகளில் ஒரு பக்கம் மட்டுமே எழுத்துப் பொறிப்பு உள்ளது. ஏனைய மூன்று ஏடுகளில் இரு பக்கங்களில் எழுத்துக்கள் உள்ளன.

22. இரண்டாம் குமாரவிஷ்ணுவின் செந்தலூர்ச் செப்பேடுகள்

இது ஐந்து ஏடுகளைக் கொண்டது. இச்சாசனம் நெல்லூர் மாவட்டம் ஓங்கோல் வட்டத்தில் செந்தலூர் என்னும் ஊரில் 142 ஆண்டுகளுக்கு முன் பூமியிலிருந்து கிடைத்தது.

முதல், இறுதி ஏடுகளில் ஒரு பக்கத்திலும், ஏனைய மூன்று ஏடுகளில் இரு பக்கங்களிலும் பொறிப்புகள் உள்ளன.

23. வீரகோச்சவர்மனின் கொள்ளுப் பெயரனின் தர்சி உதிரி செப்பேடு

பத்தொன்பதாம் நூற்றாண்டில் நெல்லூர் மாவட்டத்தில் உள்ள தர்சி என்னும் ஊரில் ஒரு புகையிலைத் தோட்டத்தில் இந்த ஏடு கண்டெடுக்கப் பெற்றது. இப்போது சென்னை அரசினர் பொருட்காட்சிச் சாலையில் உள்ளது.

டாக்டர் ஹூல்ஷ், எபிகிராபியா இந்திகா முதல் தொகுதியில் வெளியிட்டுள்ளார். ஒரு ஏடு மட்டுமே கிடைத்துள்ளது.

24. விஜய விஷ்ணு கோபவர்மனுடைய காரச் செப்பேடுகள்

மூன்று ஏடுகளைக் கொண்டது இச்சாசனம். 1913-14 ஆம் ஆண்டறிக்கையில் இது விவரிக்கப் பெற்றுள்ளது. எபிகிராபிய இண்டிகா 24ஆம் தொகுதியில் வெளயிடப் பெற்றுள்ளது.

25. யுவமகாராஜன் சிவஸ்கந்தவர்மனுடைய மயித வோலுச் செப்பேடுகள்

1899 ஆம் ஆண்டின் இடையில் ஆந்திராவில் குண்டூர் மாவட்டத்திலுள்ள நரசராவ் பேட்டைக்குப் பன்னிரண்டு மைல் கிழக்கே உள்ள மயித வோலு என்னும் சிற்றூரில் ஒரு மேட்டிலிருந்து கிடைத்தது.

இது எபிகிராபியா இந்திகா, 6ஆம் தொகுதி 86-89 ஆம் பக்கங்களில் வெளியிடப் பெற்றிருக்கிறது. இப்போது சென்னைப் பொருட்காட்சிச் சாலையில் உள்ளது.

26. சிவஸ்கந்த வர்மனின் ஹீரஹடஹள்ளிச் செப்பேடுகள்

எட்டு ஏடுகளைக் கொண்டது இச்சாசனம். எபிகிராபியா இந்தியா முதல் தொகுதி 2 ஆம் பக்கத்தில் வெளியிடப் பெற்றது. சென்னை அரசு பொருட்காட்சிச் சாலையில் உள்ளது.

27. சாருதேவியின் குணபதேயம் செப்பேடுகள்

சர் வால்ட்டர் எலியட் என்பவர் செப்பேடுகளின் மைப் பிரதியைச் சேகரித்திருந்தார்.

குண்டூர் மாவட்டத்திலுள்ள குணபதேயம் என்னும் இடத்தில் செப்பேடு கிடைத்தது.

எபிகிராபியா இந்திகா 8ஆம் தொகுதியில் 14 ஆம் பக்கத்தில் மைப்பிரதியுடன் இது பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

28. சிம்ம விஷ்ணுவின் ஹொஸக்கோட்டை செப்பேடுகள்

மைசூர் சமத்தானத்தில் பங்களூர் மாவட்டத்தில் ஒரு வட்டத்தின் பெயராகும் ஹொஸக்கோட்டை என்பது. அவ்வூர் பள்ளி ஆசிரியரிடமிருந்து செப்பேடு பெறப்பட்டது.

மைசூர் - புதைபொருள் துறையினரால் 1938ஆம் ஆண்டறிக்கையில் வெளியிடப் பெற்றுள்ளது. ஐந்து ஏடுகளைக் கொண்டது.

29. சிவமாரனுடைய ஹல்லகெரெ செப்பேடுகள்

மைசூர் மாவட்டம் மண்டயம் வட்டத்திலுள்ள ஹல்லகெரெ என்ற சிற்றூரில் கிடைத்தது. எபிகிராபியா கர்நாடிகா - மூன்றாம் தொகுதியில் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. ஐந்து ஏடுகளைக் கொண்டது.

30. கோபால தேவனுடைய ஹால்திபூர் செப்பேடுகள்

வடகன்னடத்தில் ஹொனவார் வட்டம் ஹல்திபூர் சிற்றூரில் ஒரு தோட்டத்தைத் தோண்டும்போது கிடைத்தது. மூன்று ஏடுகளைக் கொண்ட இச்சாசனம் எபிகிராபியா இண்டிகா 21ஆம் தொகுதியில் 29 ஆம் எண்ணாகப் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

Page. 18	Plate	IX
	Plate	X
		XI
		XII
Page 36	Plate	XVIII
	Plate	XIX
	Plate	XX
Page 37	Plate	XXI
Page 38	Plate	XXII
	Plate	XXVI
Page 100	Plate	XXXIII
Page 102	Plate	XXXV
	Plate	XXXVII
Page 103	Plate	XXXVII
Page 109	Plate	XL
Page 114	Plate	XLI

சோழர் செப்பேடுகள்

1. சென்னை அருங்காட்சியகச் செப்பேடுகள்
   - உத்தம சோழன் செப்பேடு

2. திருத்தணி - வேலாஞ்சேரி செப்பேடு - பராந்தகன்

3. திருவாலங்காடு செப்பேடுகள் 31 ஏடுகள்
   - முதல் இராசேந்திரன் (S.I.I. III Part III No. 205)

4. திருக்களர் செப்பேடுகள் 5 ஏடுகள்"- No. 207
   - முதல் இராசேந்திரன் ஆ.ஆ : 18

5. எசாலம் செப்பேடுகள் - முதல் இராசேந்திரன்

6. இராஜாதி ராஜன் I, செப்பேடு No. S.I.I. III 208

7. குலோத்துங்க சோழன் செப்பேடு எண். 209

8, திரிபுவனச் சக்கரவர்த்தி இராஜராஜ தேவர் செப்பேடு எண்.210

9. குலோத்துங்க சோழன் III செப்பேடுகள் எண். 211

10. திருச்செங்கோடு செப்பேடு - இராஜகேசரிவர்மன் எண். 212, 213

பாண்டியர் செப்பேடுகள் பத்து

வெளியீடு : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் - 1999.

தமிழ் நாட்டின் பண்டைய வரலாற்றை அறிய உதவுபவை இலக்கியச் சான்றுகள், ஓலைச் சுவடிகள், கல்வெட்டுகள், செப்பேடுகள், காசுகள், அகழாய்வில் கிடைத்த பல பொருட்கள் போன்றவை எனலாம்.

அக்கால அரசியல் ஆணை, குடிகளைக் காத்த தலைவர்கள், கணக்கர், திருமந்திர ஓலை, திருவாய் கேள்வி, கரணத்தார் போன்ற பல சொற்களைப் பாண்டியர் செப்பேடுகளின் வழியாக அறிந்து மகிழலாம்.

பாண்டிய வேந்தர்கள் தமிழை ஆட்சிமொழியாகப் பயன்படுத்திய பாங்கினையும் அறியலாம். கொடை வழங்கிய வேந்தர், அவ் அறக்கொடை தொடர்ந்து நடைபெற விரும்பி, "மற்றிதனைக் காத்தார் தம் மலரடி என் முடிமேலன என்று கொற்றவனே பணித்தருளி" எனும் தொடர் வருகிறது.

கொடை நிலங்களுக்கு நான்கு எல்லைகள் தெளிவாகக் குறிக்கப் பெறுகிறது. அவ் எல்லை நிலைத்து இருக்கக் கல் நடப்பெறுகிறது. பிறகு அவ் எல்லைக் கோட்டில் பெண் யானை மீது ஏறி, அந்நிலத்தில் நடக்கச் செய்கின்றான் பாகன். பாகனின் பெயரையும் பட்டயம் தெரிவிக்கிறது.

கொல்லன் சிறந்த புலமையாளனாய்த் திகழ்ந்தான் என்பதைத் **"திருமலி சாசனம் இதற்குச் செழுந்தமிழ் பாடினோன் தாதை நிருப சேகரப் பெருங்கொல்லன் நிறை புகழ் நக்கன் எழுத்திவை"** என்ற தொடர் அறிவிக்கிறது.

சின்னமனூர்ப் பெரிய சாசனம் அதிகாரிகளைப் பற்றிக் கூறும் பகுதி படித்து மகிழத்தக்கது.

ஒவ்வொரு பட்டயமும் அரசர்களின் குடிவழி மரபினைத் தெரிவிக்கிறது. முற்காலப் பாண்டியரைப் பற்றிய செய்திகள் வருகின்றன..

பிற்காலப் பாண்டியர் செப்பேடுகள் பத்து கிடைத்துள்ளன.

பாண்டியர் செப்பேடுகள் வட்டெழுத்து வடிவின. தமிழ் வரிவடிவங்கள் காலந்தோறும் மாறி வருகின்றன என்பதற்கு இச்செப்பேடுகளும் சான்றாகின்றன.

பாண்டியர்

தமிழ்நாட்டில் செந்தமிழ் நாடு என்று சிறப்பித்துக் கூறப் பெறுவது பாண்டி நாடு.

'தண்ணார் தமிழ் அளிக்கும் தண்பாண்டி நாடு' என்று மாணிக்கவாசகரும்,

'முத்தும் முத்தமிழும் கொழித்த நாடு' என்று கம்பரும் பாண்டிய நாட்டைப் புகழ்ந்துரைத்துள்ளனர்.

மனோன்மணியம் ஆசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்களும்,

"ஆதி இன்னது என்று ஓதுதற்கு அரிய வழுதியின் தொழு குலம்" என்று பாண்டியர் மரபைச் சிறப்பித்துக் கூறியுள்ளார்.

இப்பாண்டியர் சங்க காலத்திற்கு முன்பு தொடங்கி, கி.பி. 17 ஆம் நூற்றாண்டு தொடக்கம் வரையில் அரசு செலுத்தினர்.

பாண்டியர் செப்பேடுகள்

1. நெடுஞ்சடையனின் வேள்விகுடிச் சாசனம்

பத்து ஏடுகளைக் கொண்ட இச்செப்பேட்டுச் சாசனம், இலண்டன் பிரிட்டிஷ் காட்சியகத்தில் காப்பாக வைக்கப் பெற்றுள்ளது.

1893இல் டாக்டர் ப்ளீட் (Dr. Fleet) இச்சாசனத்தின் மைப்பிரதிகள் இரண்டனை இந்தியச் சாசனத் துறைக்கு அனுப்பிவைத்தார். அப்போது திரு. வெங்கையா அவர்கள் ஸ்ரீவரமங்கலச் செப்பேட்டுச் சாசனம் இந்தியன் ஆண்டிக்வரியில் பகுதி 22/1893 பக்கங்கள் 57-75)இல் வெளியிட்டிருந்தார்.

பத்து ஏடுகளைக் கொண்ட இச்சாசனத்தில் முதல் ஏடும் இறுதி ஏடும் ஒருபக்கம் எழுதப்பெற்றிருந்தன. ஏனைய எட்டு ஏடுகளில் இரு பக்கங்களில் எழுதப் பெற்றுள்ளன. இவ்வாறு 18 பக்கங்களில், மொத்தம் 155 வரிகளைக் கொண்டுள்ளது.

இச்சாசனம் தமிழ், சமக்கிருதம் ஆகிய இரு மொழிகளிலும் உள்ளது. சமக்கிருதம் பகுதி கிரந்த எழுத்திலும், தமிழ்ப் பகுதி வட்டெழுத்திலும் உள்ளன.

2. நெடுஞ்சடையனின் ஸ்ரீவர மங்கலச் சாசனம்

இச்செப்பேடு பாண்டியன் ஜடிலவர்மனால் அளிக்கப் பெற்றது. வேள்விக்குடிச் செப்பேட்டை அளித்தவனும் இவனே.

இச்செப்பேடு 7 ஏடுகளைக் கொண்டது. ஒவ்வொரு ஏடும் 11¼ அங்குல நீளமும் 41/8 அங்குல அகலமும் கொண்டு ஒரு வளையத்தில் கோக்கப் பெற்றுள்ளது. ஏடுகள் 328½ தோலா எடையும், வளையம் 11¼ தோலா எடையும் கொண்டது.

முதல் ஏடும், ஏழாம் ஏடும் ஒருபக்கம் பொறிக்கப் பெற்றுள்ளது. ஏனைய ஏடுகளில் இருபக்கமும் எழுதப் பெற்றுள்ளன.

இச்சாசனத்தை ஸ்ரீ வி. வெங்கையா 1893 ஆம் ஆண்டில் [இந்தியப் பழம் பொருள் ஆராய்ச்சி பகுதி 22இல் 1893] ஆங்கில வெளியீட்டில் வெளியிட்டார்.

'செந்தமிழ்' நான்காம் தொகுதியில் தமிழ் எழுத்தில் 1905-1906 "மாறஞ்சடையன் I" என்னும் கட்டுரையாக 335-385 ஆம் பக்கங்களில் வெளியிட்டுள்ளனர்.

3. நெடுஞ்சடையனின் சின்னமனூர்ச் (சிறிய) சாசனம்

சின்னமனூரிலிருந்து இரண்டு செப்பேட்டுச் சாசனங்கள் கிடைத்துள்ளன. அவ்வூரிலிருந்து கிடைத்தமையால் சின்னமனூர்ச் செப்பேடுகள் என்று பெயர் வழங்குகிறது. ஒன்று சிறியது, மற்றது பெரியது. முன்னர் மதுரை மாவட்டத்தில் பெரிய குளம் வட்டத்தில் உள்ள ஊர் சின்னமனூர் என்னும் சிற்றூர். இவ்வூர்ப் பெருமாள் கோவிலில் மடைப்பள்ளி கட்டுதற்காகக் கடைக்கால் தோண்டியபோது இச்செப்பேடுகள் கண்டெடுக்கப் பெற்றன.

சூவல் துரை, ஆங்கிலத்தில் எழுதிய "பழம்பொருள் பட்டியல்" என்னும் நூலில் இச்செப்பேடுகளைக் குறிப்பிட்டிருக்கிறார். இப்போது

மைசூரிலுள்ள சாசனத் துறையில் இது இருக்கிறது. இவை இரண்டும் முதன் முதலில் 1927ஆம் ஆண்டில் "தென் இந்தியச் சாசனங்கள்" என்னும் தொகுப்பில் மூன்றாம் பகுதியில் 206 ஆம் எண்ணில் வெளிவந்துள்ளன.

4. பராந்தக வீரநாராயணனின் தளவாய்புரச் சாசனம்

திருநெல்வேலி மாவட்டம் கோவில்பட்டி வட்டசதிலுள்ள தளவாய்புரம் என்னும் சிற்றூரில் புறவெளியில் பூமிக்கடியில் இருந்து இச்சாசனம் கிடைத்ததென்று கூறப் பெறுகிறது.

ஏழு செப்பேடுகளைக் கொண்டது இச்சாசனம். முதல் ஏடும் இறுதி ஏடும் ஒருபக்கம் மட்டுமே எழுதப் பெற்றுள்ளன. ஏனைய ஏடுகள் இரு பக்கங்களிலும் எழுதப் பெற்றுள்ளன.

இச்சாசனம் சமக்கிருதம் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் எழுதப் பெற்றுள்ளது.

5. இராஜசிம்மனின் சின்னமனூர் பெரிய சாசனம்

இப்பெரிய செப்பேட்டுச் சாசனத்தில் முதல் ஏடும் இறுதி ஏடும் காணப்பெறவில்லை. கிடைத்துள்ள ஏழு ஏடுகளிலே பாண்டியர் வரலாற்றை ஆராய்வதற்குச் சில செய்திகள் கிடைத்துள்ளன.

இச் செப்பேடும் சமக்கிருதம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் எழுதப் பெற்றுள்ளது.

6. வீர பாண்டியனின் சிவகாசிச் சாசனம்

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சிவகாசியில் ஓர கண்டே கனகைய நாயுடுவின் குடும்பத்தில் நீண்ட காலமாக இருந்துவந்த இச் செப்பேட்டு மூலப் பிரதி இப்போது சென்னை அரசினர் பொருட்காட்சிச் சாலையில் காப்பாக உள்ளது. அப்போது அரசினர் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் இயக்குநராக இருந்த டாக்டர் இரா. நாகசாமி அவர்கள் இதைக் கண்டுபிடித்துப் பொருட்காட்சிச் சாலையில் வைப்பதற்கு ஏற்பாடு செய்தார்.

இச்சாசனம் ஐந்து ஏடுகளைக் கொண்டது. சமக்கிருதம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் எழுதப் பெற்றுள்ளது.

பாண்டியர் செப்பேடுகள் எனும் நூலில்
ஆய்குல மன்னர் செப்பேடுகள்

என்னும் தலைப்பில் 4 செப்பேடுகள் கூறப்பெற்றுள்ளன.

1. கருநந்தடக்கனின் பார்த்திவ சேகரபுரச் சாசனம்

பழைய திருவாங்கூர்ச் சமத்தானத்தின் தலைநகராக விளங்கிய திருவனந்தபுரத்தில் அரசாங்கத் தலைமை காரியாலயத்தில் ஒரு அலமாரியிலே இரு புறமும் பொறிக்கப் பெற்ற ஆறு உதிரிச் செப்பேடுகள் நீண்ட காலமாகக் கிடந்தன. அச் செப்பேடுகள், திரு. து.அ. கோபிநாத ராயர் அவர்களிடம் ஒப்படைக்கப் பெற்றன.

கருநந்தடக்கன்

இவ்வரசன் முன்சிறை என்ற ஊர்ச் சபையோரிடமிருந்து கொஞ்சங் கொஞ்சமாக உழக்கு விளை என்ற நிலத்தை விலைக்கு வாங்கி அதன் எல்லையை உறுதி செய்து, இவ் இடத்தில் கோயில் கட்டி அதில் திருமாலை எழுந்தருளச் செய்தான். அச் சிற்றூர்க்குப் பார்த்திவசேகரபுரம் என்று பெயர் இட்டான். மேலும் ஒரு சாலையை நிறுவினான். அச்சாலையில் 95 சட்டர்களுக்குச் சாப்பாட்டிற்கு ஏற்பாடு செய்தான். இச்சாசனத்தில் கோயில் பணிகளுக்காக நிலங்களைத் தானம் செய்த விவரம் தெரிகிறது.

சட்டர் என்பார் உலக பந்தம் வேறு ஏதும் இல்லாமல் கல்வி ஒன்றையே பிரதானமாகக் கொண்டு, அதைக் கற்பதிலும் பிறருக்குக் கற்பிப்பதிலும் ஆயுட்காலத்தைச் செலவிடும் நைட்டிகப் பிரமசாரியாவர் என்று கருதலாம்.

2. கருநந்தடக்கனின் திருப்பறப்புச் சாசனம்

தென் திருவாங்கூரிலே கோதை ஆற்றின் கரையில் திருப்பறப்பு எனும் ஊர் இருக்கிறது. அங்கிருந்து சிறிது தொலைவில் ஆறு இருபது அடி உயரத்திலிருந்து அருவியாக விழுகிறது. உளம் கவரும் அருவிகளுள் அதுவும் ஒன்றாகும்.

ஊரின் நடுவில் சிவன் கோயில். அதிலிருந்து கிடைத்ததே இரண்டு ஏடுகளைக் கொண்ட இச்சாசனம்.

இது கிரந்தத்திலும், தமிழிலும் எழுதப் பெற்றுள்ளது.

3. கருநந்தடக்கனின் பாலியத்துச் சாசனம்

இரண்டு ஏடுகளில் பொறிக்கப் பெற்றுள்ள இச்சாசனம், சில செப்பேடுகளுடன் பாலியத்து அச்சன் என்பவர் வீட்டில் நீண்டகாலமாக இருந்தது. அதை, திரு.து.அ. கோபிநாத ராவ் கண்டெடுத்து அதைத் திருவாங்கூர் ஆர்க்கியலாஜிகல் சீரிஸ் (1910-1913) முதல் தொகுதியில் 12ஆம் பகுதியில் முதற்சாசனமாக 187-198 பக்கங்களில் வெளியிடப்பட்டுள்ளார்.

முதல் ஏட்டின் முன்புறம் தமிழ் எழுத்தில் தமிழ் மொழியில் எழுதப் பெற்றுள்ளது. அந்த ஏட்டின் பின்புறமும் அடுத்த ஏட்டின் இருபுறங்களிலும் வடமொழியில் நாகரி எழுத்தில் உள்ளன.

4. விக்கிரமாதித்திய வரணனின் திருநந்திக்கரைச் சாசனம்

பார்த்திவ சேகரபுரம் செப்பேடுகளோடு கிடைத்த ஏடான ஒற்றை ஏட்டில் எழுதப்பட்டு முழுமையாகக் காணப்படும் சாசனம் இது. முதல் பக்கத்தில் ஏழு வரிகளும் பின்பக்கத்தில் ஒரு வரியுமாக மொத்தம் எட்டு வரிகள் கொண்டது.

இச்சாசனத்தில் வடமொழிச் சொற்கள் கிரந்த எழுத்தில் பொறிக்கப் பெற்றுள்ளன. இச்சாசனத்தைப் பதிப்பித்தவரும் திரு.து.அ. கோபிநாதராவ் ஆவார்.

இவை, நான்கும் ஆய்குலமன்னர் செப்பேடுகள் என்ற வரிசையில் வெளியிட்டிருக்கின்றன.

ஆக பத்து செப்பேடுகளைப் பாண்டியர்கள் வெளியிடப்பட்டிருப்பதை அறிகிறோம்.

❖ ❖ ❖

வெளிவந்துள்ள செப்பேடுகள்

திருமலைநாயக்கர் செப்பேடுகள்

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை 1994

தொகுப்பாசிரியர்கள்

நடன. காசிநாதன், சு. இராசகோபால், வெ. வேதாசலம்

திருமலை நாயக்கர் காலச் செப்பேடுகளில், அவருடைய பண்புகள், புலியைக் கொன்றவர்க்குப் பரிசு, புலி வேட்டைக்குச் சென்றது, பல்லக்குத் தூக்கிகளுக்கு மானியம், நாயக்கரின் நீதி முறையும் நல்லிணக்க மனப்பான்மையும், கோயிலில் களவு போன பொருட்களை மீட்டல், ஓதுவார்க்கு மானியம், அறப்பணிகளுக்கு ஆதரவு, குடும்பனுக்கு மானியம், குடித்தலைவர்களுக்கு அதிகாரம் அளித்தல், திருமலைநாயக்கரின் பயணம், அரசு மரியாதை, அதிகாரிகள், படை, நாடு, ஊர்ப் பிரிவுகள், நாட்டு நிர்வாகம், பாளையக்காரர்கள், ஊர் நிர்வாகம், கோயிலும், தெய்வங்களும், சமூகப் பிரிவுகள், பொன்காசு, அளவை, கட்டளை போன்ற இன்னபிற செய்திகளைக் கூறுகிறது.

சேதுபதி செப்பேடுகள்

புலவர் செ. இராசு

தமிழ்ப் பல்கலைக் கழகம் – தஞ்சாவூர்

1994

சேதுபதிகள் மறவர் இனத்தைச் சார்ந்தவர்கள். இவர்கள் தமிழ்நாட்டின் தொன்மைச் சிறப்பு வாய்ந்த குடிகள்.

செப்பேடுகளில், அரசர்களும், அரசியரும், அலுவலர்களும், அந்தணர்களும், கோயில் அர்ச்சகர்களும் கொடுத்த கொடையாக உள்ளன.

சில செப்பேடுகள் நிலவிற்பனை, மக்கள் குடியேற்றம், காணியாட்சி பெறுதல், கொலை வழக்கு, உரிமைச் சிக்கல்களைத்

தீர்த்தல் போன்ற செய்திகளைக் கூறுகின்றன. மற்றும் அரசர் பெண்களைச் சிறையெடுத்தது, முத்துக் குளித்தல், வணிகம் போன்றவற்றையும் செப்பேடுகளால் அறிகிறோம்.

அவர்கள் காலச் சமயம், சமயத் தலைவர்கள், சமூகம், வணிகம், பொருளாதார நிலை, வேளாண்மை, பிற தொழில்கள், குற்றங்கள், தண்டனை, நாணய முறை, அளவுமுறை, நீர்நிலைகள், முத்துக்குளித்தல், நாட்டுப் பிரிவுகள், அரசு அலுவலர்கள், சேதுபதி குடும்பம், திருமண உறவுகள், காடழித்து நாடாக்கியமை போன்ற செய்திகளை அறிகின்றோம்.

கொங்கு வேளாளர் செப்பேடு பட்டயங்கள்

செ. இராசு
கொங்கு ஆய்வு மையம் ஈரோடு - 638011.
2007

கொங்கு வேளாளர்க் குடியேற்றமும், காணியூர்களும், எல்லைத் தகராறுகள், காணிப்புலவர்கள், குல குருக்களும் திருமடங்களும், குலமாணிக்கர்கள், காணி உரிமை மாற்றம், சமுதாய நல்லுறவுகள், சிறப்புச் செய்திகள், பாளையப்பட்டுக்களின் வம்சாவளி போன்ற பலவற்றையும் அறிந்து கொள்கிறோம்.

தமிழகச் செப்பேடுகள் தொகுதி 1

தி. ஸ்ரீ. ஸ்ரீதர்
தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை
2005

இந்நூலில் 40 செப்பேடுகள் இடம் பெறுகின்றன, ஒன்று வெள்ளிப்பட்டயம், இரண்டு தெலுங்கு எழுத்தில் உள்ளவை.

மதுரை நாயக்கர் மன்னர், சேதுபதி மன்னர்கள், அரியலூர் மழவராயர்கள், நத்தம் பாளையப்பட்டு நாயக்கர், கூளப்பநாயக்கர், தென்காசி சீவல்லபப் பாண்டியன், வீரபாண்டியன் கட்ட பொம்மன், விக்டோரியா மகாராணியார், ஆங்கிலேய அரசுத் தளபதி பானர்மேன் ஆகிய ஆட்சியாளர்கள் இச்செப்பேடுகளில் குறிக்கப் பெறுகின்றனர்.

இச்செப்பேடுகளில் கோயில்களுக்கான நில மானியம், கோயில் வழிபாட்டிற்காக ஒதுக்கப் பெற்ற சந்தைகளின் வரிகள், 24 மனைச் செட்டிகள் உலோகமாதேவிபுரம் செட்டிகள், செங்குந்தர், பன்னாட்டார்,

கற்பூரச் செட்டிகள், அம்பலக்காரர், குயவர், கார்காத்த வேளாளர், ஆசாரிமார், மள்ளர், குடும்பர், பள்ளு, பண்டாரம் ஆகியோரின் மடங்கள் சமூகத் தலைவர்களின் விருதுகள், நாட்டாண்மைச் சிறப்புகள், சில சமூகத்தினரின் மண உறவு, நெறிமுறைகள் கூறப்பெற்றுள்ளன.

இரு செப்பேடுகளில் இசுலாமியரைப் பற்றிய குறிப்புகளும் இடம் பெறுகின்றன. கி.பி. 16ஆம் நூற் - முதல் 19ஆம் நூற். வரையிலான சமுதாய ஆய்வு, மொழிஆய்வு, வரலாற்றாய்வுக்குப் பயனளிக்கும்.

தருமை ஆதீனச் செப்பேடுகள்

பதிப்பாசிரியர்

டாக்டர். கோ. தெய்வநாயகம்

அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம் தருமபுரம்.
1988

1. குருத் தருமபுர சாதனப் பட்டயம் (கி.பி. 1586)
2. வைத்திய நாதசுவாமி திருநாமத்துக் காணிப் பட்டயம்
3. பூமிதான சாசனப் பட்டயம் (கி.பி. 1690)
4. அபிஷேகக் கட்டளை மகமைப் பட்டயம் (கி.பி. 1693)
5. தொண்டைமானார் கட்டளைப் பட்டயம் (கி.பி. 1804)
6. இராயர் பூமிதானப் பட்டயம் (கி.பி 1613)
7. கட்டளை மகமை தரம் சாசனப்பட்டயம் (கி.பி. 1763)
8. பூமிதானச் சர்வமானியத் தாமிர சாசனப்பட்டயம் (கி.பி. 1763)
9. திருப்பணி தர்மம் + சர்வமானியம் சாதனப் பட்டயம் கி.பி. 1767- கி.பி. 1770)
10. சிராமலை, மாதுரு பூதேசுவரர் அபிஷேகக் கட்டளைப்பட்டயம். (கி.பி. 1685)
11. நெல்லையப்பர் காந்திமதியம்மை அர்த்த சாமப் பள்ளியறை நிவேதனக் கட்டளைப் பட்டயம் (கி.பி. 1693)
12. சிதம்பரம் குருபூஜை அன்னதான மடக்கட்டளைப் பட்டயம் (கி.பி. 1802)
13. பழமலை அபிஷேகக் கட்டளைப் பட்டயம் (3, 7, 8, 9) பட்டயங்களாக - தஞ்சை மராட்டியர் செப்பேடுகள் (-செ. இராசு நூலில் இடம் பெற்றுள்ளன.)

திருவாவடுதுறை ஆதீனச் செப்பேடுகள்

ச. கிருஷ்ணமூர்த்தி – 2000

1. ஆவுடையார் கோயில் செப்பேட்டுத் தொகுதி
2. பெருநாவலூர்ச் செப்பேடு
3. கீழை விஜயபுரம் செப்பேடு
4. படையேற விட்டான் நல்லூர் மற்றும் வெள்ளாற்றில் வென்றான் நல்லூர்ச் செப்பேடு
5. பருவூர், விலானூர், குறுச்சிகள் செப்பேடு
6. ஒக்கூர்ச் செப்பேடு
7. ஏயூர் மங்கலம் செப்பேடு
8. கொல்லன் வயல் செப்பேடு
9. பராக்கிரம பாண்டிய மழவராய நல்லூர்ச் செப்பேடு
10. பொன்னம்பல நல்லூர்ச் செப்பேடு
11. சாத்தக்குடிச் செப்பேடு
12. பிள்ளை வயல் செப்பேடு
13. புத்தூர் கீழ்க்குடிச் செப்பேடு
14. கீழ்க் கரத்தூர்ச் செப்பேடு
15. மையூர், களக்குடி, ஏகப்பெருமாள் மேலை விஜயபுரம் செப்பேடு
16. சுந்தர பாண்டிய நல்லூர்ச் செப்பேடு
17. கணக்கன் வயல் செப்பேடு
18. நாட்டுச்சேரிச் செப்பேடு
19. திருப்பெருந்துறைச் செப்பேடு 1
20. திருப்பெருந்துறைச் செப்பேடு 2
21. பெருங்காட்டுச் செப்பேடு
22. தச்சமல்லிச் செப்பேடு
23. புல்லுக்குடிச் செப்பேடு
24. புதுவைக் கோட்டைச் செப்பேடு
25. திருப்பொற்கோட்டைச் செப்பேடு – 1
26. மன்னார் சலாபச் செப்பேடு

27. பொசுக்குடிச் செப்பேடு
28. திருப்பொற் கோட்டைச் செப்பேடு 2
29. நாட்டுச்சேரி செப்பேடு - 2
30. வள்ளைக் குளம் செப்பேடு
31. விலானூர்ச் செப்பேடு
32. காளத்தி ஏந்தல் செப்பேடு
33. கோடி மங்கலச் செப்பேடு
34. குறிச்சிச் செப்பேடு
35. முத்துச் சிலாபச் செப்பேடு
36. திருப்பெருந்துறைச் செப்பேடு 3
37. களக்குடிச் செப்பேடு
38. காலகமருது என்ற பழைய நகர்ச் செப்பேடு
39. காராளர் குடிச் செப்பேடு
40. அமரடக்கி உள்பட ஏழூர்கள் குறித்த செப்பேடு
41. பிறாந்தனில் ஏந்தல்கள், குறிச்சிகள் செப்பேடு
42. மிழலை நாட்டுக் காடங்குடிச் செப்பேடு
43. மிழலைக் கூற்றத்துப் பிள்ளைமார் செப்பேடு
44. அழுஞ்சியேந்தல் செப்பேடு
45. மணமேல் கொடிச் செப்பேடு
46. சதுரகிரி குழந்தையானந்த பண்டார மடத்துச் செப்பேடு
47. சேமன் கோட்டைச் செப்பேடு
48. குருவிக் கரம்பைச் செப்பேடு
49. திருவீதி மிழலைச் செப்பேடு
50. திருவாரூர்ச் சீமை நாகப்பட்டணம் செப்பேடு
51. சீர்காழி, திருவெண்காடு, திருக்கடவூர்ச் சீமை மகமைப் பட்டயம்
52. ஏழுசீமை மாகாணத்து நாட்டார்ச் செப்பேடு
53. திருக்கடவூர் ஏழுமாகாணச் செப்பேடு
54. தில்லையாழி மகமைப் பட்டயம்
55. குத்தாலம் செப்பேடு

56. சிறுபனையூர்ச் செப்பேடு
57. திருவிடை மருதூர்ச் செப்பேடு
58. சூரியனார் கோயில் ஆதீனப்பட்டயம்
59. பாலைக்காட்டுச்சேரிச் செப்பேடு
60. திருப்பைஞ்ஞீலிச் செப்பேடு
61. திருமங்கலம் பேட்டைச் செப்பேடு
62. சாத்தூர்ச் செப்பேடு
63. சாத்தூர், நென்மேனி, வடமலைபுரம் செப்பேடு
64. ஏழாயிரம் பண்ணைப் பட்டயம்
65. சிவகாசிச் செப்பேடு
66. தட்டப்பாறை வணிதம் பட்டயம்
67. ஆறுமுகனேரிச் செப்பேடு
68. வீரபாண்டியக்கட்டபொம்ம நாயக்கர் வழங்கிய திருச்செந்தூர்ச் செப்பேடு
69. சுசீந்திரம் செப்பேடு
70. சிவந்திபுரம் செப்பேடு
71. சங்கரங்கோயில், புளியங்குடி, வாசுதேவநல்லூர்ச் செப்பேடு
72. நெல்லை ஈசானமடத்துச் செப்பேடு - 1
73. நெல்லை ஈசானமடத்துச் செப்பேடு - 2
74. அம்பாசமுத்திரச் செப்பேடு
75. சாத்தாங்குளச் செப்பேடு 1
76. காசிச் செப்பேடு
77. திருநெல்வேலிச் செப்பேடு
78. குற்றாலம் செப்பேடு - 1
79. குற்றாலம் செப்பேடு - 2
80. அரித்துவார மங்கலச் செப்பேடு

ஸ்ரீ சங்கரமடம் வரலாறு

[ஆழ்வியல் ஆய்வு]

வித்துவான். வே. மகாதேவன்

1. விஜய கண்ட கோபால தேவனின் செப்பேடு
2. வீரநரசிம்மரின் முதலாம் செப்பேடு
3. வீரநரசிம்மரின் இரண்டாம் செப்பேடு
4. கிருஷ்ண தேவராயரின் முதலாம் செப்பேடு
5. கிருஷ்ண தேவராயரின் இரண்டாம் செப்பேடு
6. கோல்கொண்டா சுல்தானின் மேல்பாக்கச் செப்பேடு
7. விஜயரங்க சொக்கநாதரின் செப்பேடு

சோழர் செப்பேடுகள்

1. S.I.I. Vol.III Part III No 205 : திருவாலங்காட்டுச் செப்பேடுகள் - முதல் இராசேந்திரன். ஏடுகள் : 31
2. S.I.I. Vol.III Part III No 207 : திருக்களர் செப்பேடு மன்னார்குடி - வட்டம் - தஞ்சை மா. ஏடுகள் : 5முதல் இராசேந்திரன். பாரிஜாதவனேசுவரர் கோயில்.
3. No. 208 இராஜாதிராஜன் I
4. No. 209 குலோத்துங்க சோழன்
5. No. 210 திரிபுவனச் சக்கரவர்த்தி இராஜராஜ தேவர்
6. No. 211 குலோத்துங்கன் III
7. No. 212, No. 213 திருச்செங்கோடு செப்பேடு. இராஜகேசரி வர்மன்
8. No. 128 சென்னை அருங்காட்சியகச் செப்பேடுகள். உத்தமசோழன் செப்பேடு

❖ ❖ ❖

ஆவணத்தில் செப்பேடுகள்

1. ஆவணம் : 1 : ஆ 1: 50-52
   "ஆடுதுறைச் செப்பேடு" *அ. அப்துல் மஜீத்*
2. ஆவணம் : 2 : 21: 76-79
   "நாட்டார் பட்டயம்" *சி. இலட்சுமணன்*
3. ஆவணம் : 3 : 22: 56-63
   "புதுக்கோட்டை வட்டார நிலத்தரசுகள் செப்பேடுகள்"
   இரா. இராமமூர்த்தி
4. ஆவணம் : 4 : 16: 55-58
   "இராமநாதபுரம் செப்பேடு" *எஸ்.எம். கமால்*
5. ஆவணம் : 5 : 8: 17-20
   "பனையூர் மறவர் பட்டயம்" *கரு. இராசேந்திரன்*
6. ஆவணம் : 5 : 9: 21-22
   "இராமேசுவரம் செப்பேடு" *செ. இராசு*
7. ஆவணம் : 7 : 27: 74-81
   "அரித்துவாரமங்கலம் வேளாளர் செப்பேடு"
   செ. இராசு - குடவாயில் பாலசுப்பிரமணியம்
8. ஆவணம் : 7 : 30: 90-96
   "தொரவலூர் பட்டயம்" *பெ.கு. சாந்தகுமார்*
9. ஆவணம் : 7 : 31: 97-100
   "திங்களூர் செப்பேடு" *பெ.கு. சாந்தகுமார்*
10. ஆவணம் : 8 : 6: 30-35
    "கொல்லிமலைச் செப்பேடு" *வெ.இரா. துரைசாமி*
11. ஆவணம் : 8 : 21: 82-84
    "ஏழுமலை மாதாந்தம் சுப்பிரமணிய சுவாமிகோயில் செப்பேடு"
    ஜி. சேதுராமன்
12. ஆவணம் : 8 : 23: 87-91
    "கொடுமணூர் செப்புப் பட்டயம்" *நா.க. கணேசன்*

13. ஆவணம் : 8 : 24: 92-95
"கொத்தமங்கலம் செப்புப் பட்டயம்" *அ. சந்திரபோஸ்*

14. ஆவணம் : 8 : 29: 104-06
"புதுக்கோட்டை பேட்டை ஆஞ்சனேயர் கோயில் செப்பேடு" *மு. துரைராசு*

15. ஆவணம் : 10 : 31: 72-74
"உத்தமபாளையம் செப்பேடு" *மா. சந்திரமூர்த்தி*

16. ஆவணம் : 10 : 32: 32-75
"கற்பூர செட்டி எனப்படும் உப்பிலிய நாயக்கர் மடச் செப்பேடு" *ஸ்ரீதரன்*

17. ஆவணம் : 11 : 21 : 55-58
"வீரகேரளரின் இருசூர் செப்பேடுகள்"
இரா. நாகேசுவர சிவம்

18. ஆவணம் : 12 : 42: 87-89
"தூரன் குலச் செப்பேடு" *செ. இராசு*

19. ஆவணம் : 12 : 43: 90-91
"சின்ன நல்ல காலக்கதோழ் உடையோர் பட்டயம்"
ச. செல்வராஜ்

20. ஆவணம் : 12 : 44: 92-93
"இராமகிரி கோயில் செப்பேட்டுச் சாசன நகல்"
மா. சந்திரமூர்த்தி

21. ஆவணம் : 12 : 45: 94-96
"சிவகங்கை தருமர் கோயில் செப்பேடு" *ந. வள்ளி*

22. ஆவணம் : 13 : 38: 89-90
"அழகன்குளம் செப்பேடு" *எஸ்.எம். கமால்*

23. ஆவணம் : 13 : 39: 91-94
"நாஞ்சியூர் செப்பேடு" *கி. ஸ்ரீதரன்*

24. ஆவணம் : 13 : 40: 95-98
"செவ்வாய்பேட்டைச் செப்புப்பட்டயம்" *ப. காசிலிங்கம்*

25. ஆவணம் : 14 : 25: 63-69

"வீரபூபதியின் வாய்த்தலைக் கூடலூர்ச் செப்பேடு"

எ. சுப்பராயலு

26. ஆவணம் : 14 : 31: 86-90

"மதுரை தர்மராசா கோயில் செப்பேடு"

மா. சந்திரமூர்த்தி

27. ஆவணம் : 14 : 33: 93-97

"மராட்டிய அரசியின் செப்புப் பட்டயம்"

கா. சண்முகம் - பா. ஜெயக்குமார்

28. ஆவணம் : 14 : 40 : 106-108

"ஆழ்வார்பேட்டைச் செப்பேடு" *மா. சந்திரமூர்த்தி*

29. ஆவணம் : 14 : 42: 111-113

"பொன்னமராவதி செப்பேடு" *கரு. இராசேந்திரன்*

30. ஆவணம் : 15 : 12: 53-54

"புதுக்கோட்டை வட்டாரச் செப்பேடு" *கரு. இராசேந்திரன், இரா. பாஸ்கரன், டி.சி. தமிழரசன், இரா. இராமமூர்த்தி*

31. ஆவணம் : 15 : 36 : 105-107

"தூக்க நாயக்கன் பாளையம் செப்பேடு" *செ. இராசு*

32. ஆவணம் : 15 : 39 : 114:117

"எலவனூர் தொட்டிய நாயக்கர் செப்பேடுகள்"

நாக. கணேசன்

33. ஆவணம் : 16 : 35: 106-112

"கோலம் மன்னன் இராமன் இரவிவர்மன் செப்பேடு"

கேசவன் வெளுதாட், எ. சுப்பராயலு

34. ஆவணம் : 17 : 15: 108-109

"புதுக்கோட்டை அருங்காட்சியகச் செப்பேடு"

செ. கோவிந்தராஜ்

35. ஆவணம் : 17 :17 111-114

"செட்டிக்குளம் முருகன் கோயில் வரலாறு கூறும் செப்பேடு"

இல. தியாகராஜன், பெ. இரவிச்சந்திரன்

36. ஆவணம் : 17 : 18 115-120
"இடைப்பாடி பருவதராஜகுல மீனவர் செப்பேடு" *அரு. பரமசிவம்*

37. ஆவணம் : 18 : 1:1 -15
"பாண்டியன் நெடுமாறனின் இளையான்புத்தூர் செப்பேடு" *எ. சுப்பராயலு. வெ. வேதாசலம்*

38. ஆவணம் : 18 : 39 108-109
"நீலம்பூர்ச் செப்பேடு" *செ. இராசு*

39. ஆவணம் : 18 : 40 110-113
"திருமக்கோட்டைச் செப்பேடுகள்" *ஆ. துளசேந்திரன்*

40. ஆவணம் : 18 : 41 114-117
"சேங்குடிச் செப்புப்பட்டயம்" *நாக. கணேசன்*

41. ஆவணம் : 18 : 42 118-121
"வடசேரிச் செப்புப்பட்டயம்"

42. ஆவணம் : 19 : 40 : 104
"உஞ்சினி, ஆனந்தவாடி செப்பேடு" *இல. தியாகராஜன்*

43. ஆவணம் : 19:41 110
"மும்முடிச் சோழப் பேட்டை (முசிறி) செப்பேடுகள்" *நாக.கணேசன்*

44. ஆவணம் : 19 : 42 122
"அரசு நிலையிட்ட ஒப்பிலா மளவராயர் செப்பேடு" *ஆறுமுக சீத்தாராமன், இல. தியாகராஜன்*

45. ஆவணம் : 19 : 43 124
"அணியாப்பூர் பாளையம் செப்பேடு" *நாக. கணேசன்*

46. ஆவணம் : 20 :
"வில்லியனூர் செப்பேடுகள்" *ந. வேங்கடேசன்*

நந்திவர்ம பல்லவ மல்லனுடைய
காசாக்குடிச் செப்பேடுகள்

பதினொரு ஏடுகளில் பொறிக்கப் பெற்றுள்ள இச்செப்பேடுகள், முன்னாளில் பிரெஞ்சுக்காரர்களின் ஆட்சிப் பகுதியாகத் திகழ்ந்த காரைக்காலுக்கு நான்கு கிலோ மீட்டர் தொலைவில் காசாக்குடி என்னும் சிற்றூரில் 128 ஆண்டுகளுக்கு முன்னர், கி.பி. 1879 ஆம் ஆண்டு புதுச் சேரியைச் சேர்ந்த ஜுல்ஸ் தேலா போன் (Mous Jules de la Fou) என்பவர் கண்டறிந்தார்.

வாகூர்ச் செப்பேடுகளைக் கண்டுபிடித்தவரும் இவரே. இச் செப்பேடு டாக்டர் ஹுல்ஷ் என்பவரால் 'தென்னிந்தியச் சாசனங்கள்'' இரண்டாம் தொகுதியில் மூன்றாம் பாகத்தில் மைப்பிரதியுடன் வெளியிடப் பெற்றுள்ளது. இச்செப்பேடு குறித்து பல செய்திகளைக் கொடுத்து பிரெஞ்சு மொழியில் ஒரு கட்டுரையும் எழுதியுள்ளவர் ழுலீயன் வென்சான் (Julien Vinson) என்பவராவார். இவர்தான், தமிழ்த் தாத்தா உ.வே.சா. அவர்களுக்கு வில்லைப்புராணத்தையும் அனுப்பி வைத்தார்.

இச் செப்பேடுகள், இப்போது சென்னை அரசினர் பொருட்காட்சிச் சாலையில் காப்பாக வைக்கப் பெற்றுள்ளன.

இச் செப்பேடுகள் கோத்திருந்த வளையத்தின் முகப்பில் உள்ள முத்திரையில் இடப்புறம் நோக்கிப் படுத்திருக்கும் காளையின் உருவமும் அதன் மேலே இலிங்கத்தின் உருவம் ஒன்றும் காணப் பெறுவதாக டாக்டர் ஹுல்ஷ் குறிப்பிட்டிருக்கிறார்.

முதல் ஏடும் இறுதி ஏடும் ஒரு பக்கம் மட்டும் எழுதப் பெற்றுள்ளன. ஏனைய ஒன்பது ஏடுகளும் இரு பக்கங்களும் எழுதப் பெற்றுள்ளன. ஆகமொத்தம் இருபது பக்கங்கள் அடங்கியது இச் செப்பேடுகள். இறுதி பக்கம் ஐந்து வரிகளும், ஏனைய பக்கங்களில் ஏழு ஏழு வரிகளும் உள்ளன. எனவே, செப்பேடுகளில் மொத்தம் 138 வரிகளில் எழுதப் பெற்றுள்ளன.

பெரும்பகுதி சமக்கிருத மொழியில் உள்ளது.

104-133, வரிகளில் தமிழில் உள்ளது.

137 தமிழ் - 133...138 வரிகள் சமக்கிருதத்தில் உள்ளன.

சமக்கிருதப் பகுதி காவியம் போன்று உரைநடையிலும் செய்யுளிலும் எழுதப் பெற்றுள்ளது. தொடக்கத்தில் கடவுள் வாழ்த்தாக ஒன்பது சுலோகங்கள் உள்ளன.

முதலில் பரப்பிரம்மத்தையும், பின்னர் திருமாலின் திருவிக்கிரம அவதாரத்தையும், மூன்றாவதாகத் திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளையும் தனித்தனிச் சுலோகங்களில் வாழ்த்தியுள்ளார் கவிஞர். நான்காவது சுலோகம் அரிகரனுக்கு வணக்கம் தெரிவிப்பதாகும். மற்றொரு சுலோகத்தால் திருமகளையும், வேறொன்றால் பகவதியையும், அடுத்த சுலோகத்தில் கணேசனையும் வணங்கியுள்ளார்.

எட்டாம் சுலோகம் பல்லவ குலத்தை வாழ்த்துவதாக அமைக்கப் பெற்றுள்ளது. ஒன்பதாம் சுலோகம் செப்பேடு அமைத்த அரசனான நந்திவர்மனைப் புகழ்ந்துரைக்கிறது.

பின்னர், வம்சத் தலைவர்கள், புராணங்களில் வரும் பிரம்மா, அங்கிரஸ், பிரகஸ்பதி, சம்யு, பரத்வாஜர், துரோணர், அசுவத்தாமன் ஆகியோர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு சுலோகத்தால் வருணிக்கப் பெற்றுள்ளனர்.

இந்திரனால் அனுப்பப் பெற்ற மேனகை என்னும் தேவ மாதிடம் அசுவத்தாமனுக்கு மகனாகப் பல்லவன் பிறந்ததை 17ஆம் சுலோகம் சுட்டுகிறது. அடுத்து சத்திரியர்களின் பெருமையை விரித்துக் கூறுகிறது. அந்த வம்சத்தில் அசோகவர்மன் தோன்றினான் என்ற செய்தியை 19இல் கூறியுள்ளது.

பின்னர் பல்லவர்களைப் புகழ்ந்து விரிவாக உரைநடையில் கூறப்பெற்றுள்ளது. 34ஆம் வரி முதல் 50 ஆம் வரி வரை அந்த வம்சத்தில் கந்தவர்மன், கவந்தவர்மன், காணகோபன், விஷ்ணுகோபன், வீர கூர்ச்சன், வீரசிம்மன், சிம்மவர்மன், விஷ்ணுசிம்மன் முதலியோர் வெற்றிப் புகழுடன் ஆண்டு வானுலகம் சென்றனர். இதிலே பல்லவர்கள் குமாரக் கடவுளுடன் பலவாறு ஒப்பிட்டுக் காட்டப் பெற்றுள்ளனர். பின் அவனிசிம்மன் என்போன் தோன்றினான். இன்னும், மாளவத்தையும், பிறகு களப்ர, மாளவ, சோழ பாண்டிய மன்னர்களையும் சிங்கள

கேரள வேந்தர்களையும் வெற்றி கொண்ட செய்தியை அறிகிறோம். பின்னர் முதலாம் மகேந்திரவர்மன், வாதாபி கொண்ட நரசிம்மவர்மன், இரண்டாம் மகேந்திரவர்மன், முதலாம் பரமேஸ்வரவர்மன், இரண்டாம் நரசிம்ம வர்மன், இரண்டாம் பரமேசுவரவர்மன் ஆகியோர் குறிக்கப் பெற்றுள்ளனர்.

பரமேசுவர வர்மனுடைய ஸ்தானத்தில் நந்திவர்மன் ஆண்டுவந்தான் என்ற செய்தி ஒரு சுலோகத்தில் விவரிக்கப் பெற்றுள்ளது. சிம்ம விஷ்ணுவின் தம்பியான பீமவர்மன் அவனுக்கு முன் ஆறாம் தலை முறையில் வந்த முன்னோர் பீம வர்மன், புத்த வர்மன், ஆதித்தியவர்மன், கோவிந்த வர்மன், ஹிரண்ய வர்மன், நந்திவர்மன் என்ற முறையில் வம்சம் முறையாக விரிவாக்கம் பெறுகிறது.

தானம் வழங்கிய அரசனான நந்திவர்மனுடைய புகழ் செய்யுளாகவும் உரைநடை நடையாகவும் விரிவாகக் கொடுக்கப் பெற்றுள்ளது.

நந்திவர்மனுடைய ஆட்சியின் 22ஆம் ஆண்டு நடக்கும் போது, இச்சாசனத்தில் கண்ட தானம் வழங்கப்பெற்றது. ஊற்றுக்காட்டுக் கோட்டத்தின் ஊற்றுக்காட்டு நாட்டில் கொடுகொள்ளி என்ற சிற்றூரில் பழைய தேவதானப் பிரம்ம தேயங்களை நீக்கி எஞ்சிய பகுதிக்கு ஏக தீரமங்கலம் என்ற புதுப்பெயரிட்டு, பாரத்துவாஜ கோத்திரத்தில் பிறந்து சாந்தோக சூத்திரத்தைப் பின்பற்றுபவரான சாமவேதி ஜ்யேஷ்டபாத சோமயாஜி என்பவர்க்குப் பிரம்ம தேயமாக அளிக்கப் பெற்ற செய்தி விரிவாக உரைக்கப் பெற்றுள்ளது.

முக்கிய அமைச்சனான பிரம்மஸ்ரீராஜன் அல்லது பிரம்ம யுவராஜன் என்பவன் விண்ணப்பத்தால், கோரசர்மன் ஆணத்தியாக அரசன் தானத்தை அளித்தான் என்று டாக்டர் ஹூல்ஷ் கொண்டிருக்கிறார். அதன் விளைவாக, சாசன வாசகத்தில் தானம் பெற்ற சோமயாஜியின் புகழும், விண்ணப்பம் செய்ததாகக் கருதப் பெறும் முக்கிய மந்திரியின் புகழ் பிறழ்ந்தும் எழுதப் பெற்றதாகக் கருதினார்.

ஒரு பகுதியை மந்திரிக்கும், ஏனைய பகுதியைத் தானம் வாங்கினவனுக்கும் ஏற்றிக் கூறியுள்ளார் அவர்.

தானம் வழங்கப் பெற்ற நிலத்தின் நான்கு எல்லைகளும் கொடுக்கப் பெற்றுள்ளன. சமக்கிருதப் பகுதியைத் திருவிக்கிரமன் என்பவன் இயற்றினான் என்றதோடு முடிகிறது.

இறுதியிலே, தானத்தைக் காப்பவர் பெறும் பயனும், அழிப்பவர் அடையும் துன்பமும் கூறப்பெற்றுள்ளன.

சாசனத்தில் இரண்டு பட்டி நிலம் குறிக்கப் பெறுகிறது. ஒரு பட்டி நிலம் ஆயிரத்து இரு நூறு குழி கொண்டது என்பதைக் கூரம் செப்பேடு சுட்டுகிறது.

அதனால் இரண்டு பட்டி என்பது இரண்டாயிரத்து நானூறு குழி கொண்டதாகும். தஞ்சை மாவட்டம் கும்பகோணம் வட்டத்திலுள்ள உடையாளூரில் இன்றைக்கும் இரண்டாயிரத்து நானூறு குழி கொண்ட நிலம் (எட்டு ஏக்கர்) ஒரு பங்கு என்றே குறிக்கப் பெற்று வருகிறது.

சிம்ம விஷ்ணுவின் காலத்திலிருந்தே இந்தப் பல்லவ மன்னர்களின் புகழ் இச்செப்பேட்டுச் சாசனத்தில் வருணிக்கப் பெற்றுள்ளது. சிம்ம விஷ்ணுவின் தம்பியான பீமவர்மனின் வழித்தோன்றலே இச்சாசனத்தை வழங்கிய நந்திவர்மப் பல்லவன். சிம்ம விஷ்ணுவிற்குப் பிறகு பீமவர்மன் ஆட்சி புரிந்தான் என்று இச்சாசனம் தெரிவிக்கிறது.

மகேந்திரவர்மன் புள்ளலூரில் எதிரிகள் அனைவரையும் அழித்தான் என்று கூறப்பெற்றுள்ளது. புள்ளலூர் என்பது காஞ்சிக்கு வடக்கே பதினைந்து கல் தொலைவில் (தக்கோலம் என்ற புகைவண்டி நிலையத்திற்கு அருகில்) உள்ளது. நந்திவர்மனின் தலைநகர் தலைவாசலில் வந்து போரிட்ட பகைவர் யார் என்பது விளங்கவில்லை. அவன் சாளுக்கிய அரசனாகவே இருத்தல் வேண்டும் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

புலிகேசியின் கல்வெட்டு கூறும் செய்தியால், அவன் காஞ்சி வரையில் வந்தான் என்பது தெரிகிறது. புலிகேசியின் எட்டாம் ஆட்சியாண்டில் வெளியான மருட்டூர்ச் செப்பேடுகளும் இதை உறுதிப்படுத்துகின்றன.

புலிகேசியின் பட்டத்தரசியாகிய கதம்பமாதேவி தன் தந்தைக்குச் செய்திருந்த வாக்குறுதியை நிறைவேற்றிய மகிழ்ச்சியைக் கொண்டாடுவதற்கும், தன்னுடைய சொந்த நலத்தைத் துறந்து, நாட்டை விட்டு, சோறு தண்ணீர் இல்லாமல் பல துன்பங்களுக்கு ஆளாகியதையும் பொருட்படுத்தாமல், மேற்குக் கடற்கரையில் உள்ள மங்கலபுரத்திலிருந்து கீழைக் கடற்கரைக்கு வந்து புலிகேசியின் கீழ்ச்

சிற்றரசனாகப் பதவி வகித்த ஆளுப அரசன் நிரந்தரமான பலனை அடைவதற்காகவும், அப்பதவி வழங்கப் பெற்றதாகும்.

தான் வெற்றி கொண்ட வேங்கி நாட்டை ஆட்சி செலுத்தத் தனக்கு நம்பிக்கைக்கு உரிய ஆளுப வம்சத்து அரசகுமாரன் ஒருவனைத் தன் பிரதிநிதியாகப் புலிகேசி அமைத்தான். தொண்டை மண்டலத்திற்கும் வேங்கி நாட்டிற்கும் இடைப்பட்ட பகுதியில் ஆளுப அரசர்கள் நாடாள்வோராக அடுத்த நூற்றாண்டிலும் இருந்திருக்கிறார்கள்.

நந்திவர்மப் பல்லவனுடைய 15ஆம் ஆட்சியாண்டில் நெல்லூர் மாவட்டம் மல்லம் என்னும் ஊரிலிருந்து கிடைத்த ஒரு தமிழ்க் கல்வெட்டிலிருந்து நாம் அறிகிறோம். அவ் ஊரிலுள்ள சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்கு ஆளுப அரசன் ஒருவன் அறக்கொடை நல்கியுள்ளான். சாளுக்கிய அரசனை ஆணத்தியாகக் கொண்டு அது அளிக்கப் பெற்றது. ஆளுப அரசனுடைய விண்ணப்பத்தால் சாசனம் அளிக்கப் பெற்றதென்பது தெளிவாகக் காணப் பெறுகிறது.

தொண்டை மண்டலத்தின் வடக்கில் உள்ள நாட்டைப் புலிகேசி வென்று அடிமைப்படுத்தியதால், கதம்ப அரசன் ஒருவனுக்கு அவன் மகள் கொடுத்த வாக்குறுதி நிறைவேறியதென்றே சாசனம் தெரிவிக்கிறது. அவள் எதற்காக என்ன வாக்குறுதி அளித்தாள் என்பது தெளிவாகத் தெரியவில்லை.

மருட்டூர்ச் சிற்றூரை வழங்கியதற்குப் புலிகேசி கூறும் இரண்டு காரணங்களும் ஒன்றுக் கொன்று தொடர்புடையனவாகவே இருத்தல் வேண்டும். புலிகேசி தந்தைக்குப் பின் முறையாக ஆட்சியை அடையவில்லை. தந்தை இயற்கை எய்தியபோது அவன் சிறுவனாக இருந்ததாலே, அவனுடைய சிற்றப்பன் மங்களேசன் அரசுரிமையை ஏற்றானாம். புலிகேசிக்கு உரிய வயது வந்ததும், அவனிடத்தில் நாட்டை ஒப்படைக்கவில்லை. அவனே நீண்ட காலம் அனுபவித்து வந்தான். தனக்குப் பிறகும் அரசுரிமை புலிகேசிக்குச் செல்லாமல், தன் மகனுக்குச் சேர வேண்டும் என்று விரும்பி அதற்கான ஏற்பாடுகளையும் செய்து வந்தான். புலிகேசி அதனை எதிர்த்தான். அதன் விளைவாக மங்களேசன் ஒரே சமயத்தில், தனக்குப் பின் அரசு தன் மகனுக்கே செல்ல வேண்டும் என்பதற்கான முயற்சி, விவாதத்திற்குரிய இராச்சியம், தன் உயிர் ஆகிய மூன்றையும் துறக்க நேர்ந்தது என்று சாசனம் வெகு அழகாகக் கூறுகிறது.

இதிலிருந்து மங்களேசனிடம் புலிகேசி கொண்டிருந்த பகையை அறியலாம். மருட்டூர்ச் சாசனத்தின் வாசக அமைப்பு இதே விவரத்தை வேறு விதமாக எடுத்துக் கூறுகிறது. மகா கூடம் மகுடேஸ்வர ஆலயத்தின் தூணில் உள்ள கல்வெட்டில் கொடை வழங்கிய மங்களேசனைப் பற்றிய வருணனைத் தொடர்கள் மாற்றிப் புலிகேசியைப் புகழ்ந்து கூறுகிறது. அதில் மங்களேசனைக் காட்டிலும் புலிகேசி மேம்பட்டவன் என்பதை ஒவ்வொரு தொடரும் எடுத்துக்காட்டுகிறது.

சொந்த நாட்டைத் துறந்து தொலைதூரம் வந்து அரசப் பிரதிநிதியாகப் பகை நாட்டை நிர்வகிக்க வந்த ஆளுப அரசனுக்கு நிரந்தரப் பலனைக் கொடுப்பதற்காகவும் வழங்கப் பெற்ற அத்தானம், தன் சிற்றப்பனான மங்களேசனிடமும், காஞ்சிபுரத்து அரசனான பல்லவனிடமும் கொண்டிருந்த விரோதத்திற்கு வஞ்சம் தீர்ப்பதே போன்று அமைந்துள்ளது. புலிகேசிக்கும் அவன் மாமனாரான கதம்ப அரசனுக்கும் எதிராக, மங்களேசனுக்கும் அவனுடைய ஆதரவு பெற்ற கதம்ப வம்சத்து அரசகுமாரன் ஒருவனுக்கும் - பல்லவ மன்னன் அளித்த ஆதரவுக்கு எதிராகவே புலிகேசி அதைச் செய்தான்.

முதலாம் நரசிம்மவர்மன் இலங்கையையும் வாதாபியையும் வெற்றி கொண்டதால், இராமன் அகத்தியன் ஆகியவர்களைக் காட்டிலும் மேம்பட்டவன் என்று வருணிக்கப் பெற்றுள்ளான்.

தன்னிடம் வந்து அடைக்கலம் புகுந்த மானவர்மனுக்கு உதவி செய்து, அவனை இலங்கைச் சிம்மாசனத்தில் அமரச் செய்த செய்தியையும், அதே போன்று அவன் வாதாபியை வெற்றி கொண்டதைப் பற்றியும் முன்னரே எடுத்துக் கூறியதை அறிவோம்.

இரண்டாம் மகேந்திரவர்மன் எதிரிகளுக்கு வச்சிராயுதம் போன்றவன். தேவர் முதலியோருக்கான தர்ம காரியங்களை வழங்கினான் என்றும் கூறப் பெற்றுள்ளது. கடிகைகளும் அவன் காலத்தில் வளர்ச்சியுற்றன. அவன் மகனான இரண்டாம் நரசிம்மவர்மனும் கடிகையைப் பெரிதும் வளர்த்தான். அவன் மகனான இரண்டாம் பரமேச்வர வர்மனுக்குப் பிறகு, அவனுடைய இடத்தில் நந்திவர்மன் அரசு செலுத்தி வருவதாகக் கூறி, நந்திவர்மனைப் பற்றிய செய்திகளைக் கூறத் தொடங்குகிறது.

சிம்ம விஷ்ணுவின் தம்பியான பீமவர்மனுடைய வழியில் தோன்றியவனே நந்திவர்மன் என்பதும் அவனுடைய முன்னோர்களைப் பற்றிய இளைய மரபைப் பற்றிய விவரமும் இச்சாசனத்திலேதான் குறிக்கப் பெற்றுள்ளன.

மேல் கசாக்குடிச் செப்பேடுகள்

ஏடும் வாசகமும்



முதல் ஏடு பின்புறம்

1 ஸ்வஸ்தி [||*] ஜயதி ஜகத்ரய[2] ஜந்மஸ்திதி ஸம்ஹ்ர[3] காரணம்பர ப்ரஹ்ம [1*] ஸத்யமநந்தமநாதி ஜ்ஞாநா
3 2 3

2 த்மகமேம்ருதபதம்|| [1*] மாயாவிநாயேந பதத்ரயார்த்திநா ஸத்ய. ப்ரவ்ருத்தேந புனர்ப
3 3 2 3 3 4 3

3. லேர்ம்முகே தி [1*] விசக்ரமே த்ரிர்ஜ்ஜகதஸ்ஸ்வாஸாத்க்ருதோ[4] ஸவோஸ்து பூத்யை பகவான் ஸ்த்ரி[5]
3 3 4 4 3
விக்ரம [:||] [2*] மௌலாவி

4. ந்துதர: பணாத ரதர [·*] ஸ்கந்தே பவானீதரோ வாமே காமதர· ப்ரணா [ம*] நிரதே கம்காதரோ
3 4 2 4 4 4 4 4 4 3 3 4

5. மூர்த்தநி [|*] மூத்தோ[6] தூளி தரோ களே கரதர : கேசேஷு வேணீதர : பாணோ[7] சூலத ரோ ஹர :
3 4 4 4 3 3 4 4 4

6. புரஹர: புஷ்ணாதுவோ மங்களம் || [3] கண்டே கௌஸ்துப காளி காபரணயோ[8] ச்சாயாம் பராம்பிப்ர
3 2 4 4 2 3 4

7. தௌ தைத்யத்தம்ஸந சக்ரபட்டஸதரௌ ச்யாமாவதாதௌ ருசா [|*]
3 3 4 4 3



இரண்டாம் ஏடு - முன்புறம்

8. வ்யாயாம ரோமாஞ்சிதோ[9] பாயாஸ்தாம் பவதஸ்த்ரிவிக்ரமஹரோ[10] ஸம்ப்ருத்த தேஹாந்தரௌ || [4*]
4
பத்மா பத்ம[ர] ||

9. ஸீநா பத்மோஜ்வல பாணிபத்ம[12] யுகளாவ [1*] ப்ரீத்யாபச்யது கரிணா[13] கரத்ருத கநககட ஸுஸ்நாநா [|| 5*]
4 4

10 த்ருஷ்ட்வா லல[ர*] டே நயநம்ப்ரியேவ14 காமோநாயாமீச்வா இத்யு பாஸ்தே [1*] விஷ்ணோ [:*]
4
ஸ்வஸா ஸா பகல
4 3

11. த்யலக்ஷ்மீமார்யாகதர்யாம் க்ஷிணுதா[த்] க்ஷணேந || [6*] கைலாஸ கௌர: ப்ருடு நாக[15] கக்ஷ்ய:
3

12 ப்ரோத்த்ருத்த[16] கர்ண்ணோப் ருஹதேகதத்த:[1*] மாதங்கவக்த்ரோ மத நிக்ந (நே) நேத்ரோ
3 4 3 3 3 3 4
பூயாதவிக்நாய விநா
4 3 4

13. யகோவ:|| [7*] யோ தேவா திவிதாநயாகதபஸாம் காலே பல ந்தந்வதே யே தேவா பவிஷட்ஸு
3 3 3 3 2 4

14. கர்ம்மஸு ரதாஸ் ஸத்யா ஸிஷஸ்ஸம்ய நாஸ்தே[17] தேவா த்விதயே குலக்ரம புவா பக்த்யா ஸமாராதித: பா
3 3 4 4 4

இரண்டாம் ஏடு பின்புறம்

15. யாஸு: பரமேஸ்வராஸ்சிரதரம் ஸ்ரீபல்லவாநாம் கு[ல*] || [8*] ஹிரண்யகர்போஜயதி ப்ரஜாபதி [:*] ஸ்ரீய:
4

16. பதிஸ்ஸாக்வரகேதந: க்ஷிதிம் [|*] ஸஹேலகல்லேல ஸமுத்ரவாரணா பலந்விபா[18] யஸ்ய ஸ ப [ந்ந] [19] வா
3

17. ரணா: || [9*] ஸ்வஸ்தி|| நம: ஸ்ரீயை || ப்ரதம மஜநிவெதா: ப்ரஹ்ம யோநி: ஸ்வம்பூர்நளிந நயந20 நாபேருல்ல
3 3 4 4

18. ஸத்புண்டரீகான்21 || [1*] அக்ருத கவச நாநாந்தத்வதோ த்ருஷ்ட 22 வர்த்மா ஸகலபுவந ஸர்க்கவ்யாப்ருதி
3 3 3 3

19. வ்யாக்ர கர்மா|| [10*] தஸ்மாத்ஸம்கரிதாத்ம காமசரிதோ யஞேம் கிரா ஜஜ்ஞிவாந்தீப்தா கிரஹூதாஸநா தது[23]
3 3 3 3 3 3 3

20. ரிதோ24 ப்ராணாஸநா பாப்மநாம்[|*] ஸப்தர்ஷித்வமவாப்தவா - ந்ருஷி வ்ரு[ஷ] காக்ஷவா[25] தப:
ப்ராப்தவான் புத்ரோ

21. மாநஸஹாப26 தாபஹதருச்சே தார்தடம்கோத்தம: |: [||] தஸ்மா தம் கிர ஸோகிரா27[||] ரஸநிதீந்நீதி28 ப்ரஜா
2 3 2 3 3 3 4

மூன்றாம் ஏடு - முன்புறம்



22. நாம் பதிஸ்சக்ரேயம் குருமாத்ம ஸாத்ஸுக்ருதிநாம் பார்த்தாத்ரிதா மாக்ரஜா யத்ப்ரஜ்ஞாபலஸஷ்ரேயேண
3 4 4 3 3

23. ஸுதக்ரீடாம் ஸுரஸ்த்ரீஜநோ சத்தே29 ஸ்மைரம ஸம்ஸ்மரந் திநக்ருத ஸ்ஸம்பத்விபத்த்யாப்ருதிம்||[12*]
3 3 4
ஸம்யுஸ்ஸ பம்யு

24. ரநஹம்யுரஜாய [தா] ஸமாதம்ஹோ விகாதக்ருதஹர்பதி துல்ய தேஜா [|*] அந்தர்ஹிதே ஸிகிநி தை
4 3 2 3

25. வதஹவ்ய வாஹோ பூத்வா வ்யதத்த ஸிகிக்ருத்யமபி ஸ்வவீர்யான்[30] [13*] கோத்ரஸ்ய கர்த்தா குணகௌர
4 2

26. வேண ஸ்ரீபல்லவாநாம்முனிரஸ்ய ஸூநு [|*] ஜாதோ பரத்வாஜ இதி த்ரிவேதீம்யா[31] பஸ்யதிஸ்மாத்ரி நிபாந்தபோ
3 4

27 பி: || [14*] த்ரோணே பவத்ருஹிண ஏவ[32]தத: குருணாந்த்ரோ ணாபிதாந கலஸாம்புஜலப்த ஜன்மா[|*] ஏணா
3 4 3 3 4 4 3 3 4

28. ஜிநோபஹித ஜித்வரவேதி கேதுர்பாணாஸ்த்ர வேத சதுரர்ண்ணவ பாரத்ருஸ்வா || [15*] தஸ்மாத்யஸ்மி[ந்]
3 3 3
க்ருத்த்யனி[33] க்ருஷ்ணா
3 4

மூன்றாம் ஏடு - பின்புறம்



29. ர்ஜுநபீமாஸ்ஸஸ்த்ர த்யாகஞ்சக்ருரவிக்னம் பய நிக்நா [|*]| 34 விஸ்வஸ்தாநாத்விஸ்வநீயோ முநிராஸீதஸ்வத்தாமா
4 3 4 4 4 4 3 2

30. மன்மதசத்ரோரவதார: || [16*] ஜாதஸ்தத ஸ்வபத ஸம்கித மாநஸேந ஸக்ரேண தம்ப்ரதி விஸர்ஜ்ஜி
2

31. தமேநகாயாமாபல்ல[35] வைரநபிம்ருஷ்ட ஸமுத்ரநேமி ஸ்ரீபல்லவஸ் ஸபதி பல்ல[வ*] ஸம்ஸ்தரேஷு || [17*]
3

32 தேஜ: பரம்ப்ராஹ்ம மநூர்த்திதோவி[36] ஸக்ஷாத்ரமுச்சேரப[37] ஐத்ஸ்வ பாவி [1*] அம்போ தராதப்யுப [ல*] ப்தஜ
2 4 4 4 4 3 3 4

33. ந்மா தாஹாத்மகோ நந்ம[38] ஸநி: ப்ரக்ருத்யா11 [18*] அஸோகயந்நாமத க்ஷிதீஸாத்ஸ[39] ஸோகயந்ஸம்யதிஸ
3

34. ம்முகீநாந் [|*] யஸோகலம்கந்ததஸிந்த [ு] தாஸோப்ய[40] ஸோக வர்ம்மா ததஆவிரா[41]ஸீந் || [19] தத: ப்ரப்ருத்யக
2 3 4 3 3 4 2

35. ண்டகலபுவந மணலாத்ம லாத்க[42] ரணாகண்டித விக்ரமபர : [|*] பரி பாலித ஸகல வர்ணாஸ்ரம வ்யவஸ்தா
3 4 வ 2 3 2



நான்காம் ஏடு - முன்புறம்

36. விஸேஷ [:*] ப்ரபப விஷ்ணு: விஷ்ணோ[43] ரம்ஸாவதார ஹாவ[44] வம்ஸாவ தார பல்லவா சாந்நிகில
3 4 2
புவி புவந பாவ
4 4

37. நதயா கம்காவதாரஇவ ச நிர்மலஸ்ஸமவர்தத [|*] யத்ரோதபூதா ஸர்வ்வேபி ஸர்வ்வத்ரா விஹத[45] ஸக்தயோ
3 4

38 மஹாஸேந: பாவகஜந்மாந: பந்மோ[46] த்பவாஸ்ஸு ப்ரஹ்மண்யா·குமாரா இவ யே கு[47] ஜபல விபுல ப்ர
3 4 3 3 3

39. தாபாநல ஸோஷிதாஸேஷத்விஷதவாய்யாவீய்யாண[48] வார்ண்ணஸ: ப்ரகீர்ண்ண நிர்ம்மல கீர்த்தி சந்த்ரி
3 3

40. கா நிஷ்காலித[49] ஸகலகலிகால கலக காலுஷ்யா: ஸமுந்நத சரிதாதி ஸயாச லோத
3

41. யஸவோ்த்தித மித்ரமண்டலாநுராகா யுவதி ஜநஹ்ருதய ஹாரிணவாகு ராய மாண[வ] பு:

42. ஸௌந்தர்யாஸ்சந்தனதரவ இ[வ] தக்ஷிணேஸா[50] விவர்த்தமாந ஸௌர பாஸ்ஸுரதர [வ*] இவாநந்யதே ஜோவிலம்
4



நான்காம் ஏடு பின்புறம்

43. வபிதாந்மச்சாயா [:*] பூ ஷண இவ பரஹிதகரா [பா] ஸ்வந்தஸ்ச ஸப்தாகமா இவ ப்ரக்ருதி ப்ரத்ய யாகமோ பேதா
2 4 3 3 3 3

44. நிரபவாந்த வ்ரா்த்தி குணேஸ்ச[51] நந்தநா அவ்ய[52] பாரஜாதா கநாகமா அவ்யஜ[53] ளாஸ்ச க்ருவாள பர்வ்வத பர்யந்த[ர*]
3 4 3 4 3

45. ம் ஸப்தத்வீப ஸப்தஸாகராலம் க்ருதாம் ஸகலாந்திவமிவ திவபேதி: குவ த் புவஸ்பதயோ[54] குதஜ்ஞதே[55] [||*] யே
3 3 3 3 3 3 4 3

46. ஷாஞ்ச ஸமஸ்த ஸாஸ்த்ர ஸஸ்த்ர நிர்ஜ்ஜிதோர்ஜ்ஜித ஸமிதய: அமித விக்ரமா: க்ரமார்ஜ்ஜித தர்ம்மக

47. ர்மாணா[56] கண்டிதகலய: பண்டிதமதய: லக்ஷிதமூர்த்தயோ ரக்ஷித கீதய[57] ஸ்ஸமஸ்த வஸுந்தரோ
2 3 4

48. த்வஹந துரந்தர ஸ்கந்தா : கந்தவர்ம்ம காணகோப விஷ்ணு கோப வீரகூ [ர்*] ச்ச வீரஸிம்ஹ ஸிம்ஹ
3 4 4 4 3 3 3

49. வர்ம்ம விஷ்ணு ஸிம்ஹ ப்ரப்ருதயஸ் ஸத்ருதூம (கேம) கேதவோ மித்ர மாநஹேதவ:ஸர்வ்வ மர்யாதாஸேநவ:[58]
4 3



ஐந்தாம் ஏடு - முன்புறம்

50. [கேதகே] வ்யுநீ யுரவநிப[த*] ய:[||*] த[த] நு க[த] ந கர்ம்ம வ்யாவ்ருதஸ்ஸாத்ரவாணா [||] அபவதவநி [ஸிம்]
3 3 3 4 3

51. ஹ: ஸிம்ஹர்வ் விஜிஷ்ணு: [|*] மாளவமத களப்ரர்ம் மாளவஞ் சோள பாண்ட்யௌ நிஜகுஜ[59] பலத்ருப்தன் 60ஸம்ஹள
2 4 3 3 3

52 கேரளாம்ஸ்வ ||[20*] ததோ மஹீமந் வஸிஷன் மஹீந்த்ரோ மஹேந்த்ர வர்ம்மே தி மஹேந்த்ரகீர்த்தி [:*] அஸேஷயாமா
3 3 3

53. ஸவிஸேஷிதாஜ்ஞோ யா புள்ள லூரே த்விஷ தாம் விஸேஷான்||[21*] லம்கா ஜயாதரி தராம பர [ர]
3 4

54. க்ரம ஸ்ரீருத் த்ருத்த ஸத்ரு[61] குலஸம்க்ஷய தூமகேது : [|*] வாதாபி நிர்ஜ்ஜய விளம்பித கும்பஜந்மா வீரஸ்ததோ
4 3 4

55. ஜநிஜயீ நரஸிம்ஹவர்ம்மா || [22*] தஸ்மாதஜாயத நிஜாயத பாஹு தண்டஸ்சஞ்சாஸநீ ரிபுகுலஸ்யம
3 3 3

56. ஹேந்த்ரவர்ம்மா [||*] யஸ்மத்ப் ரப்ருத்யலம வர்த்தத தர்ம்ம கர்ம்ம-தே வத்விஜந்ம விஷயம் கடிகஞ்ச தாது [|*]
3 4 3 4 4 3 4 3

||[23*] இச்சா
2

ஐந்தாம் ஏடு – பின்புறம்



57. தேய ஸகலாவநி பாலலோக [:*] பர்சாத்பபூவ பரமேஸ்வர போதவர்ம்மா [|*] பூதி[62] பராம் வஹதி
4 3 3 4

58. பூதபதிர்வ் வ்ருஷாம்கோ கட்வா [ம்*] ககேதுர சலஸ்திதீரத்புதோ ய: [24*] தேவப்ராஹ்மண [ஸ] ாத்க்ருதாத்ம விபாவோ[63]
4 2 3 2 3 4 3 4

59. ய[:] க்ஷத்ரசூளாணி ச[ா*] துர்வைத்ய மவீவிதன்[64] ஸ்வஸடிகாம்[65] பூதேவதாத்பக்தித.[66] [|*] [ஸ] ம்ப்ராப்தே நரஸிம்
3 4 4 3 3 4

60. ஹதா[67] ஸ்வவபுஷா நாம்நா ச திக்வ்யாபிநா ஜாத[:*] ஸ்ரீபரமேஸ்வரஸ்ய ஸகலஸ்யாம் கா[வத] ாரஸ்தத: || [25*]
3 3

61. ஏதா தநாநி தை தாநி[68] யஸோதநாநி ஜேதா கலேர்வ்விலஸிதாநி பபூவ தஸ்மாத்[|*] நேதா நயஸ்ய[69]த
4 3 4 3 4 4

62. ஷணாதிக்ருதஸ்ய மார்க்கவாதா ஜகதி[70] பரமேஸ்வர போத தஸ்ய ப்ரஸாஸ்திபதம்ருத்திமதாஸமுத்ர[ா*] வர்ம்மா [||[26*]
4 3 4 3 3 3 4 3

63. தாஜ்ஞாபலேந ஜிதஸத்ருவ்ருத: ப்ரஜாபி: [1*] மான்யோ நயேந மநுதம் ப்ரதி[71] நந்திவர்ம்மா விஸ்தீர்ண்ண பல்லவ[கு]
3 3 3



ஆறாம் ஏடு - முன்புறம்

64. லார்ண்ணவ பூர்ண்ணசந்த்[ர:*] || [27*] ஷஷ்ட [.*] ஸ்ரீஸிம்ஹவிஷ்ணோரநு பநிரநுஜ: ப்ராபவத் பீமவர்ம்மா
2 3 4
தேவ [:*] ஸ்ரீபு த் த வ
4 3 4

65. ர்ம்மா புதஜநமஹித: பஞ்சம. பல்லவேந்த்ர: [|*] துர்யஸ்சாதித்ய வர்ம்மா துலித குலிஸ [ப்ருத்ய] ஸ்ய கோவிந்த
3 4 3 4 3

66. வர்ம்மா தார்த்தீயீகோத்விதீய. க்ஷிதிப்ருத [ஸூப்ரு] தாம்ஸ்ரீ ஹிரண்ய ஸ்ஸரண்ய: ||[28*] ஸம்க்ராமே விஜய: கலாப
3 4 3 4

67 ரிசயே கர்ண்ணீஸூத: கார்ம்முகே ராமோ வாரணந் தத்ர வாத்ய விஷயே வத்ஸேஸ்வர [:*] ஸ்ரீதர [1*] காமோ
3 4

68. வாமவிலோசநாஸூ கவிதாபத்தே[72] ஸஆத்ய கவிஸ் தந்த்ரா வாபவிதௌ ஸ்வந்நயபரோ தர்ம்ம ப்ரஜா
3 3 4 3 4 4 4

69. ரஜ்ஞுநே || [29*] ஸ்வாமீந பல்லவாநாம் கலபரணபடுஸ் ஸாத்விக ஸ்ஸார்வ்வ பௌமோ த்ரவ்யோ வ்யாயாம வித்யா
4 4 3

70. விநயகுண குருர்வ்வர்த்ததே ஸார்த்தம்ருத்த்யா [|*] ஹைரண்யோபீம வர்க்கயோ ஹரிசரணபரஸ்ஸூர்தத[73]
3 3 3 4 3 4 3 4 4 3 3 3 4
மாத்ரந்வவா

ஆறாம் ஏடு - பின்புறம்



71 யோ லக்ஷ்ண்யோ ரோஹிணீஜ [:*] [ஸ்வலப] ஸுசரிதோ நந்திவர்ம்மா நரேந்த்ர: ‖ [30*] தேந ராஜாதிராஜ பரமே

4 3 4

72. ஸ்வ [ரேண] பரமேஸ்வர போதராஜபத ப்ரஸாஸ நபரேண பரம பத விஷக்த வ்யாப்ருதோந் நித்ரசே

3

73. த[ஸா] பரமேஷ்டி பதபம்கருஹ யுகள விகளித தூளி தூஸர ஸிரஸாவு வரஸ்க்ருத[74] தேவப்ரா

2 3 3 3 4 4 3

74. ஹ்மண பூஜநாஸநேந திரஸ்க்ருத கலிகால கலிகாபிளநா[75] வ்யஸ நேந விவர்த்தமான ப்ரதா

3 4

75. பாநல பரிஸோஷிதா மித்ர மண்டலேந விவர்த்தமாநாநு ராக ரஸபரி தோஷித மித்ர மண்டலே

3 3 3 3 3

76. ந[ஸ] கல புவந ஸாம்ராஜ்ய தீக்ஷாதக்ஷ தக்ஷிணகரேண ஸர்வ்வோ ர்வ்வீ ஹ்ரந்மகுட மாணிக்க[76] கோணஸாண

4 3 3

77 மஸ்ருணித சரண யுகளேன பல்லவகுல நந்தன வன லக்ஷ்மீ லதா லளித வேஷ்டன கல்ப வ்ருக்ஷே

3

ஏழாம் ஏடு - முன்புறம்



78. ண க்ஷத்ரிய மல்லேந பல்லவ மல்லேந பப்ப பட்டாரக பாதாதுத்யாந வர்த்தமான மஹிம்நா
3 4 3 4 3 4

79. நந்திவர்ம்ம நாம்நா மஹாகுண ஸலில நிதி ஸலில ஸம்வர்த்தந ஸோம ராஜேந மஹாராஜேந ஸா
3 3 4

80. ம்ராஜ்ய [ஸம்வத்ஸரே] த்வாவிம்ஸே வர்த்தமானே சந்த: பாரவார பா[ர] காய ஸ்வரஸ மதுர ஸாமகாய சந்த: கல்ப
3 2 3 3 2 3

81. வ்யாகரண ஜோதிஷ நிருக்த ஸிக்ஷாச்சந்தோ விசதி[77] ஷடங்க - ஸம்ஸித[78]ஸ்வாத்யா யாத்யய
2 3 3 4

82. நாய பத த[ர்]ம வாக்ய தர்ம்ம வஸ்த[79] தர்ம வித்தாய ஸ்ருதி ஸ்மிருதி ரஸாயந பாநாய கர்ம்ம காண்கஜ்ஞா
3 4 4 2

83. ந காண்ட பண்டிதாய லோகயுக்தி கலாரகோஸலா' பேஸலாய[80] காவ்ய நாடகாக் யாயகே[81]
3 3 2

84. திஹாஸபுராண பரிணதாய கிம்பஹுநா ஸர்வ்வஜ்ஞான விஜ்ஞாந திஷ்ணாதாய[82] ஸர்வ்வ கர்ம்மானுஷ்டான நிஷ்டி
3 2 2



ஏழாம் ஏடு பின்புறம்

85. தாய ஸுவ்ருத்தாய புவன பவன தீ பாய மாநா [யா*] பிஜந(ா) ஸு ஜநாய நிராக்ருத[83] ஸமப்த தமஸ்தயாம
4 4 3 4

86. த்த்யம லோகைக மித்ராய லோகமித்ரேண ஸர்வ்வகு[ண*] ஸாரஸந்தோ ஹஸாகர கம்பீரேண ஸ்ரீம
3 4 3 3 3 3 4

87. தாஹ்ரீமதா வபுஷ்மதா புருஷேதர பாஷேண புருஷ விஸேஷேண ப்ரஹஸ்பதி

88. நேவ தேவஸ்ப தேர்ப்புவஸ்ப தேர்ஜ்ஜந நயந ஹ்ருதய நந்திநோ நந்திநோ : பல்லவப தேந்நி[84]ஸ
3 4 3 3 3

89. ர்ஸ்ஸ நீதி விநீதேந வித்வந் முக்யேந முக்ய மந்த்ரிண[ா*] தீரேண வீரேண ப்ரஹ்ம க்ஷத்ரமயீம் ஸரியமவி
3 2 2 4 3

90. கலாமவிசலாஞ்ச ஸ்ரீநந்தி போதரா[ஜன்] பக்தி ஸமமாசந்த்ரம ஸ்தாரகம் பிப்ராணேன பிப்ர[ா]
3 4 3 3 4 3 4

91. ணேந குலம் குலஜ்யேஷ்டேந ஜ்யேஷ்ட புத்ரேண ப்ரஹ்மர்ரீ ராஜேந ஸ்ரீலதஸ் ஸாக்ஷாத் ஸோம
2 ? 3



எட்டாம் ஏடு முன்புறம்

92. ராஜேந ததைவ ஸர்வ்வகுண ஜ்யோஷ்டேந ஜ்யேஷ்டேந போ த்ரேண புத்ரிணாம் போத்ரிணாஞ்ச துரமா
4 2 2 4

93. ரோபிதாய ஸுஜந்ம புண்யாய த்விஜந்ம கண்யாய ப்ரஹ்ம வேதிநே ஜ்யேஷ்ட பாத ஸோமயாஜிநே ச
2 3 3 3 3 2 3 2

94. ந்தஸ் சந்தாநு வர்தநாய சந்தோ க ஸூத்ராய பரத்வாஜபேயாதி க்ரதுகோத்ராய பரத்வாஜ கோத்ராய
3 2 3 3 2 3 3 4 3 3 4 3 3

95. தோண்டக ராஷ்ட்ர ப்ரஹ்ம லோகாயமாந பூநிய வாஸ்தவ்யாய தோஷ தரித்ராய வேஷவிஸிஷ்டா
3 3 3 3 3

96. யைக புருஷாய த்விலோக சித்தநோய[85] த்ரிவர்க்ஸ[86] ஸாதகாய சதுர்வ் வேதாய பஞ்ச மஹா[பூ] தபரா
3 4 4

97. ர்த்தாய ஷடம்காய ஸப்த ஸப்தி ப்ர[தி]மாய ஸுகுணாய ஸுப்ரா ஹ்மணாய ஸ்வயமேவ ப்ரஸாதா
2 3 3 3

98 துந்திவந கோஷ்டகே தஸ்மிந்நேவ ராஷ்ட்ரே[|*] ப்ராம்பலயூர [|*] தக்ஷிணஸ்ச ஸஏவ ப்ரத்யங் மணத்பாக்க: கோ
3 3 2 3

எட்டாம் ஏடு பின்புறம்



99. ள்ளி பாகஸ்ச[|]*] உதங் வேளிமா நல்லூர் ஏததவதி சதுஷ்டயா ந்தப்பூத: கோடு கொள்ளி ரிதி ப்ரதமநாமா ப்ரஹ்மதே
3 3 4 3 4 2 3 3

100.யி பாவ ஏகதீர மம்களமிதி சரமநாம் நா க்ராமஸ் ஸாமான்ய நிவர்த்த னத்வய மர்யாதயா நிரஸ்தபுரா
4 4 3 3 3 3

101. தந தேவதான ப்ரஹ்மதேயந் நிரஸ்த கு[டு*]ம்பி ஸர்வ்வ பரிஹாரா ப்யந்த ரீகரணேன தூரஸரிதோ வேகவத்யாஸ்ச தீர
3 3 3 4 3

102. லயத[டா] காச்ச யதோப பாதம் ருத்த்வாச உதகபோகோக்ரஹம் க்ஷேத்ரமாராமோ நிஷ்குடஞ்ச
2 3 3 4 3 4 3 3

103. த்யே ததப்யந்தரம் ஸர்வ்வோ ப்ரஹ்மதேயந் தத்த இதி விஜ்ஞுப்திர்ப்ரஹ்ம யுவ ராஜஸ்ய[||]*] ஆஜ்ஞுப்திர்க்
3 3 3
கோரசர்மா[87] [||*] ஸ்வஸ்தி

104 ஸித்திரஸ்து: [||] ஆக்ருத்ரிமஸ்த்ரயி விதிக்ரம க்ரது ப்ரவர்த்திக:[88] [|*] ஸமஸ்த ஸாஸ்த்ர தத்வவித் ப்ரஸஸ்தி
3 4 4
[க்ருத்*] த்ரிவிக்ரம.|| கோ

105. னோ

ஒன்பதாம் ஏடு முன்புறம்



ஒன்பதாம் ஏடு பின்புறம்

பத்தாம் ஏடு முன்புறம்



106 டு.... .... ப்ரஹ்ம.... ....
பத்தால் கோரசர்ம்மன்னா

107. ....

108 ... பாரத்வாஜ கோத்ராய சந்தோ க ஸூத்ராய பூநி வாஸ்தவ்யாய ..... ஸோமாய [ா*]
3 2 3 3

109லிருந்து 133ன் ஒரு பகுதிவரை தமிழில் உள்ளது. தமிழ்ப்பகுதியில் காண்க

133. [|*] பூமிதாநாத் பரந் தாநந்ந பூதநந்ந பவிஷ்யதி [|*] தஸ்யைவ ஹரணத்ப[ா]
3 3 4 4

பதினோராம் ஏடு – .முன்புறம்

பதினோராம் ஏடு – பின்புறம்



134 பந்நபூதந்ந பவிஷ்யதி|| [32*] பஹுூபிர்வ்வஸுூத்தா[93] தத்தா பஹுூபிர்சாது பாலிதா[|*] யஸ்ய யஸ்ய யதா

4 4 3 4 3 4 3 3 4 2

135. பூமி[94] தஸ்ய தஸ்ய ததா பலம் || [33*] ஸ்வதத்தாம் பரதத்தாம் வாயோ ஹரேது[95] வஸுூந்தராம் [|*] ஷஷ்டிவர்ஷ

2 2 3 3 4 2

136. ஸஹஸ்ராணி விஷ்டாயாஞ்ஜாயதே க்ருமி [:*] ||[34*] ஸ்வஸ்தி ஸ்ரீ பரமேஸ்வர மஹாகாஷ்ட காரிணா லிகித

2 2 2

137. ம் [1*]

138. ஸ்வஸ்தி ஸித்திரஸ்து நம · // 0 // உ

3 4

அடிக்குறிப்புகள்

2. ஜகத்த்ரய
3
3 ஸம்ஹ்ருதி
4 க்ருதெள
5 பகவாம்ஸ்த்ரி
4 3
6. மூர்த்தெள
7. பாணௌ
8 பரணயோ
4
9. மாஞ்சிதெள
10 பரௌ
4
11. பத்மாபத்மா
3 3 3
12 பத்மோஜ்வலபாணிபத்ம
3 3
13 கரிணீ.. கரிணா
14 நயநம்பியேல
4
15. ப்ருது
2
16. ப்ரோத்ருத்த
3
17. ஸம்யதா: தே
18 வாரணாம் பலத்வபோ
3 3
19. ஸபத்ந
20. 'நயந'
21 ரீகாத்
22 நாம் தத்த்வதோ த்ருஷ்ட
3
23. தீப்தாக்நி. ஸஹ°தாஸ
3 3
24 ரித
25 காஙிக்ஷா
26 ஏவ
27. கிராம்
3
28 நீதிர்நீதி
4
29. தத்தே
4
30 வீர்யாத்
31 ய.
32 பவத்த்ருஹிண ஏவ ஏ
4 3 3
33 ந்க்ருத்யதி
4
34. விஸ்வ ஸ்தாநாம்வி
35. மேநகாயாம் 1 ஆபல்ல
36. ப்ராஹ்ம மநூத்திதோபி
3 2
37. முச்சைர
38 நந்வரநி ·
39. க்ஷஸராந்ஸ
40 யஸோ 'குலங்கேத தமிந்து பாஸோ'ப்ய
3 4 4
41 ராஸீத்
42. மண்டலாத்மஸா
3
43. ப்ரபவிஷ்ணுர் விஷ்ணோ
4
44. இவ அல்லது ஏவ
46 பத்மோ
3
47 புஜ
4
48 வீர்யார்ண வார்ண ப ண்ண
3

முதலில விடபபெற்றுப் பினனால் வரியின அடியில் எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளது

49. நிஷ்காஸித என்று வாசிக்கவும்
50 முதலில் ணே என்று எழுதி, பிறகு
'ணா' என்று திருத்தப்பட்டிருக்கிறது
51 நிரபவாத வ்ருத்திகுணாஸ்ச என்று வாசிக்க
3 3 4 3
52. அப்ய
53 அப்யஜ
54 திவஸ்பதிர்புலம்பம்
4 4
55. புஞ்ஜதே
4
56 கர்ம்மணா
57. கீர்தய:
58. ஸேதவ
59. புஜ
4
60. த்ப்தான்
3
61 ஸத்ரு
62 பூதிம்
63. விபவோ
4
64 மவீவ்யதத்
4
65 ஸ்வகடிகாம்
4

66. பூதேவதா பக்தித·
4 3 4
67. ஸம்ப்ராப்தோ நரஸிம்ஹதாம்
68 தயி தாநி
3
69. நயஸ்யதி
4
70 ஜகந்தி
3
71. நநுஸம்ப்ரதி
72. பந்தே
3 4
73 ஸூத்த
3 4
74 புரஸ்க்ருத
75 கலிகால காலிக பீட
3
76 ஹ்ருந் மகுட மா ணிக்ய
77. விவ்ருதி
78 ஸம்கீத
79 வஸ்து
80 கலாகௌஸல பேஸலாய
81 க்யாயிகே
2
82. நிஷ்ணாதாய
83 ஸமஸ்த

84 ர்நிஸர்க்கந்திவிநீதேந
3 3
85. சிந்தநாய
86 த்ரிவர்க்க
3 3
87 கோர சாம்மா
88 ப்ரவர்த்தக
89 (தமிழ)
93 வஸூதா
4
94 பூமி
95. ஹரேத்து

காசாக்குடிச் செப்பேடு

(செப்பேட்டின் 138 ஆம் வரிக்குப் பிறகு)

மொழி பெயர்ப்பு (கருத்துரை)

மங்களம் பெருகட்டும்.

1. மூவுலகையும் படைத்துக் காத்து அழிப்பதற்குக் காரணமானதும், உண்மையானதும், முடிவற்றதும், தொடக்கமில்லாததும், அறிவே உயிரானதும், இடமானது ஒன்றேயாகும். அது வெற்றியடைகிறது,

2. அன்றொரு நாள் நடைபெற்ற மாபலியின் யாகத்தில் மாயாவியாக வந்து மூன்றடி மண் கேட்டு, விஸ்வரூபத்தால் மூன்று உலகங்களையும் மூன்றடியால் அளந்த திருவிக்ரமன் உங்களுக்கு மேன்மையை அளிக்கட்டும்.

3. தலையில் பிறையைச் சூடியவனும், தோளிலே படம் எடுத்தாடும் பாம்பினைப் பெற்றிருப்பவனும், இடப்பக்கம் உமையைக் கொண்டிருப்பவனும், தலையிலே கங்கையைப் பெற்றிருப்பவனும், உடலிலே திருநீற்றைப் பூசியிருப்பவனும், நஞ்சுண்ட கண்டத்தை உடையவனும், முடியைச் சடாமுடியாகக் கொண்டிருப்பவனும், கையிலே சூலத்தை ஏந்தியிருப்பவனும், திரிபுரத்தை அழித்தவனுமான சிவன் உங்களுக்கு மங்களத்தை அளிக்கட்டும்.

4. கவுத்துபமணி காளிகாபரணம் இவைகளின் உயர்ந்த ஒளியைக் கழுத்தில் தாங்கியவரும், அசுரர்களைக் கொல்வதற்காகச் சக்ராயுதத்தையும், மழுவையும் ஏந்தியிருப்பவர்களும், கறுப்பும் வெண்மையுமான நிறத்தை உடையவர்களும், திருமகள், மலைமகள் ஆகியோர்களுடைய ஒளியுடைய கடைக்கண் பார்வையின் கூர்மையினால் மெய்சிலிர்த்து புளகிக்கும் தனித்தனி உடலைப் பெற்றிருக்கும் தன்மையுடையோர் திருவிக்கிரமன், அரன் ஆகிய இருவரும் உங்களைக் காப்பாற்றட்டும்.

5. தாமரை மலரை இருப்பிடமாகக் கொண்டவளும், ஒளியுடைய இரு தாமரை மலரைக் கொண்டவளும், பிடியானைகள் பொற்குடங்களை ஏந்தி, அதிலுள்ள நீரால் நீராடும் திருமகள் அன்புடன் உங்களைப் பார்க்கட்டும்.

6. எவருடைய நெற்றிக் கண்ணைப் பார்த்து (சிவன் என்று) மயக்கத்தால் அஞ்சியவனாய், அதற்காக நான் வரவில்லை என்று கூறி மன்மதன் உபாசித்தானோ. அந்தத் திருமாலின் சகோதரியான பகவதி நொடிப் பொழுதில் தவ்வையை (மூதேவி) அகற்றட்டும்.

7. கயிலை மலை போன்ற வெண்மையானவனும், பெரிய பாம்பை இடையிலே அரைஞாணாகக் கட்டியிருப்பவனும், யானை முகத்தவனும், அசைந்தாடும் காதுகளை உடையவனும், ஒற்றைத் தந்தத்தை உடையவனும் மூடிய கண்களையுடையவனுமாகிய விநாயகன் தடைகளை அகற்றட்டும்.

8. தானம், யாகம், தவம் ஆகியவைகளுக்கு உரிய காலத்தில் பலனைக் கொடுக்கும் வானுலகத் தேவர்களும், ஆறு கர்மாக்களைச் செய்வதில் ஊக்கம் கொண்டவர்களும், பலிக்கும் மெய்யான ஆசிகளை அளிப்பவர்களும், புலனை அடக்கியவர்களுமான பூவுலகத் தேவர்களும், குலத்தில் முறைப்படி உண்டான பக்தியினால் ஆராதிக்கப் பெறும் பரமேசுவரர்களான இருவகைத் தேவர்களும் செல்வம் நிரம்பிய பல்லவர்களுடைய குலத்தை நீண்ட காலம் காப்பாற்றட்டும்.

9, செல்வங்களின் அதிபதியும், விடைக் கொடியோனும், எதிரிகளின் கூட்டங்களைத் தடுத்து நிறுத்தும் கஜப் படையை உடையவனும், குடிமக்களின் குறைகளைப் போக்குவோனுமாகிய இரண்யவர்மனின் மகனுமாகிய நந்திவர்மன், அலைகளையுடைய கடல் சூழ்ந்த நிலஉலகை வெற்றி கொண்டான்.

நன்மையே பெருகட்டும். திருமகளுக்கு வணக்கம்.

10. திருமாலின் நாபியிலிருந்து தோன்றிய தாமரை மலரிலிருந்து தோன்றிய நான்முகன், யாராலும் எழுதப் பெறாத வேதத்தின் தத்துவத்திலிருந்து அனைத்து உலகங்களையும் பரந்த நோக்கோடு தோற்றுவித்தான்.

11. அவரிடமிருந்து அங்கிரசு ஒரு யாகத்தில் தோன்றினார். வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றியவர் அக்னியை விட அதிகம் ஒளியோடு திகழ்பவர் துறவிகளிலே சிறந்தவர். சப்த இரிஷிகளில் ஒருவராகக் கருதக் கூடியவர். அறியாமை இருளைப் போக்குபவர்.

12. அங்கிரசிடமிருந்து பேச்சுகளில் நீதியுடன் கூடிய மக்களுக்குத் தந்தையுமான பிரகஸ்பதி தோன்றினார். தேவர்களின் அரசனும், திருமாலின் அண்ணனுமாகிய இந்திரன் அவரைத் தம் குருவாகக் கருதினான். அவருடைய ஞானத்தின் வலிமையால் தேவமகளிர் கதிரவனின் எழுச்சியும் வீழ்ச்சியும் கருதாமல் சுரதக் கிரீடையை அனுபவிக்கிறார்கள்.

13. அவரிடமிருந்து நான் என்ற தலைகனமில்லாத சம்யு தோன்றினார். அவர் பழிகளை நீக்குபவர். கதிரவன் போன்ற ஒளியுடையவர். ஒரு சமயம் அக்னி மறைந்தபோது, அவிசை ஏற்படும் அக்னியாக மாறி, தம் வலிமையால் அக்னியின் செயலைச் செய்தவர்.

14. அவருடைய மைந்தன் கோத்திரத்தைத் தோற்றுவித்து, தம் குணமேன்மையால் திருவின் கடாட்சம் வரப்பெற்ற பல்லவ குலத்தைத் தோற்றுவித்த பரத்வாஜர் தோன்றினார். அவர் தம் வலிமையால் மூன்று மறைகளையும் மலைகளின் உருவில் கண்டார். (தெளிவாக அறிந்தார்.)

15. பின்னர் துரோணர் என்ற யாக பாத்திரமாகிய தாமரையிலிருந்து பிறந்தவரும், வேதி (மேடை) உருவம் தீட்டிய கறுப்பு மான் தோலை வெற்றிக் கொடியாகக் கொண்டவரும், தநூர் வேதத்தின் நான்கு கிளைகளின் கரை கண்டவரும், கறுப்பு மான் தோலையே வெற்றிக் கொடியாகக் கொண்டவரும், குருகுலத்தவர்க்கு ஆச்சாரியராகிய துரோணர் பரத்துவாஜர்க்கு மகனாகத் தோன்றினார்.

16. அவரிடமிருந்து, உலகத்தவர் அனைவரின் நம்பிக்கைக்கும் உரிய அசுவத்தாமர் தோன்றினார். அவருடையதைக் கண்ட கண்ணன், அர்ச்சுனன், பீமன் ஆகியோர் மறுப்பேதுமில்லாமல் படைக்கருவிகளை எறிந்துவிடுவர்.

17. தன் இடத்திற்குக் கெடுதி வருமோ என்ற அச்சத்தினால் இந்திரனால் அனுப்பிய மேனகையிடமிருந்து தனிப்படுக்கையில் தோன்றிய பல்லவன் தோன்றினான். அவனுடைய ஆட்சியில் நாட்டு மக்கள் நலமுடன் வாழ்ந்தனர்.

18. அப்பல்லவன், சிறந்த பிராம்மண குலத்தில் பிறந்தவனாயினும் க்ஷத்திரியற்குரிய வீரத்தைப் பெற்றிருந்தான். அது எது போல் என்றால் நீர் கொண்ட மேகத்திலே தோன்றிய இடி கொளுத்தும் சுபாவத்தை அடையவில்லையா? அது போன்றது.

19. பின்னர், வணங்கிய அரசர்களுடைய துன்பம் துடைத்தவனும், போர்க்களத்திலே எதிர்த்தவர்களுக்குத் துக்கத்துடன் கூடிய காரியத்தைச் செய்பவனும், திங்கள் போல ஒளியுடையவனாயினும் களங்கமற்ற புகழை உடையவனுமான அசோகவர்மன் தோன்றினான்.

34ஆம் வரி : பெரிய, அழகான பூமண்டலத்தைத் தம் வயமாக்கிய குறைவற்ற வலிமையால் அடையப் பெற்றவர்களும், எல்லா வர்ணாசிரமங்களையும் காப்பாற்றியவர்களும், பெருந்தன்மை உடையவர்களும், அனைத்து உலகங்களையும் தூய்மையாக்குவதால், கங்கை நதிக்கு ஒப்பானவர்களும், திருமாலின் அவதாரம் என்று சொல்லக் கூடியவர்களுமான அரசர்கள் தோன்றியதால் களங்கமற்ற பல்லவர் குலம் விளங்கியது.

37ஆம் வரி : அம்மரபில் தோன்றிய அனைத்து அரசர்களும் முருகக் கடவுளுக்கு ஒப்பானவர்கள். பெரிய சேனையுடையவர்கள். தூய்மைப்படுத்தும் பிறவியை உடையவர். (அக்னி) தாமரை மலரில் தோன்றியவர். அழகுடையவர், எதிரிகளைப் பணியச் செய்தவர். அழுக்கு முழுமையும் அகற்றியவர். சூரிய மண்டலத்தின் செந்நிறத்தையுடையவர். அழகிய பெண்ணின் உள்ளமாகிய மானைச் சிறைப்பிடிக்கும் வலை போன்ற அழகு வாய்ந்த தேகத்தை உடையவர்கள். தென்றலுடன் கூடிய சந்தனத்தின் நறுமணம் போல் அவர்கள் புகழ் எங்கும் பரவியது.

தேவர்களின் மரமான கற்பக விருட்சத்தின் ஒளி ஏனைய மரங்களின் பெருமையால் மங்கி விடாதது போல அவர்களுடைய வெண்கொற்றக் குடையின் நிழலைக் கூட ஏனைய அரசர்களின் புகழ் அழித்துவிட முடியாது.

பிறருக்கு நன்மை பயக்கும் புகழ் ஒளிக்கதிர்களைப் பெற்றிருந்தமையால் அவர்கள் பிறருக்கு நன்மையளிக்கும் ஒளிக்கதிர்களை வீசும் ஞாயிற்றை யொத்தவர்கள். அவர்கள் தங்களுடைய குடிமக்களின் அன்புப் பெருக்கத்தைக் கொண்டிருத்தலால் குறைவற்ற செல்வத்தையும், குணநலன்களையும் அடைந்திருந்தனர்.

அதனால் பகுதி, விகுதி, ஆகமம் ஆகியவற்றைக் கொண்டு குணம், விருத்தி ஆகியவைகளால் தொடரப் பெற்றதாயினும் அபவாதம் இல்லாத சப்த சாத்திர இலக்கணத்திற்கு ஒப்பானவர்கள்.

நந்தனம் என்னும் தேவலோகத்துப் பூங்காவில் பாரிஜாதம் எனும் மரம் உண்டு. அவர்களோ பகைவர்களற்று ஆனந்தத்தை அளிப்பவர்கள். மேகங்களைப் போன்றவர்களாயினும் நீரற்றவர்கள். அவர்கள் அதிகமாக வேத சாத்திரங்களைப் பயின்றவர்களாகையால் அப்படிப்பட்ட தன்மையுடையோராவர். இந்திரன் வானுலகத்தை ஆட்சி செய்வது போல பல்லவர்கள் ஏழு தீவுகளாலும், ஏழு கடல்களாலும் அலங்கரிக்கப் பெற்றவர்கள். அவர்களுடைய ஆட்சி அனைத்து இடங்களிலும் பரவியிருந்ததென்பது இதனால் அறிகிறோம்.

45 ஆம் வரி : அனைத்து விதமான சாத்திரங்களையும் ஆயுதங்களையும் செலுத்தும் முறையறிந்தவர்கள். வெற்றி பெறுவோம் எனும் உறுதி பெற்றவர்கள். அளப்பரிய வலிமையுடையவர்கள், அறத்தைக் காப்போர். கலியைப் போக்கியவர்கள், அறிவுக் கூர்மையுடையோர், வடிவழகு பெற்றவர்கள்.

பூமி முழுவதையும் தாங்கும் வலிமையுடைய தோளை உடையவர்களான கந்தவர்மன், கவந்தவர்மன், காணகோபன், விஷ்ணு கோபன், வீர கூர்ச்சன், வீரசிம்மன், விஷ்ணு சிம்மன் முதலியோர்கள் பகையரசர்களுக்குத் தூமகேது (வால் நட்சத்திரம்) போன்றவர்களாகவும், நண்பர்களுக்கு மதிப்பு அளிப்பவர்களாகவும், அனைத்து விதமான மதிப்பாகிய அணையைப் போன்று குடிகளைக் காத்து அரசு செலுத்தி வாழ்ந்து வந்தார்கள்.

20. பின்னர், பகைவர்களை அழிப்பதில் ஈடுபட்டவனாகிய அவனிசிம்மன் தோன்றினான். அவன் சிம்மன் என்பவனை வெற்றி கொண்டான். மாளவத்தையும் பிறகு களப்ர, மாளவ, சோழ, பாண்டிய மன்னர்களையும், தன் தோள் வலிமையாலே கர்வமடைந்த சிங்கள மன்னனையும் கேரள அரசர்களையும் வெற்றி கொண்டான்.

21. பின்னர், இந்திரனைப் போன்ற கீர்த்தி வாய்ந்த மகேந்திரவர்மன் பூமண்டலத்தைக் காத்து வந்தான். அவன் ஆணை அனைவராலும் ஏற்கப் பெற்றது. புள்ளலூரில் எதிரிகள் அனைவரையும் அவன் அழித்து அவர்களை வேரறுத்தான்.

22. இலங்கையை வென்ற இராமனுடைய தோள்வலிமையை வீரமாகக் கொண்டவனாம். பகை அரசர்களின் கூட்டங்களை நாசம் செய்யும் (தூமகேது) வால்நட்சத்திரமாகத் திகழ்ந்தான். வாதாபி எனும் பெயர் கொண்ட அசுரனை வெற்றி பெற்றவரான கும்பத்தில் தோன்றிய அகத்தியனைக் காட்டிலும் விரைவு உள்ளவனும் வெற்றி வீரனுமான நரசிம்மன் தோன்றினான்.

23. பின்னர், அவனிடமிருந்து தண்டாயுதம் போல் நீண்ட கைகளினால் பகைவர்களுக்கு வச்சிராயுதம் போன்ற மகேந்திரவர்மன் தோன்றினான். கொடைத்தன்மையுடைய அவனுடைய காலத்தில் இருந்தே தேவர், பிராம்மணர் போன்றோரின் நல்வாழ்விற்காகவும் அறச் செயல்கள் பெருகிக் கடிகைகளும் வளர்ந்தன.

24. பின்னர், உலக மன்னர் அனைவரையும் தம் விருப்பத்திற்குப் பணிய வைக்கும் பரமேசுவரப் போத்தவர்மன் தோன்றினான். அவன் மிகுந்த செல்வம் பெற்றிருந்தாலும் மக்களுக்குத் தலைவனாகத் திகழ்ந்தான்.

எருதை இலச்சினையாகக் கொண்டவன். அவ் அரசன் சிவபெருமானுக்கு நிகரானவன்.

25. அவனிடமிருந்து பரமேசுவரனுடைய முழுமையானவன். உலகம் முழுதும் பரவி நின்ற பெயராலும் நரசிம்மப் பெருமானையொத்தவனாகிய நரசிம்மன் தோன்றினான். க்ஷத்திரியர்களின் சூளாமணியான அவன் தன் செல்வத்தைத் தேவர்களுக்கும், பிராம்மணர்களுக்கும் வழங்கினான். தன் வசத்திலிருந்த கடிகையில் நான்கு வேதங்களையும் நன்கறிந்த பிராமணர்கள் அனுபவிக்கும்படி பக்தியினால் செய்தான்.

26. அனைத்துச் செல்வங்களையும், அரசர்களை வெற்றி கொண்ட புகழாகிய செல்வங்களைப் பெற்றவனும், கலியை வெற்றி கொண்டவனும், பிரகஸ்பதி விதித்த நீதி சாத்திரத்தை நன்கு அறிந்து அதன்படி நாட்டை நடத்துபவனும், தன் அறிவுக்

கூர்மையால் அனைத்து உலகங்களையும் இரட்சிப்பவனுமான பரமேஸ்வர போத்தவர்மன் அவனிடமிருந்து தோன்றினான்.

27. அவனுடைய இடத்தில், செல்வங்களுக்குக் கடல் போன்றவனும், ஆணையின் வலிமையால் பகைவர்களை வெற்றி கொள்பவனும், குடி மக்களால் தேர்ந்தெடுக்கப் பெற்றவனும், அனைவராலும் மதிக்கப் பெற்றவனும், முறையாக நீதி வழங்குபவனும், உலகில் பரவியிருக்கும் பல்லவ குலமாகிய கடலுக்கு நிறைமதி போன்ற நந்திவர்மன் ஆண்டு வருகிறான்.

28. அவனுடைய ஆறாவது முன்னோனாகிய ஸ்ரீ சிம்ம விஷ்ணுவின் தம்பியும், அவனுக்குப்பின் அரசனாக வந்தவனுமான பீமவர்மன் உண்டானான். அறிவுடை மக்களால் பாராட்டப் பெறுகின்ற ஸ்ரீ புத்தவர்மன் ஐந்தாவது பல்லவ அரசனாக ஆனான். பின்னர், வச்சிராயுதத்தை வைத்திருக்கும் இந்திரனைப் போன்ற ஆதித்தியவர்மன் நான்காமவன், மூன்றாமவன் கோவிந்தவர்மன்; மக்களுக்குப் புகலிடமாக விளங்கும் ஹிரண்யவர்மன் என்னும் திருவுடை மன்னன் இரண்டாம் தலைமுறை ஆவன்.

29. ஹிரண்யவர்மன் மகன் ஸ்ரீதரன். இவன் போரிலே அர்ச்சுனன், கலைகளைக் கற்பதில் மூலதேவன். வில் வித்தையில் இராமன், யானைகளைப் பற்றிய சாத்திரம், இசைக் கருவிகள் பற்றிய நுண்ணறிவில் உதயணன், அழகிய கண்களைக் கொண்ட பெண்களின் கருத்துப்படி மன்மதன், கவிகள் இயற்றுவதிலே முதல் கவியான வால்மீகி, அரசியல் விவகாரங்களில் தெளிவுபடுத்துவதில் பிரகஸ்பதி. குடிமக்களை மகிழ்விப்பதில் தருமன்.

30, எங்கள் தலைவன் பல்லவ குலத்தைத் தாங்கி நிறுத்துவதில் சிறந்தோன், சாந்தம் நிறைந்தவன், பிறவியில் மாமன்னன், மல்யுத்தத்தில் மாமல்லன், யானைகளைப் பற்றிய சாத்திரங்களிலும், இசைக்கருவிகளை இயக்குவதிலும் - உதயகுமாரனைப் போன்றவன். கவியில் வால்மீகிக்கு நிகரானவன். அரசியல் விவகாரங்களைத் தெளிவுபடுத்துவதில் பிரகஸ்பதி. அழகு வாய்ந்தவர். ரோகிணியில் பிறந்தோன். இத்தகைய நல் வரலாற்றைக் கொண்டவன் நந்திவர்மன் என்ற அரசன்.

வரி 71 : மன்னாதி மன்னனும், பரமேச்சுவரனும், மகாராசனும், பரமேச்சுவரப் போத்த அரசனுடைய இடத்தில் அமர்ந்து அரசு செலுத்தி வருபவனும், வீடுபேறு அடைய வேண்டுமென்ற விருப்பம் நிறைந்துள்ளமையால் உறங்காத உள்ளத்தையுடையவனும், பகவானின் இரு தாமரை மலர் போன்ற திருவடிகளிலிருந்து வரும் துளியினால் அழுக்கடைந்த தலையையுடையவனும், தேவர்கள், பிராம்மணர்கள் ஆகியோரை வரவேற்றுப் பூசிக்கும் ஆசாரம் உடையவனும், கலிகாலத்தில் மக்களுக்கு ஏற்படும் ஆசைகளைத் துறந்தவனும், வளர்கின்ற நெருப்பினால் பகைவர் கூட்டங்களைப் பொசுக்குகின்றவனும், வளரும் நட்பின் காரணத்தினால் அவர்களை மகிழ்விப்பவனும், பகை மன்னர்கள் வணங்குதலினால், அவர்களுடைய மகுடங்களின் பக்கங்களில் இழைக்கப் பெற்றுள்ள மணிகள் உராய்வதால் வழுவழுப்பான இரண்டு திருவடிகளையும், பூங்காவில் கொடிகள் கற்பகத் தருவில் படர்ந்திருப்பது போல, பல்லவ குலம் திருமகளால் தழுவப் பெற்றுச் சிறப்புடன் திகழ்பவனும், பல்லவ மன்னனைப் பற்றித் தியானம் செய்வதால் பெற்ற பயனும்,

கடலின் நீர் வானத்து அரசனான திங்களின் கூட்டுறவால் பொங்குவது போல சோம இராஜன் கூட்டுறவால் பெருகும் குணக்கடலும், மகாராஜனுமான நந்திவர்மன் தன்னுடைய பேரரசின் ஆட்சியாண்டு இருபத்திரண்டு நடக்கும்போது -

வரி - 80 : மறைகளை நன்கு கற்றவரும், மதுரமான ஸ்வரம் நிரம்பிய சாமகானம் செய்வதில் வல்லவரும், வேதத்தின் ஆறு அங்கங்களுடன் கூடிய வேதங்களை நன்றாகக் கற்றுத் தேர்ந்தவரும், சொற்பொருளின் தத்துவம் அறிந்தவரும், ஜீவசக்தியைத் தூண்டி வளர்க்கும் சுவைநீரைப் பருகியவரும், செயலையும் ஞானத்தையும் நன்கறிந்தவரும், உலக வாழ்க்கையின் உத்திகளிலும், கலைகளின் நுட்பங்களிலும் நல்ல அறிவு நிரம்பியவரும், காவியம், நாடகம், கட்டுக்கதை, இதிகாசம், புராணம் ஆகியவைகளில் நன்றாகத் தேர்ந்தவரும், அனைத்து ஞானங்களிலும் மூழ்கியவரும், அனைத்து செயல்களையும் முறைப்படி செய்பவரும், நல்ல நடத்தையுடையவரும், வீட்டுக்கு விளக்கைப் போல உலகத்தை ஒளிபெறச் செய்பவரும், பெரியோர்களிடம் வணக்கம் செலுத்துபவரும், அறியாமையைப் போக்குவதால், இப்பூவுலகுக்கு ஒப்பற்ற தனியொரு ஞாயிறாகத் திகழ்பவர் பொருட்டு, கதிரவன் போல் உலகிற்கு நண்பரும்,

அனைத்துக் குணங்களின் இரசக் கூட்டங்களாகிற கடல் போன்ற கம்பீரமானவரும், திருமகளோடு கூடியவரும், வெட்கத்துடன் கூடியவரும், நல்ல உடலைப் பெற்றிருப்பவரும், நீண்ட ஆயுளுடன் கூடியவரும் மென்மையாகப் பேசுகிறவரும், உயர்ந்த புருஷரும், தேவர்களுக்கு அரசனான இந்திரனுக்குப் பிரகஸ்பதி போல, மக்களின் கண்களுக்கும் மனத்துக்கும் மகிழ்ச்சியளிக்கும் பல்லவ பதியான புவிவேந்தன் நந்தியிடமிருந்து எல்லா நீதிகளாலும் வணக்கம் கொண்டவரும், ஆசாரியராக அமர்ந்தவரும், வித்வான்களில் முக்கியமானவரும், மந்திரிகளில் முக்கியமானவரும் அஞ்சா நெஞ்சினரும், வீரரும், திருவைப் போன்ற நந்திப் போத்த ராஜனுடைய பக்தியுடன் கூடியதும், அதையொப்பச் சந்திரன் விண்மீன்கள் உள்ளவரையில் நிலைத்து நிற்பதுமான குலத்தைச் சேர்ந்தவரும், குலத்தில் மூத்தவரும், மூத்த மகனும், பிரம்மஶ்ரீ இராஜனும், சீலத்தையுடையவரும், உண்மையில் சோமராஜன் என்பவராலும், அனைத்துக் குணங்களால் மூத்தவருமான மூத்த மகனாலும்

வரி 92 : மகன்களையும் பெயரன்களையும் காத்து மேன்மை பொருந்திய தலைமுறைகளைத் தோற்றுவித்தமையால் சிறந்த தந்தையாகவும், பாட்டனாகவும் விளங்குபவரும், நல்ல பிறப்பின் புண்ணியங்களைக் கொண்டவரும், இப்பிறப்பாளர்களிலே கண்ணியம் வாய்ந்தவரும், பிரம்மஸ்வரூபத்தை அறிந்தவரும், ஜ்யேஷ்ட பாத சோமயாஜி என்ற பெயர் கொண்டவரும், மறைகளின் உட்பொருளை அனுசரித்து இருக்கின்றவரும், சந்தோக சூத்திரத்தைப் பயில்பவரும், வாஜபேயம் முதலிய வேறு பல வேள்விகளைச் செய்தவரும், பாரத்துவாஜ கோத்திரத்தைச் சேர்ந்தவரும், பிராம்மணர்கள் அதிகம் வாழும் இடமாக இருக்கின்ற 'பூந்தி' என்னும் சிற்றூரில் வாழ்பவரும், சிறப்பானவரும் இருமை மறுமை ஆகிய இரு உலகங்களில் உள்ளத்தைச் செலுத்துபவரும், அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்று உறுதிப் பொருள்களைப் பயில்பவரும், நான்கு மறைகளைக் கற்றவரும், ஐம்பெரும் பூதங்களைத் தன் வயமாக்கிக் கொண்டவரும், ஆறு அங்கங்களையும் நன்கு அறிந்தவரும், ஏழு குதிரைகளைக் கதிரவனுக்குச் சமமானவரும், எண் குணங்களைப் பெற்றவருமான சிறந்த பிராம்மணருக்கு

வரி : 97 : தமக்கு அரசன் அருளால் கிட்டிய பூமியினின்றும் (ஊற்றுக்காட்டுக் கோட்டத்து), அதே நாட்டில் கிழக்கே பாலையூரையும், தெற்கிலும் அதே ஊரையும், மேற்கில் மணற்பாக்கம், கொள்ளிப்பாக்கம்,

ஊர்களையும், வடக்கில் வெள்ளிமா நல்லூரையும் கொண்டு இவ்வாறு நான்கு எல்லைக் குட்பட்டதும், கொடு கொள்ளி என்ற முதற்பெயர் கொண்டதும், பிரம்ம தேயமான நிலையில் ஏக தீர மங்கலம் என்ற வேறுபெயர் கொண்ட சிற்றூர் சாமானிய இரண்டு பட்டி அளவினால் பழைய தேவதானப் பிரம்ம தேயங்களை நீக்கி, குடும்பிகளையும் நீக்கி, அனைத்து பரிகாரங்களையும் பெற்று, சேயாறு, வேகவதி, திரையனேரி ஆகியவற்றிலிருந்து தகுந்தபடி கிளைக்கால் தோண்டித் தண்ணீர் பெறுவது, மனை, வயல், தோட்டம், பூங்கா ஆகியவை உள்ளிட்ட எல்லாம் பிரம்ம தேயமாகக் கொடுக்கப் பெற்றது.

வரி : 103: இவ்விதம் பிரம்ம யுவராசனுடைய விண்ணப்பம்; கோர சர்மன் ஆணை.

மங்களம் பெருகட்டும். சித்தி உண்டாகட்டும்.

தமிழ்ப்பகுதி :

கோன் ஓலை. யாண்டு இருபத்திரண்டாவது

ஊற்றுக்காட்டுக் கோட்டத்து நாட்டார் காண்க. தம் நாட்டுக் கொடு கொள்ளி முன் பெற்றாரை மாற்றி, பிரம்ம துவராசன் விண்ணப்பத்தால் கோரசர்மன் ஆணத்தியாக, பார்த்துவாஜ கோத்திரத்துச் சந்தோக சூத்திரத்துப் பூனியில் இருப்பவரான செட்டி ரெங்க சோமயாஜிக்குப் பிரம்ம தேயமாகப் பணித்தருளி விடுத்த திருமுகம் கண்டு நாட்டோம். நாட்டு வியவன் சொல்லிய எல்லை போய், படாகை வலஞ் செய்து கல்லுங் கண்ணியும் நாட்டிக் கொடுத்ததற்கு எல்லை; கீழ்பால் எல்லை பாலையூர் எல்லையின் மேற்கும், தென்பால் எல்லை பாலையூர் எல்லையின் வடக்கும், மேல் பால் எல்லை மணற்பாக்கத்து எல்லை, இன்னும் கொள்ளிப் பாக்கத்து எல்லையின் கிழக்கும், வடபால் எல்லை வெளிமாலையனூர் எல்லையின் தெற்கும், இந்நாற்பேரெல்லையுள்ளும் அகப்பட்ட நீர் நிலனும் புன் செயும், உடும்போடி ஆமை தவழ்வதெல்லாம் சேயாற்றாலும் வெஃகாவினாலும் திரையன் ஏரியாலும் நீர் ஈந்த வழி ஆற்றுக்காலும் வெள்ளைக்காலும் தோண்டிக் கொண்டுண்ணப் பெறுவார் ஆகவும், இக்கால்களுக்கு கொள்கலமும், புழுதிப்பாடும் பெறுவதாகவும், இக்கால்களில் கூடை இறைத்தும் குறங்கு அறுத்தும் குற்றேத்தம் பண்ணியும் கொண்டு உண்டார் கோக் கொள்ளும் தண்டப் படுவதாகவும், மனையும் மனைப் படப்பும் பிறவும், இவரும் இவர் வழிக் கண்ணாரும், மாடமும் மாளிகையும் சுட்ட ஓட்டால் எடுத்துக்

கொண்டிருக்கப் பெறுவாராகவும், இவ்வுள்ளிட்ட சர்வ பரிகாரம் உள்ளாகப் பணித்தோம். இவ்வூர் பெற்ற பரிகாரம் செக்கும், தறியும், உல்லியக் கூலியும், பிராம்மணராசக் காணமும், செங்கொடிக் காணமும், கல்லாலக் காணமும், விசக் காணமும், குசக் காணமும், அரிகொழியும், நெய்விலையும், புட்டகவிலையும், பட்டிகைக் காணமும், இறாமலேயும், நாயாடிகளும் தூதுவரும், கணிகார்த்திகளும் பண்ணுப்பால் எடுப்பாரும், புதுக்குதிகைக் குற்றது வெயியும், புல்லும் இறாமையும், நல்லாவும், நல்லெருதும் இறாமையும், நாட்டுவகை இறாமையும், படாங்கழியும் கையாளும் நெடும் புறையும் பனம்பாகும் இளமையும், கரணத் தண்டமும், அதிகரணத் தண்டமும், பத்தூர்ச் சாற்றும், உழைவைப் பள்ளிவத்தும், இருமையும் குவளை நடுபரியும், குவளைக் காணமும் கமுகும், தெங்கும், உள்ளிட்ட பல்உருவில் பல மரமும், இட்டனகால் கொட்டு இறாமையும், கோயிலும் முதல் படியால் இறாது இவர் தாமே உண்ணப் பெறுவராகவும், நிலைக்களத்தாரும் அதிகாரரும் வாய்க்கேட்பாரும் உள்ளிருந்து பரதத்தி சென்றது.

சு. 31 : செயற்கையற்ற வேத விதியின்படி வேள்வி செய்பவனும், எல்லாச் சாத்திரத் தத்துவங்களை அறிந்தவனும், நேர்மையானவனுமான திரிவிக்கிரமன் இந்தப் பிரசஸ்தியைச் செய்தான்.

சு.32 : பூமிதானத்தில் சிறந்த தானம் இருந்ததுமில்லை. இருக்கப் போவதுமில்லை. அதை அபகரிப்பதினின்றும் உயர்ந்த பாபம் இருந்ததுமில்லை, இருக்கப் போவதுமில்லை.

சு. 33 : பூதானம் செய்தவர்கள் அனேகர். அவற்றைப் பரிபாலித்தவர்களும் அனேகர். எந்த எந்த அளவு பூமியோ அந்த அந்த அளவு பலன்.

சு. 34 : தான் கொடுத்ததோ பிறன் கொடுத்ததோ எதுவாயினும், அபகரிக்கும் ஒருவன் அறுபதினாயிரம் ஆண்டு மலத்தில் புழுவாகப் பிறந்து உழல்வான்.

வரி : 136 : மங்களம் உண்டாகட்டும். ஸ்ரீபரமேச்வரன் என்னும் மஹா காஷ்டக்காரியினால் எழுதப் பெற்றது.

வரி : 137 : ஸ்வஸ்தி சித்தி உண்டாகட்டும்.

வணக்கம்

நிருபதுங்க வர்மனுடைய பாகூர் செப்பேடுகள்

ஐந்து ஏடுகளில் பொறிக்கப் பெற்றுள்ள இச்சாசனம் 1879ஆம் ஆண்டு புதுச்சேரிக்கு அண்மையில் பதினைந்து கல் தொலைவில் இருக்கும் பாகூர் எனும் இடத்தில் பூமிக்குள்ளிருந்து கண்டு எடுக்கப் பெற்றது. சிவன் கோயிலுக்குத் தெற்கில் இருபது அடியில் மூன்றடி ஆழத்தில் செங்கல் கட்டிடத்திற்கு நடுவில் திருவாளர் ஜுன்ஸ் தெலாபோன் எனும் பிரெஞ்சுக்காரரால் கண்டெடுக்கப் பெற்றது.

அச் செப்பேடு பாரீசு நகரத்தில் இருக்கும் நூலகத்தில் காப்பாக வைக்கப் பெற்றுள்ளது. அப்போது புலமைமிக்க ஒருவர் இச் செப்பேட்டை எழுதினார். அது தென்னிந்தியச் சாசனங்கள் இரண்டாம் தொகுதியில் 513-517 பக்கங்களில் வெளியிடப் பெற்றுள்ளது.

1917 ஆம் ஆண்டு தொடக்கத்தில் அ. கோபிநாதராவ், அவர்கள் செப்பேட்டின் சமஸ்கிருதப் பகுதியை ஆங்கிலத்தில் மொழியெர்த்து இருக்கிறார். அது, தொல்லியல் அறிஞர் டாக்டர் ஜி. முவோ துப்ராய் எழுதிய ‘பல்லவர்’ என்ற நூலில் சேர்க்கப் பெற்றுள்ளது. பின்னர், டாக்டர் ஹூல்ஷ் என்பவர், எபிகிராபியா இந்திகா 18ஆம் தொகுதியில் 5-15 ஆம் பக்கங்களில் பதிப்பித்துள்ளார்.

இச் செப்பேட்டில் வரிகள் 1-45, 74 - 77 சமஸ்கிருதத்திலும்; 45-74, 78-79 வரிகள் தமிழிலும் உள்ளன.

சமஸ்கிருதப் பகுதி திருமால் வணக்கத்தோடு தொடங்குகிறது. பின்னர் பல்லவர் மரபில் விமலன், கொங்கணிகன் ஆகிய மன்னர்கள் பிறந்து, ஆண்டு வானுலகம் சென்றபின், நந்திவர்மன் எனும் அரசன் பிறந்தான். அவனுக்குத் தந்திவர்மன் எனும் மகன் பிறந்தான்.

இராட்டிரகூட மரபில் பிறந்த சங்கா என்ற தேவியை நந்திவர்மன் மணந்தான். அவர்களுக்கு நிருபதுங்கன் பிறந்தான். அந்நிருபதுங்கன் பாண்டியனுக்குப் போர்ப் படையைக் கொடுத்து உதவினான்.

போர் நிகழுங்கால், குறுநில மன்னனாகிய மார்த்தாண்டான் அதிகாரியாகத் திகழ்ந்தான். அவனுக்கு நிலைதாங்கு எனும் பெயரும் உண்டு. அவன், அரசனின் அனுமதி பெற்று, மூன்று சிற்றூர்களைப் பாகூரிலுள்ள வித்யாஸ்தானத்திற்குக் கொடையாக அளித்தான். நிருபதுங்க வர்மனின் அமைச்சனான உத்தமசீலன் ஆணை பிறப்பித்தான். அப்பிரசஸ்தியை வாகூர் வித்தியா ஸ்தானத்தில் பணியாற்றும் நாயகன் இயற்றினான்.

தமிழ்ப் பகுதியில், விசைய நிருபதுங்க வர்மனுடைய ஆட்சியின் எட்டாம் ஆண்டில், வேசாலிப் பேரரையன் விண்ணப்பத்தால், விடேல் விடுகு காடுவெட்டித் தமிழ்ப் பேரரையன் ஆணத்தியாக அளிக்கப் பெற்றது.

சேட்டுப்பாக்கம், விளாங்காட்டங் கடுவனூர், இறைப்புணைச்சேரி ஆகிய மூன்று ஊர்களும், முன்பு அளித்த அறமும் பிரம்ம தேயமும் நீக்கி, வாகூர் வித்தியா ஸ்தானத்திற்கு வித்யா யோகமாக அளிக்கப் பெற்றன.

அச் சிற்றூர்கள், அருவா நாட்டுக் கீழ்வழி வாகூர் நாட்டில் இருந்தன. இச் செப்பேட்டில், கச்சிப் பேட்டு, கீழ்ப்பரிகாரத்து உதிதோதய மாதேவிப் பெருந்தட்டான் மகன் நிருபதுங்கனால் எழுதப் பெற்றது என்ற விளக்கத்தோடு நிறைவு பெறுகிறது. அறக் கொடை வழங்கப் பெற்ற சிற்றூர்களின் நான்கெல்லையும் தமிழ்ப்பகுதியில் விளக்கமாகக் கொடுக்கப் பெற்றுள்ளது.

இச் செப்பேட்டில் - தந்திவர்மன், மூன்றாம் நந்திவர்மன், நிருபதுங்க வர்மன் ஆகிய மூவருடைய புகழே விளக்கப் பெற்றுள்ளது. நந்திவர்மன் வெற்றிகொண்ட பகைவர் யார் என்பது குறிக்கப் பெறவில்லை. எனினும், இராட்டிரகூடர்களாக இருக்கலாமோ என்ற ஐயம் கொள்கின்றனர் வரலாற்று வல்லுநர்கள்.

நந்திவர்மன் ஆட்சியின் பிற்பகுதியில் சாசனம் எதுவும் கிடைக்கவில்லை. டாக்டர் முவோ துப்ராய் அவர்கள், அக்காலத்தில் சோணாடு பாண்டியர் ஆட்சியில் இருந்ததாகக் கருதுகிறார்.

மூன்றாம் நந்திவர்மன், பிறர் உதவி இல்லாமல் போரில் வெற்றி கொண்டு அரசை அடைந்தான் என்று செப்பேடு தெரிவிக்கிறது. வேலூர்ப் பாளையம் செப்பேட்டிலும், பிறர் வெற்றி கொள்ள இயலாத பல்லவ அரசை அவன் தன் தோள்வலியால் அடைந்தான் என்று காணப் பெறுகிறது.

தந்தை ஆட்சியின் இறுதியில் அடைந்த வெற்றிக்கு இவனே காரணம்போலும். நிருபதுங்கன் பாண்டியர்களுக்குத் துணைபுரிந்தது. அரிசிலாற்றங்கரையில் அடைந்த வெற்றி, கலாவன் போரில் பெற்ற வெற்றி, இலங்கையில் அவன் புகழ் பரவியது ஆகியவை கூறப் பெற்றுள்ளன. அவை அனைத்தும் ஒன்றோடு ஒன்று தொடர்பு உள்ளவை என்று கூறலாம்.

கலாவன் என்பது இலங்கையில் உள்ளது. கலாஓய எனும் ஆற்றின் அருகில் உள்ள நீர் நிலையானது இன்று, கலாவால், கலாவாபி என்றும் அழைக்கப் பெறுகிறது.

அந்நாட்டு போர்கள் பலமுறை குறிக்கப் பெற்றுள்ளது. அந்நாட்டுப் பகுதிகளுக்கு அந்த ஆறு எல்லைக் கோடாகவும் திகழ்ந்திருக்கிறது.

நிருபதுங்கன் பெற்ற வெற்றிக்குப் புதுக்கோட்டைச் சீமையில் அவன்காலத்துக் கல்வெட்டுகள் கிடைப்பதும் சான்றாகத் திகழ்கின்றன.

நிருபதுங்கவர்மனின் வாகூர்ப் (பாகூர்) பட்டயம்

முதல் செப்பேட்டின் முதல்பக்கம்

1. ஸ்வஸ்திஸ்ரீசதுவ : ஸ்ரீயம ம்புஜ லோச^{1}நஸ்
த்ரிதஸ மௌலி நிக^{4}ரு

2. ஷ்டபதாம்புஜ: ஸகல லோக ப^{4}யம்கர
ராக்ஷஸ ப்ரஸம ஹேதுர

3. ஜோமது^{4}ஸூ த^{3}ந: ஸ்ரீப^{4}ரதுஸயந பரஸ்ய
நேத்ரேயத் தேஜஸ்தி^{2}தி லய - ஸூ

4. தி ஹேது : தந் நாபெ^{3}ர ஜநி ஸமஸ்த
பீ^{3}ஜம ப்ஜமா த்மயோனிஸ் ததே ப^{4}வத்

5 அம்கி^{3}ராஸ் தத உத்பந்நொ லொகநாத^{2}ாச்
சதுர்முக^{2}ாத் ப்ரஹஸ்பதீஸ் ததோ

6. மந்த்ரீ ஸக்ரஸ்ய வால பே^{4}தி^{3}ந : தத ஸம்யுஸ்
ததோ ஜக்ஞே ப^{4}ரத் வாஜ^{3} ஸ

7. மாஹ்வய : ததோத்^{3} ரோணோ மஹேஷ்வாஸஸ்
ஸமாரே ஸக்ர விக்ரம : ததோ

8 த்^{3}ரோணாந் மஹா பாஹூஸ் ஸர்வாயுத^{4}
விஸாரத^{3}: அஸ்வத்த^{2}ாமாகிலாம் ஸேந ஸம்ப^{3}

9. பூ^{4}வ பிநாகிந: அஸ்வத்த^{2}ாம்நஸ நதோ
ராஜ^{4}ா பல்லவக்^{2}யோ ப^{3}பூ^{4}வ [ஹ]ர

முதல் செப்பேட்டின் இரண்டாவது பக்கம்

10. ரக்ஷ நவக^{2}ண்ட^{3} ஸ்த்தா^{2}ந்பூ^{4} பதீந்ஸ் க்ஷீவலாந்
விமல கோங்கணிகாதித

11. த^{3}ந்வயத^{3} ஜநி ப்ருந்த^{3}ம் ரிப்ரமதா^{2} நதம்
நிஹித ஸாஸநம ந்யந்ரு பேஷ்வபி

12. ப்ரிய தமஞ்ஜய கோ^{4}ஷம நாரதம் பு^{4}க்த்வா
பு^{4}வம் ஸ்வ வீர்யேண சதுஸ்

13. ஸாக^{3}ர மேக^{2}லாம் தத: ஸ்வர்க^{3}ம் விமாநேந
க^{3}ஞஷு விமலாதி^{3} ஷுஆ

14 ஸீமத் புரந்த^{3}ர ஸமோ ராஜா த்ருப ப^{4}க்திர்
முரத்^{3}வீபி தந்திவர்மா மஹா பா^{3}ஹு : க்ஷமா

15. பால மகுடா நத : த^{4}ர்மேண பாலநாத்
பூ^{4}மிம் கலாவபி யுகே^{3} ந்ருப : வ

16. ர்ஷணாத^{3}பி த^{3}ாநஸ்ய பர்ஜன்ய இவநிர்ப^{3} பெள^{4}
ஆத்மனோ ப^{4}ந்தி^{3} யுக்தநாம் ய

17. மாலய தி^{3}த்ரு க்ஷயாபதே^{2}ய மிவ க்ருத் வாரீந்
பாண்ட^{3}ாநி விஸ ஸர்ஜய : நந்தி^{3}

18. வர்மா மஹா பா^{3}ஹு ஸ்ம்ஜாதோ தந்திவர்மண:
ஸமரே விஜிதா பூ^{4}மி ரஸ ஹாயெ



இரண்டாவது செப்பேட்டின் முதல்பக்கம்

19. நயேனஸ : ஆஸீச் ச^{2}ங்க^{2}ாஹ்வயா தே^{3}வீ தந்வங்கீ^{3}
நந்திவர்மண : ராஷ்ட்ர

20. கூட குலே ஜாதா லக்ஷ்மீரிவ முரத் வி^{3}ஷ: க்ஷமாவதி
த^{4}ரித்ரீவ மாத்ரு வஜ்ஜக^{3}த:

21. ப்ரியா ப^{3}பெ^{4}ள ஸம்கா^{2}ஹ்வய தேவி ராஜ்ஞ:
ஸ்ரீரிவ ரூபிணி தஸ்யாம

22. ப^{3}பூ^{4}வ மதிகாநாதி கலாதி மத்யாம் மாந்ய:
குலேந கு^{3}ணவாந் பு^{4}வநத்ரயே

23. ஸர் உத்பாத^{2}ய மாந தபநாதி^{4}ப துல்ய தேஜா
ஜிஷ்ணு : கலாவாந் ஸமரே

24. ந்ருப துங்க^{3} தேவ : யத்ப்ராஸாதா^{3}ஜ் ஜிதாஸேநா
பாண்ட்யேந ஸமரே புரா

25. பாரேரிசித்ஸ ராஜாக்நிர் த^{3}தா^{3}ஹரிபு ஸம்ஹதிம்
ந்ருபதுங்க^{3} இதிக்^{2} யாதோ

26. ப^{3}லோபி பு^{4}வநேஸ்வர : க்^{2}யாதோ ந கேவலம்
பூ^{4}மாவ முஷ்மிந்ந அபி ராம வத்

27. தஸ்யோப கார ஸம்யுக்தோ ராஜ்ந : ந: குரு
குலோத்ப4வ : வேஸாலி வம்ஸ மா



இரண்டாவது செப்பேட்டின் இரண்டாவது பக்கம்

28. ர்த்தாண்ட3· ப்ரஜாநாம் ஸரணோரத : ஸஶிவத்
திலகோ லோகே காம்3பீ4ர்யா தெ3ள

29. ஸமுத்3ர வத்ஸஹிர்யவத்3ரக்ஷணால் லோகாந்
லோகாநாந் நிலயோ ந்ருப :

30. தஸ்மாத் தஸ்யோசி தாந்நாம நிலைதாம் கீ3தி
தே3வவத் அத்2வாஸஹி தராந் நாம ப்ர

31. த்ய க்ஷத்வாத்3 விஸாம்பதே : க்3ராம ந்ரயம்ஸ்வராஷ்-ட்ரே
ஸ : குருவம்ஸ விவரத்த4

32. ந: விக்ஞாப்ய ந்ருபதுங்கே ஸால்லப்3த4
மாக்ஞப்தி பூர்வாகம் சேட்டுப்

33. பாக்கம் ப2லா த4ாரம் க்3ராம மேகமதா2பரம்
க்3ராம : வித்யா விளாம்க3ாதி ரேரா4

34. ந்தபத3 நாமகம்// தஸ்மாத் பை4ப்புணைச் சேரி ந்த்ருதீயம்
ஸர்வ்வ ஸம்பத3ம் ஏவம்

35. க்3ராம த்ரயம் லப்த3ம் வித்யாஸ் தா2நாய த3த்தவாந்//
மந்தா3கிநீம் ஸமாயாந்தீமூர்மி

36. வேக3 ஸமாகுலாம் ஸ ப3பா4ரயதா2 தே3வோதூ4ர் ஜடிர்
ஜடயை கயா

மூன்றாவது செப்பேட்டின் முதல் பக்கம்

37. வித்^{3}யா நதி^{3} ததா^{2} க^{3}தா^{2} சதுர்த^{3}ய க^{3}ணகுலா வாகூ^{3}ர்
க்^{3}ராம ஜுஷாம்

38. ஸ்தா^{2}நம் வ்யாப்ய யஸ்மாத^{3}வ்யவஸ்தி^{2}தா தத்
ஸ்தா^{2}நமேவம் விது^{3}ஷாம் வித்யா

39. ஸ்தா^{2}நம் ப்ராசக்ஷுந தேப்^{4}யோ த^{3}த்வாஸ
பூ^{3}பாலோ க்^{3}ராமாநாக் ஞப்தி

40. பூர்வகாந் ஹஸ்தி ஸஞ்சாரி ஸீமந்தர் நாத்மாநம்
ப^{3}ஹுமந்யதே யுக்தர்ந்ஸ

41. ஸர்வ்வ பரீஹாரை நகரத்வேசு ரக்ஷிதாந்
ஆக்ஞப் திருத்தம ஸீலஸ்

42. க்யேஸ்வர பூஜித . மந்த்ரீ ப்^{3}ருஹஸ்பதி
ப்ரக்^{2}யோ ராக்ஞ . ஸ்ரீ துங்க^{3}வர்மண

43. ஆக^{3}ாமிந : ப்ரஜாபாலாந யாசதே குரு
நந்த^{3}ந : த^{4}ர்மஸ்யைதஸ்ய ஸாமாந்யா

44 த் பாலநீய இதிஸ்வயம் த^{3}ாஸ : ஸ்தா^{2}நஸ்ய
வித்யா வாகூ^{3}ர் க்ராம ஜுஷாம்

45. யம் க்ருதவாந் ஸாஸ்த்ர தத்வக்ஞ :
ப்ரஸஸ்தின் நாகயஸ் ஸசுக்ருத் கோவிசய நிரு



மூன்றாவது செப்பேட்டின் இரண்டாவது பக்கம்

ப தொங்க வருமற்கு யாண்டு எட்டாவது வேசாலிப் பேரரயன் விண்ணப்பத்தால் விடோலை விடுகு காடுபட்டித் தமிழ்ப் பேரரயன் ஆணைத் தியாக அருவா நாட்டுக் கீழ்வரி வாகூர் நாட்டு நாட்டார் காண்க. தந்நாட்டு சேட்டுப் பாக்கமும் விளாங்காட்டங் கடுவனூரும் இறைபுணைச் சேரியுமாக இன்முன்றூரும் பழய வறமும் பிரம தேயமும் நீக்கி முன்பெற்றோரை மாற்றி யாண்டு எட்டாவது பாகூர் வித்யாஸ் தானத்தார்க்கு வித்யானு போகமாகப் பணித்தோம் தாங்களும் படாகை நடந்து கல்லும் கள்ளியும் நாட்டி அறை



நான்காவது செப்பேட்டின் முதல் பக்கம்

யோலை செய்து விடுதகவென்று நாட்டார்க்குத் திருமுகம் விட நாட்டார் திருமுகங் கண்டு தொழுது தலைக்கு வைத்து படாகை நடந்து கல்லுங் கள்ளியும் நாட்டி அறையோலை செய்து நாட்டார் விடுத்த அறையோலைப்படி நிலத்துக்கெல்லை விளங்காட்டங் கடுவனூர்க்கும் சேட்டுப்பாக்கத்துக்குமாக இரண்டூருக்கும் கீழ்பாற்கெல்லை காட்டு எல்லை ஒன்றும் தென்மலி பாக்கத்து யெல்லையின் மேற்கும் தென்பாற்கெல்லை தென்பலி பாக்கத்தெல்லை ஒன்றும் நெல் வாயேப் பாக்கத் தெல்லை ஒன்றும் உறத்தூ ரெல்லைக்கு வடக்கும் மேற்பாற்கெல்லை மாம்பாக்கத்தெல்லை ஒன்றும் இவ்விளாங்காட்டாங் கடுவனூர்ப் பாற் பிரமதேயமாயின அறுபது செறுவுக்குக் கிழக்கும் வடபாற் கெல்லை வாகூர் எல்லையின் தெற்கும் இறைபுணைச் சேரிக்கெல்லை கீழ்பாற்கெல்லை நத்தமுள்ளிட்ட காட்டுக்கு மேற்கும் தென்பாற்கெல்லை நெறிஞ்சிக் குரும்பின் எல்லையின் வடக்கும் மேல்பாற்கெல்லை வாகூரெல்லையின் கிழக்கும் வடபாற்கெல்லை.



நான்காவது செப்பேட்டின் இரண்டாவது பக்கம்

கிறிமான்பாத்தி எல்லையின் றெற்குமாக இவ்விசைத்த பெருநான்கெல்லைகளிலுமகப்பட்ட நிலன் நீர் நிலனும் புஞ்செயும் ஊரும் ஊரிருக்கையும் மனையும் மனைப் படப்பும் மாடுங்கன்று மேய் பாழும் குளமும் கோட்டகரமும் கிடங்கும் கேணியும் காடுங் களரும் ஓடையும் உடைப்பும் உள்ளிட்டு நீர் பூசி நெடும்பர மெறிந்து உடும்போடி ஆமை தவழ்ந்ததெல்லாம் உண்ணில ணொழிவின்றி வாகூர் வித்யாஸ்தானத்தார்க்கு வித்யானுபோகமாய் பாகூரோடே ஏற்றி வாகூர் பெற்ற பரிகாரமும் வ்யவஸ்தையும் பெற்று சர்வ பரிகாரமாய் பிரம்மதேயமாய் படரத்தி சென்றது

1. புண்யம் சமம்க் ருதவதாம் பரிரட்சதாஞ்ச
   தத்[3]ரக்ஷ தேதி ந்ருபதிர்ந்ருபதுங்க[3] வர்ந்த்தமாம்

2. ஆகா[3]மிந : க்ஷிதிபந்ரு பஜஸ்த்ரம்
   மூர்த்[3]நா முகுந்த[3] சரணாம்பு[3]ஜ சேகரேண

ஐந்தாவது செப்பேட்டின் முதல் பக்கம்

3. உதி^{3} தோதி^{3}த திலக : ஸுவர்ணக்ருத்
   ஸர்வ சாஸ்த்ர நிஷ்ணாத ·

4. அலிக^{2}ந்குப துங்கா^{3}க்^{2}ய : பல்லவ குலமூல
   ப்^{4}ருத்யோத்ர

கச்சிப் பெட்டுக் கீழ்ப்பைசாரத்து உதிதொயப் பெருந்தட்டான் மகன் மாதேவிப் பெருந்தட்டான் மகன் நிருபதொங்கன் எழுத்து.

பாகூர் செப்பேடுகளின் படங்களைப் பாரீசு தேசிய நூலகத்திலிருந்து படி எடுத்துக் கொண்டுவந்து தந்து உதவிய டாக்டர் சோ. முருகேசம் பிள்ளை, மு. கோவிந்தம் பிள்ளை இருவர்க்கும் நன்றி.

பாகூர்ச் செப்பேடுகள்

கருத்துரை

நன்மை உண்டாகட்டும்,

1. தாமரையை ஒத்த கண்களையுடையவரும், தேவர்கள், தங்கள் தலைகளைத் தாழ்த்தித் திருவடித் தாமரையை வணங்குகின்றனர். அனைத்து உலகங்களும் அஞ்சும் அரக்கர்களை அடக்கியவருமான பிறவா யாக்கை பெரியோனாகிய திருமால் உங்களுக்குச் செல்வத்தை நல்கட்டும்.

2. ஆதிசேடனையே படுக்கையாகக் கொண்ட திருமகள் கேள்வனுடைய கண்களிலிருந்து ஆக்கல், அழித்தல், பிறத்தல் ஆகியவற்றிற்குக் காரணமான கதிரின் ஒளி தோன்றியது; அப்படிப்பட்ட திருமாலின் கொப்பூழிலிருந்து அனைத்திற்கும் வித்தான தாமரை தோன்றியது. அதிலிருந்து நான்முகன் உண்டானார்.

3. உலகநாயகனாகிய நான்முகனிடமிருந்து அங்கிரசு தோன்றினார். அவரிடமிருந்து, வலன் எனும் அசுரனைக் கிழித்தவனான இந்திரனுடைய அமைச்சன் பிரகஸ்பதி உண்டானார்.

4. பிரகஸ்பதியிடமிருந்து சம்யு. இவரிடமிருந்து பரத்துவாசர் எனும் பெயருடையவரும், இவரிடமிருந்து இந்திரனுக்குச் சமமான வலிமை பெற்றவரும், பின்னர் வில் வித்தையில் சிறந்தவரான துரோணர் பிறந்தார்.

5. துரோணரிடமிருந்து நீண்ட கைகளையுடையவனும் அனைத்து ஆயுதங்களையும் திறமையாகச் செலுத்தும் அசுவத்தாமன் - சிவபெருமானின் ஓர் அம்சமாகத் தோன்றினார்.

6. அசுவத்தாமனிடமிருந்து நவகணடங்களிலுள்ள அரசர்களையும் குடிமக்களையும் காக்கும் பல்லவன் என்ற அரசன் விளங்கினான்.

7. அவ் வம்சத்திலிருந்து விமலன், கொங்கணிகன் ஆகிய அரசர்களின் கூட்டம் உண்டாயிற்று. பகைவர்கள் வணங்கி, கட்டளை ஏற்று நடந்தனர். அனைவரும் அன்புடன் வெற்றி முழக்கத்தை முழங்கினர்.

8. நாற்கடலையும் அரணாகப் பெற்ற உலகைத் தங்கள் தோள் வலியால் ஆண்ட விமலன் முதலியவர்கள் விமானத்தில் வானுலகம் சென்ற பின்னர்,

9. இந்திரனுக்கு ஒப்பான அரசனும், முரன் எனும் அசுரனை அழித்த திருமாலிடம் உறுதியாக பக்தி செலுத்தியவனும், நீண்ட கைகளையுடையவனும், ஏனைய அரசர்களால் வணங்கப் பெற்றவனுமாகிய நந்திவர்மன் திகழ்ந்தான்.

10. கலியுகத்தில் அறச் செயலைச் செய்வதாலும், கொடையை மழைபோல் வழங்குவதாலும், அவ் அரசன் நீருண்ட மேகமாகத் திகழ்ந்தான்.

11. எமனுடைய இருப்பிடத்தைப் பார்க்க வேண்டுமென்ற ஆசையால் தன்னிடம் சிறைப்பட்ட பகைவர்களை இழிவுபடுத்தி அனுப்பி வைத்தனர்.

12. அத்தந்திவர்மனிடமிருந்து, பிறர் துணையில்லாமல் போரில் வெற்றி கொண்டவனும், நீண்ட கைகளையுடையவனுமான நந்திவர்மன் பிறந்தான்.

13. முரன் எனும் அசுரனை அழித்த திருமாலின் தேவியான திருமகள் போன்று இராட்டிரகூட குலத்தில் தோன்றிய 'சங்கா' எனும் பெயர் கொண்ட மெல்லியலாள் நந்திவர்மனின் தேவியானாள்.

14. பூமியைப் போன்ற பொறுமையும், குடிமக்களால் தாயைப் போன்று நேசிக்கப் பெற்ற சங்கா இராசமா தேவியானாள். அவளை அனைவரும் பெண்ணுருவில் வந்த திருமகளாகக் கருதினர்.

15. அறிவு, நற்பண்பு, கலை அனைத்தாலும் சிறப்புற்ற அவளுக்கு, உயர் பிறப்பாளனும், குணாளனும், மூவுலகங்களும் போற்றும், எழு ஞாயிறு போன்ற தன்மையுடையவனும், விற்போரில் வெற்றியடைந்தவனுமாகிய நிருபதுங்கன் பிறந்தான்.

16. யாருடைய அருளால் முன்பு பாண்டியனால் சேனை வெற்றி பெற்றதோ, அந்த அரசனாகிய நெருப்பு அரிசிலாற்றங்கரையின் மறுகரையில் எதிரிகளின் கூட்டத்தை எரித்தது.

17. சிறுவனாயினும் பூமியின் அதிபதியான இவன், நிருபதுங்கன் எனும் புகழை எய்தினான். அப்புகழ் நிலவுலகில் மட்டுமல்லாமல் இராமனைப் போல் அனைத்துலகத்திலும் பரவியது.

18. அவ் அரசனால் நன்மையை நன்கு பெற்றவனும், குரு குலத்தில் தோன்றியவனும் ஆகிய வேசாலி மரபில் மார்த்தாண்டன் குடிகளுக்குப் புகலிடம் அளிப்பதில் பெருவிருப்பம் கொண்டான்.

19. திங்களைப் போன்று உலகத்தின் திலகமாகவும், கடலைப் போன்று கம்பீரம் நிறைந்த இவ் அரசன் உலகைக் காக்கும் கதிரவன் போல் உலக மக்களுக்கு இருப்பிடமானான்.

20. அதனால், குடிமக்களைத் தாங்கி இருப்பதால், இறையாகக் கருதப் பெற்றான்.

21. குரு வம்சத்தில் வளரச் செய்யும் அவன், தன்னுடைய நாட்டிலே மூன்று சிற்றூர்களை நிருபதுங்கனிடம் விண்ணப்பித்துப் பெற்றான்.

22. பழங்கள் நிறைந்த சேட்டுப்பாக்கம் எனும் சிற்றூரும், வித்தை நிரம்பிய விளாங்காட்டங் கடுவனூர் சிற்றூரும்,

23. மூன்றாவதாக அனைத்தும் நிறைந்த இறைப்புணைச்சேரி ஆகிய மூன்று சிற்றூர்களையும் அரசனிடமிருந்து பெற்றுக் கல்வி நிலையத்திற்கு அளித்தான்.

24. அலையும் வேகமும் நிறைந்து வருகின்ற கங்கையைத் தம்முடைய ஒற்றைச் சடையிலே எவ்விதம் தாங்கினாரோ,

25. அப்படியே கல்வி என்ற ஆழமான ஆறு நான்கு திசைகளிலிருந்தும் வித்தகர்களால் வாசவர் முழுவதும் பரவி பாங்குடன் திகழ்ந்தது;

26. அதனால், அவ் இடத்தை 'வித்யாஸ்தானம்' என்று அழைக்கின்றனர். அரசன் ஆணை பெற்றுச் சிற்றூர்களை வழங்கினான்.

27. பிடி சூழ்ந்து எல்லை நிர்ணயிக்கப் பெற்று, இறையில்லாக் காப்புடன் மற்ற அனைத்து விலக்குகளோடு கூடி அளித்ததால் அவன் தன்னை மிகுந்த தகுதியுடையோனாகக் கருதுகிறான்.

28. மூவுலகத்திற்கும் அரசனான நிருபதுங்கனால் வணங்கப் பெற்றவனும், பிரகசுபதிக்கு நிகரானவனும், அரசனான ஸ்ரீதுங்கவர்மனுடைய மந்திரியுமான உத்தமசீலன் இதற்கு ஆணத்தியாவான்.

29. இவ் அறம் அனைவர்க்கும் பொதுவானதாய், அதை நீங்களும் கடைப்பிடிக்க வேண்டுமென்று இனி வரப் போகும் அரசர்களைக் குரு வம்சத்தில் பிறந்தவன் வேண்டுகிறான்.

30. வித்தைகளின் இருப்பிடமான வாகூர் எனும் சிற்றூரை அடைந்தவர்களுடைய ஊழியனும், சாத்திரங்களின் தத்துவத்தை அறிந்தவனும், நற்காரியங்களைச் செய்பவனுமான நாயகன் இப்பிரசஸ்தியை இயற்றினான்.

தமிழ்ப்பகுதி

"கோவிசைய நிருபதொங்கவர்மற்கு யாண்டு எட்டாவது : வேசாலிப் பேரரையன் விண்ணப்பத்தால் விடேல் விடுகு காடுவெட்டித் தமிழ்ப் பேரரையன் ஆணத்தியாக அருவா நாட்டுக் கீழ்வழி வாகூர் நாட்டு நாட்டார் காண்க.

நம் நாட்டுச் சேட்டுப்பாக்கமும் விளாங்காட்டங் கடுவனூரும் இறைப்புணைச் சேரியுமாக இம்மூன்றூரும் பழய அறமும் பிரம்மதேயமும் நீக்கி முன் பெற்றாரை மாற்றியாண்டு எட்டாவது வாகூர் வித்யாஸ்தானத்தார்க்கு வித்யாபோகமாகப் பணித்தோம். தாங்களும் படாகை நடந்து கல்லும் கள்ளியும் நாட்டி அறையோலை செய்து விடுதக" என்று நாட்டார்க்குத் திருமுகம் விட, நாட்டார் திருமுகம் கண்டு, தொழுது, தலைக்கு வைத்துப் படாகை நடந்து கல்லும் கள்ளியும் நாட்டி அறையோலை செய்து நாட்டார் விடுத்த அறையோலைப்படி நிலத்திற்கு எல்லை விளாங்காட்டங் கடுவனூர்க்கும் சேட்டுப் பாக்கத்துமாக இரண்டு ஊர்க்கும் கீழ்பார்க்கு எல்லை; காட்டு எல்லை இன்னும் நென்மலிப்பாக்கத்து எல்லையின் மேற்கும், தென்பாற்கு எல்லை நென்மலிப் பாக்கத்து எல்லை, இன்னும் நெல் வாயீப் பாக்கத்து எல்லை, இன்னும் உறத்தூர் எல்லைக்கு வடக்கும் மேல்பாற்கெல்லை, மாம்பாக்கத்து எல்லை இன்னும் இவ்விளாங்காட்டங் கடுவனூர்ப்பால் பிரம்ம தேயமாயின.

அறுபது செறுவுக் கிழக்கும், வடபாற்கெல்லை வாகூர் எல்லையின் தெற்கும், இறைப் புணைச் சேரிக் கெல்லை,

கீழ்பாற்கெல்லை நத்தம் உள்ளிட்ட காட்டுக்கு மேற்கும், தென்பாற்கெல்லை நெருஞ்சி குறும்பின் எல்லையின் வடக்கும், மேல்பாற்கெல்லை வாகூர் எல்லையின் கிழக்கும், வடபாற்கெல்லை கிறிமான் பாந்தி எல்லையின் தெற்கும், ஆக இவ்விசைந்த பெருநான் கெல்லைகளிலும் அகப்பட்ட நிலம், நீர் நிலமும் பூஞ்சையும் ஊரும், ஊர் இருக்கையும் மனையும், மனைப் படப்பும் மன்றும் கன்று மேய் பாழும் குளமும் கொட்டகாரமும் கிடங்கும் கேணியும் காடும் களரும் ஓடையும் உடைப்பும் உள்ளிட்டு, நீர் பூசி நெடும் பரம்பு எறிந்து, உடும்பு ஓடி ஆமை தவழ்ந்தது எல்லாம் உள்நிலம், ஒழிவின்றி வாகூர் வித்யாஸ்தானத்தார்க்கு வித்யா போகமாய் வாகூரோடே ஏறி வாகூர் பெற்ற பரிகாரமும் வியவஸ்தையும் பெற்று சர்வபரிகாரமாய்ப் பிரம்மதேயமாய்ப் பரதத்தி சென்றது.

31. நற்செயல்களைச் செய்பவர்களும் அதைக் காப்பவர்களும் அடையும் புண்ணியம் சமமானது. அதனால் அதைக் காப்பாற்றுக என்று முகுந்தனுடைய (திருமாலினுடைய) திருவடி கமலத்தைத் தன்னுடைய தலையிலே தரித்த நிருபதுங்கவர்மன் இனி வரப் போகின்ற அரசர்களை எப்போதும் வேண்டி வணங்குகிறான்.

32. உதிதோதித குலதிலகனும், பொற்கொல்லனும் அனைத்து சாத்திரங்களிலும் அறிவு நிறைந்தவனும் பல்லவ குலத்தின் பரம்பரை ஊழியனுமான நிருபதுங்கன் இதை எழுதினான்.

கச்சிப் பேட்டுக் கீழ்பைசாரத்து உதிதோதயப் பெருந்தட்டான் மகன் மாதேவிப் பெருந்தட்டான் மகன் நிருபதுங்கன் எழுத்து.

❖ ❖ ❖

பட்டயத்தில் உள்ள சமக்கிருதப் பாடல்களின் பொருள் சுருக்கம்

அசுரர்களை அழிப்பவனும், தேவர்களைக் காக்கின்றவனும், தாமரைக் கண்ணனுமாகிய மதுசூதனன் மங்கலம் நல்கட்டும்.

பள்ளி கொண்ட திருமாலின் உந்தியிலிருந்து ஒரு தாமரைத் தோன்றிற்று. அத்தாமரையில் நான்முகன் தோன்றினான். நான்முகனிடமிருந்து அங்கிரஸ் தோன்றினான். அவனிடமிருந்து இந்திரனின் அமைச்சனான பிரகஸ்பதி தோன்றினார். அவரிடமிருந்து சம்புவும், அவனிடமிருந்து பரத்வாஜரும் தோன்றினர்.

போரில் இந்திரனை ஒத்தவனும், வலிமை மிக்கவனும், வில்லாளியுமான துரோணர் பரத்துவாஜரிடமிருந்து தோன்றினார்.

துரோணரிடமிருந்து அனைத்து வகையான போர்க் கருவிகளைக் கையாள்வதில் தேர்ச்சி பெற்றவரும், சிவாம்சம் பொருந்தியவராகிய அசுவத்தாமர் தோன்றினார்.

அசுவத்தாமரிடமிருந்து பல்லவர்களே தோன்றினர்.

அவர்கள் பல அரசர்களை வென்று நிலம் முழுமையும் ஆட்சி செய்தனர். விமலன், கோங்கனிகன் முதலானோர் பல்லவரின் வழித் தோன்றல்களாக விளங்கினர். அவர்கள் பகைவர்களை வென்று, மக்களைக் காத்து, ஏனைய அரசர்களிடம் அன்பை வளர்த்து வெற்றி முழக்கம் ஒலிக்க ஆட்சி செய்தனர்.

பின்னர், நீண்ட கைகளை உடைய நந்திவர்மன் ஆட்சி செய்தான். நந்திவர்மன் வலிமையில் இந்திரனுக்கு ஒப்பானவன். திருமாலை வணங்குகின்றவன். மேகம் போலக் கைம்மாறு கருதாமல் பொருளை வழங்கினான். கலியுகத்தில் சிறந்து விளங்கினான். தன் நண்பர்களுடன் பாண்டிய மன்னனை வென்றான்.

தந்திவர்மனின் மகனான நந்திவர்மன் தான் ஒருவனாகவே பகைவர்களை வென்று உயர்ந்தான்.

அவனுடைய மனைவி சங்கா என்பவள் இராட்டிரகூட மரபில் பிறந்தவள். குறுகிய இடையை உடையவள். திருமகள் போன்றவள்.

நிலத்தைப் போன்று பொறுமை உடையவள். தாயைப் போன்று பலரிடமும் அன்பு செலுத்துபவள்.

அழகும் கல்வி அறிவும் நிறைந்த சங்காவினால் மதிக்கப் பெறுபவனும், உயர்ந்த குணங்களை உடையவனும், குபேரனைப் போன்று செல்வமும், ஒழுக்கமும், கல்விமானும், போரில் வல்லவனுமான நிருபதுங்கவர்மன் என்ற அரசன் தோன்றினான்.

இவன் அருளால் பாண்டிய மன்னன் போரில் பகைவரை வென்றான். அவன் வலிமை உள்ளவன். புகழ் உடையவன். மண்ணிலும் விண்ணிலும் இராமனைப் போல் புகழ் பெற்றவன்.

குருகுலத்தில் வேசாலி மரபில் தோன்றியவனும், காக்கும் தொழிலை மேற்கொண்டவனும், கதிரவனைப் போல உலகைக் காப்பவனுமான மார்த்தாண்டன் என்பான் நிருபதுங்கவர்மனின் உதவியைப் பெற்றுத் திகழ்ந்தான். நிருபதுங்கவர்மனிடம் மூன்று ஊர்களை வேண்டிப் பெற்று அவைகளை வாகூர் வித்யாஸ்தானத்தார்க்குக் (கல்லூரியை நிர்வகிக்கும் மறையவர்க்குக்) கொடையாக நல்கினான்.

பிரகஸ்பதி போன்றவனும், அரசனின் அமைச்சனுமான உத்தமசீலன், இந்த அறத்தை எல்லாரும் காத்தல் வேண்டும் என்று வேண்டிக் கொண்டான்.

இதே போன்று ஆனைமங்கலச் செப்பேடுகளின் வடமொழிப் பகுதி அமைந்துள்ளது.

{ கல்வெட்டுத் தொகுதி 22. பக்.213 }

வில்லியனூர் செப்பேடு எண் : 1

ஊர்	:	வில்லியனூர் (புதுவை மாநிலம்)
அரசன்	:	மல்லிகார்ச்சுனராயர்
ஆட்சி ஆண்டு	:	சகம் 1563-ஆங்கிரசுவருஷம், ஆனிமாதம், அஷ்டமியும், பூரட்டாதியும் பெற்ற திங்கட்கிழமை
வரலாற்று ஆண்டு	:	கி.பி. 1641
ஆண்டறிக்கை எண்	:	இல்லை
முன்பதிப்பு	:	வருணதருப்பணம், பக். 337 - 339

குறிப்பு :

இச்செப்பேடு வில்லியனூரில் தனியார் ஒருவரிடம் உள்ளது.[1] இதனை மைப் பிரதி செய்துகொள்ள அவர் உடன்படாமையால் 11.5.82 அன்று இதன் வாசகங்கள் பார்த்து எழுதப்பட்டன. இது செம்பினாலான ஒரே செப்பேடு. இதன் நீளம் 46 செ.மீ.; அகலம் 30.3 செ.மீ., கனம் 2 மி.மீ. ஆகும். இரண்டு பக்கங்களிலும் எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன. முதல் பக்கத்தில் 56 வரிகளும் இரண்டாம் பக்கத்தில் 4 வரிகளும் உள்ளன. எழுத்துகள் ஆழமாக இல்லாமல், மிக மெல்லியதாகச் சிறிய வடிவில் எழுதப்பட்டுள்ளன. செப்பேட்டின் முதல் பக்கத் தொடக்கத்தில் சந்திர சூரியரின் உருவங்களும், நடுவே சிம்மாசனத்தில் குடையின்கீழ் அரசன் அமர்ந்திருக்கும் காட்சியும் ஓவியமாகச் செதுக்கப்பட்டுள்ளன. ஓரங்களில் வில்லேந்திய வீரர் இருவர் காவல் காப்பது போன்ற உருவங்கள் உள்ளன. அரசனின் இடப்பக்கம் ஆசனத்தின் மீது அமர்ந்த நிலையில் வாளுடன் ஒருவரும், வலப்பக்கம் வாளின்றி ஆசனத்தின் மீது அமர்ந்தவாறு வேறொருவரும் காணப்படுகின்றனர்.

இதில் கொடுக்கப்பட்டுள்ள சகம் 1563 (கி.பி. 1641) என்ற ஆண்டும், அதற்கு நேரான ஆங்கிரசு வருஷம் மிதுன (ஆனி) மாசத்து பூர்வ பட்சத்து அஷ்டமியும் பூரட்டாதி நட்சத்திரமும் பெற்ற சோம வாரநாள்

1. இ. வரதராசநாயக்கர் - நவசந்நிதி வீதி - வில்லியனூர்

என்பதும் ஒன்றுக்கொன்று முரணாக உள்ளன. சகம் 1563 என்பது ஆங்கிரசு வருஷத்துக்கு உரித்தாகவில்லை. விஷு வருஷத்துக்கு மட்டுமே பொருத்தமாக உள்ளது. சகம் 1554 (கி.பி. 1632), சகம் 1614 (கி.பி. 1692) ஆகிய ஆண்டுகளுக்கே ஆங்கிரசு வருஷம் உரித்தானது. அன்றியும் திதி, நட்சத்திரம், கிழமை முதலானவை முரண்பாடாகவே காணப்படுகின்றன. ஆதலின், இதில் உள்ள காலக் குறிப்புகள் முற்றிலும் தவறானவை.

பழைய வழக்கின்படி குறிப்பிட்ட அரசர் ஒருவரின் பெயரைக் கூறி, அன்னோரின் ஆட்சி ஆண்டைக் கூறாமல், விஜயநகர வேந்தர்களில் பலருடைய பெயர்களை வரிசையாகக் கூறி இறுதியில் மல்லிகார்ச்சுனராயரின் பெயரோடு முற்றுப்பெறுகிறது. இவ்வைப்பு முறை மரபு வழியைப் பின்பற்றிக் கூறப்பட்டதாகவோ, ஆட்சிக் காலத்தை அடியொற்றிக் கூறப்பட்டதாகவோ காணப்படவில்லை. மல்லிகார்ச்சுனராயரின் ஆட்சிக்காலம் கி.பி. 1447 மே மாதமாகும்[1]. செப்பேடு குறிப்பிடும் சகம் 1563 இல் அவர் ஆட்சி செலுத்தவில்லை என்பது இங்குக் கருதத்தக்கது.

செப்பேட்டின் மொழி நடை பிற்காலத்தது. காற்புள்ளி, முற்றுப்புள்ளி, அடைப்புக்குறி முதலான குறியீடுகளும், இரட்டைக் கொம்புச் சுழிகளும் மிகப் பெருவாரியாக ஆளப்பட்டுள்ளன. இதனைப் பழைய செப்பேட்டின் நகலாகக் கொள்வதற்கும் இடமில்லை. ஆதலின், இச்செப்பேடு பழைய தேதியிட்டு இயற்றப்பட்ட பிற்காலத்துச் செப்பேடு என்றே கொள்ள வேண்டும்.

இதன் வாசகங்கள் ஏற்கனவே அச்சாகி உள்ளன[2]. எனினும் முன்பதிப்பில் வரி அமைப்பு உள்ளிட்டவை செப்பேட்டில் உள்ளவாறு இல்லை. வாசகங்கள் தொடர்ச்சியாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளன. அதன் கீழ்ப் பின்வரும் செய்தியும் காணப்படுகிறது.

1 தென்னிந்திய வரலாறு - கே ஏ நீலகண்ட சாஸ்திரி முதல் பாகம் (மெய்க்கீர்த்தி உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவன வெளியீடு மல்லிகார்ச்சுனர் காலம், கி பி. 1447-1465 என்று குறித்துள்ளது)

2. Pour Extrait,

Pour Extrait Conforme A L' Ouvrage
Paru 'a Madras Et Depose a' LA
Bibliotheque Publique
Pondichery le 12 De'cember 1893
Les Bibliothe'cairel,
A. Rathimasamy Pillay

இக்குறிப்புகளைக் கருத்திற் கொண்டு இச்செப்பேடு கி.பி. 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இயற்றப்பட்டதாகக் கொள்ளலாம்.

செய்தி :

வில்லியனூரில் பலருக்கும் மடங்கள் இருக்கின்றன. வன்னியர்க்கு மடம் வேண்டும் என்று மல்லிகார்ச்சுன தேவ மகாராயரிடம் அனுமதி கேட்டனர். மடம் கட்டுதற்குப் பொருள் வேண்டும். ஆதலின் பலவாறு நடக்கும் திருமண நிகழ்வுகளுக்கும், ஏனைய நிகழ்வுகளுக்கும் செலுத்திய வரித்தொகை குறிக்கப் பெற்றுள்ளது. மற்றும்,

மன்னவேறு கிராமத்தார் களையெடுப்பதற்கும், அறுவடைக்கும் தானியமாகப் பெற்ற முறையும், வாரிசு இல்லாதாருடைய சொத்துக்கள் மடத்திற்கு உரிமையாக்கியதையும் குறிப்பிடுகிறது. இவ் அறத்தைக்காக்கவும், காவாக்கால் பெறும் இழிவையும் பட்டயம் கூறுகிறது.

வாசகம்

செப்பேட்டின் முதல் பக்கம்

1. உ

2. சுபஸ்ரீ மஹாமண்டலத்திலே சுவர்ண ஆரியராய விபாடன்
பாரிசைக்குத் தப்புவராத கண்டன் மூவராய கண்டன்.

3. கண்டநாடு கொண்டு கொண்ட நாடு கொடாதான்
துடுக்கர் தளவிபாடன் துடுக்கர் மோகந் தவிர்த்

4. தோன், எட்டியர் தளவிபாடன், ஒட்டியர் கோட்டந்
தவிர்த்தோன், பின் மண்டலமுங் கோண்ட
இராஜாதிராஜன், இ -

5. ராஜபரமேஸ்வரன், இராஜமார்த்தாண்டன், இராஜேஸ்வரன்,
புயங்கன், இராஜகம்பீரன், இராக்கனத்தம்பிரான், இந்திர
துரந்தரன்

6. அஸ்வபதி, கஜபதி துரந்தரன், அஷ்டமனோகர இராயன்,
அசுரரண விருது நரபாலன் கோதண்ட இராமன், கலியுக
இராமன், கண் -

7. ணன், வாளுக்கு வீமன், தோளுக்கு அபிமன்னன்,
குணத்திற்குத் தருமன், அழகுக்கு அநங்கன்,
அமர்ந்ததற்கு அரிச்சந் -

8. திரன், ஆண்மைக்கு அனுமான், ஆக்கினைக்குச்
சுக்ரீபன், குடைக்குக் கர்னன், செல்வத்திற்கு
அளகேசுரன் பலத்திற்கு வா -

9. யுபகவான், உலகத்திற்குக் கதிரோன், உலாவும் உலக
மெல்லாம் படைக்க நினைத்தருளிய வீராதிவீர
வன்னியப் பிரதாபன், கிரு -

10. ஷ்ண தேவமஹா இராயர், அச்சுததேவ மஹாஇராயர்,
புஜபல தேவமகா இராயர், திருமலை தேவ மஹா இராயர்

11. நரசிங்கதேவமஹா இராயர், இராமதேவ மஹா இராயர்,
பிரவிட தேவ மஹா இராயர், மல்லிகார்ச்சுன தேவ
மஹா இராயர், பி -

12. ரிதிவி இராச்சிய பரிபாலனம் பண்ணி அருளாநின்ற
சகாப்தம் 1563- இதற்கு மேல் நின்ற
ஆங்கிரச வருஷத்து மி -

13. துன மாசத்து, பூர்வ பட்சத்து அஷ்டமியும் பூரட்டாதி
நட்சத்திரமும் பெற்ற சோமவார நாள் வடகரை
விருதப்பசங் -

14. கன் வளநாட்டுக்கு மேற்கு நாடு இருங்கோள்,
பாண்டிய வளநாடு தொண்ட மண்டலம் சோழ
மண்டலம் பாண்

15. டிய மண்டலம் கொங்கு மண்டலம் இந்த நாலு
மண்டலத்திற்கு அழகான தொண்ட வளநாட்டுக்
குழகான வில்லவன -

16. ல்லூர் திருக்காமேஸ்வரர் குவிலாரம்மை அவர்கள்
சந்நிதியாசிய வில்லவநல்லூரிலே அந்தந்த
ஜாதிக்கு மடாலய -

17. ங்கள் உண்டாகின்றன நமக்கு சிவாலய பூஜை
மாத்திரமிருக்கின்றது தென்தேசத்தில் நமது
வம்ச பண்ணாடர் தங்கள் பேரும்

18. பிரதாபமும் உண்டாக வேண்டுமென்று மடங்கள்
கட்டியிருக்கிறார்கள் நாம் இராயரைப் போய்க்
கண்டு மடங்கட்ட உத்தி -

19. ரவு பெற்று வருவோமென்று திருவக்கரை வல்ல -
வாட்டு மழவராய பண்டாரத்தார், கருத்த நாயனார்
பண்டாரத்தார், சி -

20. ன்ன குமாரநாயனார் பண்டாரத்தார், சிதம்பரம் மழவராய
பண்டாரத்தார் கச்சி இராயர், பெரியண்ணநாயனார்
சிற்றம்பலநாயனா -

21. ர் தாண்டவ நாயனார், சடையப்ப நாயனார், அழகு சிங்க
நாயனார், மெய்போக நாயனார் பண்டரத்தார்
இவர்களும், கண்டன்மார், தந்தி -

22. ரியார், படையாக்ஷியார் என்னும் பல பட்டப்பெயர்
பெற்ற சோமசூரிய அக்கினிவம்ச பன்னாடரான
உறவின் முறையார் அ-

23. னைவரும் போய் இராஜவன்னிய இராஜஶ்ரீமல்லி -
கார்ச்சுன தேவமகா இராயரைக் கண்டு பேச,
அப்போது இராயரும் சிம்மா -

24. சனம் விட்டு இறங்கி நமது வம்சத்தாரென்று
தெரிந்து தேவாலய பூஜையிருக்க மடத்து
தருமம் நமக்கேனேன்று இரா -

25. யரும் கேட்க, அப்போது நாயனார் பண்டாரத்தார்
பாண்டிய மண்டலம் சோழ மண்டல முதலிய
மற்ற மண் -

26. டலங்களில் குருமடம் கட்டியிருக்க தொண்ட
மண்டலத்திலேயும் இருக்க வேண்டுமென்றார்
இராயரும் சந்தோஷித்து உங்க -

27. ளுக்கு இடமில்லாமற் போமோ வென்று தானத்தாரை
யழைத்து நாயனார் பண்டாரத்தார் அவர்களுக்கு
இடம் வி -

28. டப் போமென்று சொல்ல அப்போது தானத்தார்
மூத்த முதலியார் திருநாவகத் தொண்டமுதலி -
யார் நம்பித் திருஞானப்பண் -

29. டிதர் மற்றும், முற்றுற்றுடையார், நம்பிக் குருக்கள்
வயித்தியநாத குருக்கள், கோவில் கணக்கு
க்ஷேமக் கணக்கு, மற்றுமு -

30. ண்டான, தானத்தார், தலத்தாருங் கூடி கெவி -
சித்திலிங்கதேவர், முனையதேவர் தம்பிரானார்
திருநாமத்தில் காணியான தெ -

31. ற்குத் தெருவில் தேரோடும் வீதியில் தென்சரகில்
பாலையர் மடத்திற்குக் கிழக்கு அம்பலத்தாடும்
ஐயர் மடத்திற்கு மேற்கு சட்டையர் மடத்திற்கு
வடக்கு அடி கிழக்கு மேற்க்கு (எயரு)75

32. தெற்கு வடக்கு அடி(85)(அயரு)85 அடி ஒன்றுக்குப்
பொன் ஒன்றாக (எயரு) 75 பொன்னுக்குக்
கிரையங் கொண்டு கல்லில் பேர் வெட்டி
நட்டு கி -

33. ணறு கட்டி மடங் கட்டி தாம்பாசாசனமாக
பட்டயமெழுதி நாலு மண்டலம் (ருயசா)(56)
தேசமுங் குரு மூர்த்தமாய்க் கொண்டாடச் சொ -

34. ல்லி, மஹாமட பிச்சை முஷ்டியும் திருவிளக்கும்,
திருநந்தவனப் பணிவிடையும், திருமாலையும்,
உபயமும், மகேஸ்வர பூஜையு -

35. ம் பண்ணி நடத்திவர சிலாநதி சக்கரவர்த்தி
யோகீஸ்வர குருவை மடத்தில் வைத்து அந்
தந்தச் சீர்மை பண்ணாடரும் நாயினார் பண்டா -

36. ரத்தார் அனைவரும் வம்ச தருமக் கீர்த்திக்காக
மடத்திற்குக் கட்டளையிட்டது - உபநயன
முகூர்த்தத்திற்குப் பணம் ஒன்றும், சுயமரம் நா -

37. ட்டி மாலை சூடுங் கலியாணத்திற்குப் பொன் பத்தும்
கத்தி நாட்டிக் கலியாணஞ் செய்பவருக்குப்
பணம் பத்தும் மற்ற முகூர்த்தங்களுக்கெல் -

38. லாம் மாப்பிள்ளை வீட்டார் பணம் ஒன்றும் பெண்
வீட்டார் பணம் ஒன்றும் பெண் தத்த பணம்
ஒன்றும் மாதாபிதா குருபாத பூஜை வரும்ப -

39. டிகளும் மடத்தில் சேர வேண்டியது. தண்டிகை
துரைகள் பத்து பணமும் குதிரை மேல் குடை
பெற்ற அஸ்வ பதிகள் அஞ்சு பணமும் ஜாதியில்
குற்றா -

40. குற்றம் செய்பவர் அபராத பணமும் மன்னவேடு
கிராமத்தார் அரிவாளுக்கு ஆறுபடி தானியமும்
களை வெட்டுக்குப் பதக்கு தானியமும் ஒருக்கு
முக்கு -

41. றுணி தானியமும் பேரூருக்குப் பத்து பணமும்
சிற்றூருக்கு அஞ்சு பணமுங் கொடுக்க
வேண்டியது. ஆதுபாது அற்றவர் சொத்தை
மடத்தில் சே -

42. ர்த்து மடத்தாரால் சவரட்சணை பெற வேண்டியது
இவ்வரும்படிகள் மடத்திற்குச் சேருகிறபடி -
யால் செந்தூரத் திலர்தம் கோபி திருமணிதி -

43. ருநீறிட்ட பேர்களும் சந்திர சூரியருள்ள நாள்
வரைக்கும் நடத்தி வருவீர்களாகவும் இந்த
மடாலய தருமத்தை தங்காமல் கொடுத்த பேர்கள்

44. மாதா பிதாக்களை இரட்சித்து சிவாலயம் பிரம்மாலயம்
பூதானம் கோதானம் கன்னிகாதானம் செய்த பலனை
பெறுவார்கள் ஸ்ரீம -

45. துவில்லவனல்லூரிலே திருக்காமேஸ்வரர் குயிலாரம்மை
குமாரசுவாமி சந்நிதானம் விளங்குவது போல்
விளங்குவார்கள்

46. மடத்துக்கு அனுப்பக் கட்டளையிட்டதை அனுப்பாவிடில்
மடத்து சுவாமியாரால் அனுப்பப்பட்ட பணிவிடை
சிஷியாள்

47. எழுந்தருளின உடனே கூடி முன்னே போய் காண் -
பித்துக் கொண்டு வந்தவர்களுக்கு விடுதி விட்டு
சாப்பாடு போஜனம் அமைத் -

48. து தருமத்திற்குண்டான வரும்படிகளைக் கொடுத்த -
னுப்பி வைக்க வேண்டியது தருமபரிபாலரான
சௌபாக்கிய பிரமாணிக்கரான கேள்வியி -

49 ற் பிறந்தோர்களான ஸம்புகுலத்தவரான குமாரசுவாமி
யார் படைத்தலைவரான அசுரர்கள் மார்பரான
ஆஸ்தான பந்து ஜன சிந்தாமணியான சாந்

50. த மாரியுடைய கந்நிகையை மணஞ் செய்தவரான
வாடா மாலையும் வன்னத் தடுக்கும் மாலையும் தரித் -
தவரான வாசமிகுந்த குவள மாலையும் மி -

51. டக் கொடியும் முப்பத்திரண்டு விருதும் பெற்றவர் -
களான முன்னூல் மார்பும் புலிக்கொடியும்
பெற்றவரான நையாத நாட்டுக்குச் சப்தபதிகளான

52. சோணாடு காத்தவரான மறையோர் மகனுக்கு உயிர்கொடுத்
தவரான வல்லானுடைய மகுடந் துணித்தவரான
வாதாபியை வென்ற வன்னிய குலாதிபரா -

53. ன செங்கையில் வில்லும் சீலி முகமும் எடுத்தவரான
ஏரடி வாழும் வீரப்பரி நகுல துஷ்ட நிர்த்தண்ட
விர்ப்பன்ன உத்தண்ட கோதண்ட விக்கிர
மார்த்தாண்ட -

54. ரான அனைவோரும் மனமொத்து இந்த காரியம்
தட்டுதலை பண்ணுவதல்ல வென்று மடத்து தருமம்
விளங்கத் தக்கதாக பார்க்கவும் யாதாமொ -

55. ருவர் அகட விகடம் பண்ணினால் கங்கைக் கரயைில்
காராம்பசுவைக் கொன்ற பாவத்தில் போகக் கடவர்
தங்களுடைய மாதாப் பிதாக்களைக் கொன்ற தோ -

56. ஷத்திலேயும் தெய்வ பிராமணரை கொன்ற பாவத்தி -
லேயும் போகக் கடவர் தருமம் விளங்கக் குலம்
விளங்கும் குலம் விளங்கப் பெருமையும்
செல்வமும் பத -

செப்பேட்டின் இரண்டாம் பக்கம்

57. வியும் அடைவார்கள், திருவடி திருச்சிற்றம்பலம்
திருவக்கரை வல்லவாட்டு மழவராய பண்டாரத்தார்,
கருத்தநாயனார் பண் -

58. டாரத்தார் சின்னகுமார நாயனார் பண்டாரத்தார்
சிதம்பரம் மழவராய பண்டாரத்தார் கச்சிஇராயர்
பெரியணண நாயனார் சிற்ற -

59. ம்பல நாயநார் தாண்டவநாயனார் சடையப்பநாயனார்
அழகுசிங்க நாயனார் மெய்போக நாயனார்
பண்டாரத்தார், கையெழுத்து

60. வாசுதேவ நாயனார் சொஸ்த லிகிதம்

நூலாசிரியர் பற்றி

புதுச்சேரி அரசின்
தொல்காப்பியர் விருது பெற்ற
வில்லியனூர் புலவர் ந. வேங்கடேசனின்
எழுத்துப்பணிகள்

கண்டுபிடிப்புகள்

தினமணியில் வெளிவந்தவை

07.07.1978	ஆழியூர் சோழர் கால கல்வெட்டு
26.09.1978	சேஷங்கனூரில் பாண்டியர் கல்வெட்டு
11.02.1979	காரைக்கால் வட்டத்தில் சோழர் கால கல்வெட்டு
04.1979	வில்லியனூர் கல்வெட்டு

தினமலரில் வெளிவந்தவை

11.05.1982	கீழ்வாலை ஓவியம் கண்டுபிடிப்பு
04.04.1984	பறையம்பட்டு வட்டெழுத்து கண்டுபிடிப்பு
24.11.1992	பல்லவர் சோழர் நடுகற்கள் கண்டுபிடிப்பு
15.12.1992	செஞ்சி அருகே பல்லவர் காலச் சிறப்புகள்
18.12.1992	நடுகற்கள் கண்டுபிடிப்பு
29.11.1999	விழுப்புரம் அருகே முற்கால பல்லவ சிற்பங்கள் கண்டுபிடிப்பு

தமிழ்நாடு நாளிதழில் வெளிவந்த கட்டுரை

1967 இல் கல்வி

தினமணி சுடரில் கட்டுரைகள்

19.11.1978	ஆழியூர் பூஞ்சோலையுடையார்
18.03.1979	மரக்காணம் பூமிசுவரமுடையார்
10.06.1979	வில்லியநல்லூர் திருக்காமீச்சுரம்
14.01.1989	குன்றுடைய மகாதேவர்

தினமணி கதிரில் வெளிவந்தவை

02.10.1983	மேல்சாத்தமங்கலத்தில் தொல்லியல் ஆய்வு
03.11.1985	வாஞ்சிக்குப் பயிற்சி தந்தவர்
23.02.1992	சுதந்திரப் போராட்டத்தில் புதுவையின் பங்கு
07.01.1996	புதுச்சேரி ஆயி நினைவுச் சின்னம்

புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்

நான்காவது தமிழ் மொழியியற் கருத்தரங்கம்

மாநாடு : 1994 உரை மற்றும் கட்டுரை :
புதுவை மாநிலக் கல்வெட்டுத் தமிழ்

பாக்கியலக்ஷ்மி மாத இதழில் கட்டுரை

1962இல் அருமைத் தங்கைக்கு

திருமால் மாத இதழில் கட்டுரைகள்

பிப்ரவரி	1989	எழிலிழந்த எண்ணாயிரம்
ஆகஸ்டு	1991	குந்தவை விண்ணகர் ஆழ்வார் கோயில்
செப்டம்பர்	1992	கல்வெட்டுகளில் திருமால் திருப்பதிகள்
அக்டோபர்	1992	கல்வெட்டுகளில் திருமால் திருப்பதிகள்
நவம்பர்	1992	கல்வெட்டுகளில் திருமால் திருப்பதிகள்
பிப்ரவரி	1993	தண்சேறை எம்பெருமான்
மார்ச்சு	1993	திருமால் திருப்பதி கல்வெட்டுகளில்– கல்லூரிகள்
மே	1993	வரலாற்றில் ஸ்ரீஇராமாநுசர்
சூன்	1993	வரலாற்றில் ஸ்ரீஇராமாநுசர்
சூலை	1993	வரலாற்றில் ஸ்ரீஇராமாநுசர்
மார்ச்சு	1994	திருமலை கல்வெட்டுகளில் அரிய செய்திகள்
ஏப்ரல்	1994	திருமலை கல்வெட்டுகளில் அரிய செய்திகள்
பிப்ரவரி	2000	வீரநாராயண விண்ணகரும் இராஜராஜ விண்ணகரும்
மார்ச்சு	2000	கல்வெட்டுகளில் திருவாய்மொழி
பிப்ரவரி	2001	சயாமில் அவனி நாரணன்

முக்குடை - திங்கள் இதழில்

நவம்பர்	1997	ஆறகளூர் சமணச் சிற்பம்
திசம்பர்	2000	தாதாபுரத்து குந்தவை ஜினாலயம்

புலமை - திங்களிதழில்

சூன் 1990 கல்வெட்டில் சமுதாயப்பணி
திசம்பர் 1992 புதுவை மாநிலக் கல்வெட்டில் நாணயம்
திசம்பர் 1996 புதுவை மாநிலக் கல்வெட்டில் ஆரியக்கூத்து

ஆண்டிதழ் - புதுச்சேரி வரலாற்றுக் கழகம்

31.12.1980 வரலாற்றுச்சுவடுகள் ஆழியூரில் ஓர் ஆய்வுப்பணி

வெல்லும் தூய தமிழில் சூலை 1995

கல்வெட்டு காட்டும் வரிகள்

புதுச்சேரி ஸ்ரீமத் இராமாநுச நாவலர் சுவாமிகள் மன்றம் - சிறப்பு மலரில்:

30.07.1988 கல்வெட்டில் திருமால் திருப்பதிகள்
10.07.1998 கல்வெட்டில் திருமால் திருப்பதிகள்

ஸ்ரீ திரிபுர சுந்தரி சமேத ஸ்ரீவேதபுரீஸ்வரர் திருக்கோயில் - புதுச்சேரி

குடமுழுக்கு விழா மலர் 6.8.1999 :
களஆய்வும் - சிவன்கோயில்களும்

தொகுப்பு நூல்களில்

சனவரி 1980 : வரலாற்றுக் களஞ்சியம்

நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்

அறிவுலகின் குருதேவர் - சனவரி, 1981

பல்கலைச் செல்வர்ஆனந்தரங்கர் காலத் தமிழ்ச் சமுதாயம்
மார்ச்சு 1997 : வணிகவியற் செய்திகள் 1,2

ஆனந்தரங்கம் 1999

நாட்குறிப்பில் வணிக நிலை 1, 2

எழுதிய நூல்கள்

1. பண்பும் பயனும் 1978
2. வரலாற்றில் வில்லியனூர் 1979
3. வரலாற்றுச் சின்னங்கள் 1982
4. பல்லவன் கண்ட பனைமலைக் கோயில் 1990
5. வரலாற்றில் அரிக்கமேடு 1990
6. கல்வெட்டுகளில் புதுவைமாநில ஊர்ப்பெயர்கள் 1991
7. கல்வெட்டுகளில் அரிய செய்திகள் 1992
8. புதுவைமாநிலக் கல்வெட்டுகளில் நாடும் வளநாடும் 1993
9. வரலாற்றில் ஆரிய வைசியர் 1993
10. கல்வெட்டுகளில் திருமால் திருப்பதிகள் 1994
11. கல்வெட்டுகளில் காரைக்கால் பகுதிகள் 2000
12, கல்வெட்டுகளில் நீர்நிலைகளும் வரிகளும் 2000
13. வரலாற்றில் திரிபுவனை 2002
14. வரலாற்றில் திருவண்டார் கோயில் 2003
15. வரலாற்றில் மதகடிப்பட்டு 2003
16. நடுநாட்டில் சமணம் 2004
17. தேவாரத்தில் இசைக்கருவிகள் 2005
18. பொன்பரப்பின வாணகோவரையர்
19. சங்கநூல் ஆய்வும் - பி.எல்.சாமியும் - (தொகுப்பு) 1999
20. பி.எல்.சாமியின் ஆய்வுக்கட்டுரைகள் - (தொகுப்பு)
21. தர்பாரண்யேஸ்வரர் கோயில் வரலாறு - ஓர் ஆய்வு (இணையாசிரியர்)
22. புதுச்சேரி மாநிலச் செப்பேடுகள் ஓர் அறிமுகம் 2009
23. கல்வெட்டுகளும் சில வரலாறுகளும் 2009
24. விண்ணகரங்களில் அரிய செய்திகள் 2009

புதுச்சேரி வானொலி நிலையத்தில் உரையாற்றியமை

13.10.1978	புறநானூற்றில் உழவு
26.10.1979	புதுவை மாநிலக் கல்வெட்டுகளில் ஊரும் பேரும்
04.01.1980	சோழ பாண்டியபுரம் கல்வெட்டுகள்
1981	பாண்டியக் கோவை
23.04.1985	இடுக்கண் வருங்கால் நகுக
30.04.1985	உயர்ந்த நோக்கங்கள் உயர்ந்த உள்ளங்களை அமைக்கின்றன
07.05.1985	ஒரு மனிதனின் தலைசிறந்த நண்பர்கள்
02.08.1986	திரு.வி.க. சிந்தனைகள்
16.09.1986	குறள்நெறி - இரவு அதிகாரம்
10.10.1987	அரிக்கமேடு உரையாடல்
09.09.1992	தமிழ்வளர்ச்சிக்கு வரலாற்று ஆசிரியர்களின் கொடை
16.09.1992	தமிழ்வளர்ச்சிக்குக் கல்வெட்டாய்வாளர் கொடை
23.09.1992	தமிழ்வளர்ச்சிக்குப் பத்திரிகை ஆசிரியர் கொடை
20.06.1993	பக்தி இலக்கியத்தில் வரலாற்றுச் சிந்தனைகள்
23.09.1993	புதுவையின் வரலாற்றுச் சின்னங்களும் பண்பாட்டுப் பாரம்பரியமும்
30.11.2004	திருமூலரின் சிந்தனைகள்
07.12.2004	திருமூலரின் சிந்தனைகள்
14.12.2004	திருமூலரின் சிந்தனைகள்
10.2006	கல்வெட்டில் அரிய செய்திகள்

புதுச்சேரி - தொலைக்காட்சியில்

வில்லியனூர் - கோயில்கள்
திருபுவனை, பாகூர் } பற்றிய நிகழ்ச்சிகள்

சன் தொலைக்காட்சி - வணக்கம் தமிழகம் 10.4.2006

கருத்தரங்கு நிகழ்ச்சிகள்

04.10.1997 அனைத்துலக திராவிட மொழியியல் கழகம்
புதுவை - கல்வெட்டில் சமுதாயப்பணி

09.05.1983 கும்பகோணம் - இராஜகம்பீரன் பெருவிழா
கல்வெட்டில் அரிய செய்திகள்

12.08.1984 புதுச்சேரி ஸ்ரீ வைணவ மாநாடு
கல்வெட்டில் திருமால் திருப்பதிகள்

06.04.1986 பண்ருட்டி ஸ்ரீ வைணவ மாநாடு
வைணவத் திருக்கோயில்

28.07.1991 புதுச்சேரி ஸ்ரீ வைணவ மாநாடு
வரலாற்றில் ஸ்ரீ இராமானுஜர்

27.01.1992 புதுச்சேரி தாகூர் கலைக்கல்லூரி
கல்வெட்டுகளில் புதுவைச் சமுதாயம்

20.11.1992 புதுவை மொழியியல் பண்பாட்டு நிறுவனம்
புதுவைக் கல்வெட்டுகளில் சமுதாயப்
பண்பாட்டுத் தரவுகள்

30.03.1992 ஆனந்த ரங்கர் அறக்கட்டளைச் சொற்பொழிவு
வணிகவியற் செய்திகள்

22.05.1994 ஆ. மொழியியல் பண்பாட்டு நிறுவனம்
புதுவைக் கல்வெட்டில் கல்வெட்டுத் தமிழ்

மக்கள் தொலைக்காட்சியில் **ஊர்மணம்** (ஐம்பது தொடர்கள்)

திருச்சிற்றம்பலம் சைவ திங்கள்இதழ் - துணை ஆசிரியர் பணி;
அதில் தொடர்ந்து கட்டுரை :

தொண்டை நாட்டுத் திருமுறைத் தலங்கள்

புதுவை வானம்பாடி - பல்சுவைத் திங்கள் இதழில்
திசம்பர் 2004 இல் இருந்து தொடர்நது

சிலைகள் சொல்லும் வரலாறு

தஞ்சைப் பல்கலைக்கழகம் - தமிழகத் தொல்லியல் கழகம்

ஆவணம் ஆண்டு இதழ் :

2002 வாகூர் பற்றிய கல்வெட்டுகள்

2003 இராம்பாக்கம் கல்வெட்டுகள்

2004 பாக்கம் கல்வெட்டுகள்

2005 தாதாபுரம் மாணிக்கேஸ்வரம் கல்வெட்டுகள்

2006 தாதாபுரம் பெருமாள் கோயில் கல்வெட்டுகள்

2007 சிறுவந்தாடு கல்வெட்டுகள்

2008 திருப்பனந்தாள் காசித் திருமடமும்

சிங்கிரி கோயில் கல்வெட்டுகள் களம்பூர் கோவிந்தசாமி அடிகளார் அறக்கட்டளையும் இணைந்து நடத்திய திருநாவுக்கரசர் ஆய்வு மாநாட்டில் காசிக்குச் சென்று கட்டுரை படித்தது.

2003 ஆய்வு மலரில் : நாவுக்கரசரில் இசைக்கருவிகள்

திசம்பர் 2005இல் சுந்தரர் ஆய்வு மாநாட்டில்
சுந்தரர் தேவாரத்தில் இசைக்கருவிகள் கட்டுரைகள்

மே - 2005 ரிஷிகேசத்தில் நடந்த தமிழ் உணர்த்தும் பக்தி மாநாட்டில் கலந்துகொண்டு
கல்வெட்டு உணர்த்தும் பக்தி

நவம்பர் - 2006
திருப்பனந்தாள் காசித் திருமடம் - மாணிக்க வாசகர் காலம்

தமிழோசை இதழில்

1. திருக்கோயில்களில் திருமுறை விண்ணப்பித்தல்
2, விண்ணகரங்களில்

வெள்ளி : டச்சுக்காரர்களுக்கு 1658இல் தஞ்சை விஜயராகவ நாயக்கர் அளித்த பட்டயமும், 1676இல் ஏக்கோஜி அளித்த பட்டயமும் வெள்ளித் தகடுகளில் பொறிக்கப் பெற்றிருந்தன. அவை, ஜாக்கர்த்தா நகர்ப் பொருட்காட்சிச் சாலையில் இருக்கின்றன. (தென்னிந்திய வரலாறு பக்கம் - 26)

❖ ❖ ❖